
கல்கி
KALKI
12-3-1961
30
காசு

கல்கி பொருளடக்கம்

சார்வரி, மாசி 29 ※ மார்ச் 12, 1961

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே



புகையிலையின் உற்பத்தி, உபயோகம், ஏற்றுமதி இவைகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும், சீனாவும் இந்தியாவுமே தலைமை வகிக்கின்றன. இன்று உலகிலேயே புகையிலை விளைச்சலில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் அடுத்தபடியாக மூன்றாவது ஸ்தானம் பெற்றிருப்பது இந்தியா தான். பதப்படுத்தப்பட்ட வர்ஜீனியா புகையிலையின் ஏற்றுமதி 1959—ல் பிற நாட்டு நாணயச் செலாவணியாக 16 கோடி ரூபாய்க்குச் சற்று அதிகமாக இந்தியாவுக்குத் தேடித் தந்தது.

புகையிலையின் வரலாறு... 7



பனாமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

GOLDEN TOBACCO COMPANY PRIVATE LTD.
பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT.707 TM

Greens' Advtg.



மலர் 20 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 32

கருணையற்ற பட்ஜெட்

மத்திய சர்க்காரின் பட்ஜெட் நாம் எச்சரிக்கை செய்து கொண்டு வந்தாற் போல ஏழை மக்களையும் நடுத்தர வர்க்கத்தாரையும் கசக்கிப் பிழியும் கருணையற்ற பட்ஜெட்டாகவே வெளிவந்துள்ளது. ஏழை மக்கள் தங்கள் அற்ப வருமானத்துக்குள் வாங்கி வாழ்க்கை நடத்தும் பண்டங்கள் மீதெல்லாம் வரிகள் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. காப்பிக் கொட்டை, தீப்பெட்டி, மண்ணெண்ணெய், துணி வகைகள், தேயிலை, பாக்கு, சாம்பார்ப் பண்டங்கள் முதலிய பல பொருள்கள் மீது வரிகளை உயர்த்தி நிதி மந்திரி அறுபத்து மூன்று கோடி ரூபாய் திரட்டப் போகிறார். எல்லாப் பண்டங்களும் தொத்து வியாதி பிடித்தாற்போல் விலை ஏறுவது நிச்சயம்.

அதனால் சென்ற வருஷத்தை விட இந்த வருஷம் ஏழை மக்களும் நடுத்தர மக்களும், தங்களுக்கு வருகிற வருமானம் போதாமல் சங்கடப்படப் போகிறார்கள். ஆனால் சங்கங்கள் அமைத்துக் கொண்டு, கட்டுப்பாடாக இயங்கும் தொழிலாளி வர்க்கத்தினர், வேலைநிறுத்தம் முதலிய கிளர்ச்சிகள் நடத்தித் தங்கள் செலவுக்கு ஏற்ப வருவாயைப் பெருக்கிக் கொள்ள வழி பார்ப்பார்கள். கோடிக்கணக்கான ஏழை விவசாய மக்களும் நிரந்தரமான வருமானமுள்ள மத்தியதர மக்களும்தான் விலைவாசி உயர்வைச் சமாளிக்க முடியாமல் திணறப் போகிறார்கள்.

இந்த பட்ஜெட்டை பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற பெரும் நகரங்களிலுள்ள மார்க்கெட்டுகள் எப்படி வரவேற்றிருக்கின்றன என்பதைப் பார்த்தால் ஒரு விஷயம் தெளிவாகி விடும். அதாவது, இது பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக்க வந்த பட்ஜெட் என்பது புரிந்து விடும். மேற்கூறிய பெரு நகரங்களிலுள்ள மார்க்கெட்டுகள் எல்லாம், இந்தப் பட்ஜெட்டை உற்சாகமாக வரவேற்கின்றன. ஏனெனில் அவர்களைப் பாதிக்கும் கடும் வரிகள் ஒன்றும் கிடையாது. உள்ளவை யாவும் ஏழைகளையே பாதிக்கும் மறைமுக வரிகளாக இருப்பதால் மார்க்கெட் முதலாளிகள் மகிழ்ச்சிப் பூரிப்பில் இருக்கிறார்கள். இதுதான் ஏழைகளுக்காக இரங்கும் காங்கிரஸ் கட்சியின் பட்ஜெட்!

அடுத்த வருஷம் தேர்தலிருக்கும்போது, இப்படி ஏழைகளை மட்டுமே பாதிக்கும் பட்ஜெட்டைச் சமர்ப்பித்த நிதிமந்திரியின் துணிச்சலைப் பலர் பெரிதும் பாராட்டியிருக்கிறார்கள். ஏழைகளின் வோட்டுப் போய்விடுமே என்று அஞ்சாமல் வரி விதித்திருக்கிறாரே என்று பேசுகிறார்கள். பணக்காரர்களுக்குச் சலுகையும், கொள்ளை லாபம் சம்பாதிப்பதற்கு வாய்ப்பும் அளித்து விட்டால், அவர்களிடமிருந்து தேர்தல் நிதியைச் சுலபமாகத் திரட்டிக் கொண்டு, ஏழைகளின் வோட்டைப் பணம் கொடுத்து வாங்கிவிடலாம் என்ற தைரியத்தில்தான் இந்த ஆண்டு இத்தகைய பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கிறார்.

இந்தப் புது வரிகள் மூலம் கசக்கிப் பிழிந்து வசூலிக்கும் பணமும், சர்க்கார் எந்த நோக்கத்தோடு வசூலிக்கிறார்களோ, அந்த நோக்கத்துக்குப் பயன்படாது. விலைவாசி உயர்வின் காரணமாகவும், தொழிலாளர் கூலி உயர்வின் காரணமாகவும், அமுல் நடத்தும் திட்டங்களின் செலவே குறிப்பிட்ட தொகைக்கு மேல் போய்விடும். அந்தச் செலவினத்தை இட்டு நிரப்பப் புது வரி மூலம் வசூலிக்கும் பணம் சரியாகிப் போய்விடும். கடைசியில் உண்மையில் நல்ல லாபம் சம்பாதிப்பவர்கள் சர்க்கார் திட்டங்களை ஏற்று நடத்தும் கண்டிராக்டர்கள்தான்.

இவ்வருஷம் ராஜ்யங்களெல்லாம் துண்டு விழும் பட்ஜெட்டுகளாகவே சமர்ப்பித்துள்ளன. துண்டு விழும் தொகையை இட்டு நிரப்பப் பெரும்பாலான ராஜ்ய சர்க்கார்கள் வழி ஒன்றும் வகுத்துக் கொள்ளவில்லை. அதாவது புது வரிகள் ஒன்றும் போடவில்லை. மத்திய சர்க்காரிடம் கேட்டு, துண்டு விழும் தொகைகளை ஈடு கட்டிக் கொள்ளப் போகின்றன. அதாவது மத்திய சர்க்கார் வசமுள்ள நாசிக் அச்சுக்கூடத்தில் அச்சாகும் காகிதப் பணத்தைக் கொண்டு பற்றாக் குறையை நிரப்பப் போகின்றன. ஆக, மத்திய சர்க்காரின் வரித் திட்டங்கள் மூலமாகவும் பணவீக்கம் மூலமாகவும் விலைவாசிகளை உயர்த்தி மக்கள் வாழ்வைச் சென்ற ஆண்டை விட மிகக் கடுமையான கஷ்ட வாழ்வாக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் வருஷமே இப்படி இருக்கப் போகிறது என்றால் அடுத்த நான்கு ஆண்டுகள் இன்னும் எவ்வளவு கடுமையாக இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

என்ன சேதி?

பத்திரிகைகளுக்கு ஓர் அடி

இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் மீது விதிக்கப்படும் வரிகள் இரண்டு விதத்தில் இருக்கும். ஒன்று, பொருள்களின் எடை, பரிமாணம் ஆகியவற்றின் மீது கணக்கிடப்பட்டு வரி வசூலிப்பது. இரண்டாவது, பொருள்களின் மதிப்புக்குத் தக்கபடி சதவிகிதக் கணக்கில் வசூலிப்பது. விலை குறைவாகவும் எடை அதிகமாகவும் உள்ள பொருள்கள் மீது எடை கணக்கில் வசூலிக்கும் முறை சர்க்காருக்கு லாபகரமானது. மதிப்பு அதிகமாகவும் எடை குறைவாகவும் உள்ள பொருள்கள் மீது விலைக்குத் தகுந்தபடி சதவீதக் கணக்கில் சுங்கவரி வசூலிப்பது லாபம். இவ்விரண்டு முறைகளையும் சர்க்கார் தங்களுக்குச் சாதகமாக இருக்கும்படி அவ்வப்போது மாற்றி மாற்றி அமைத்துக் கொள்ளுவார்கள்.

இதற்கு உதாரணம் இவ்வாண்டு பட்ஜெட்டில் விதிக்கப்பட்டிருக்கும் பத்திரிகைக்காகித (newsprint) வரி. இறக்குமதி செய்யப்படும் பத்திரிகைக் காகிதத்தின் மீது இதுவரையில் எடைக் கணக்கில் டன்னுக்கு 32 ரூபாய் விதம் சுங்க வரி வசூலித்து வந்தது அரசாங்கம். இதை இப்போது மதிப்பு அடிப்படையில் மாற்றி 10 சதவீதம் வசூலிக்கத் திரு மொரார்ஜி திட்டமிட்டிருக்கிறார்.

கடந்த பத்தாண்டு காலத்தில் பொதுவாக நியூஸ் பிரிண்ட்டின் விலை ஆறு மடங்கு உயர்ந்திருக்கிறது. அதிக விலை ஆனாலும் பத்திரிகைகள், தொழிலை நடத்தப் பத்திரிகைக் காகிதம் தருவிக்க வேண்டியிருக்கிறது. எடைக் கணக்கில் வசூலிக்கப்பட்ட சுங்கவரியை இப்போது மதிப்பு அடிப்படையில் மாற்றுவதன் மூலம் முன்னர் டன்னுக்கு 32 ரூபாய் கொடுக்கப்பட்ட வரி இப்போது 80 ரூபாயாக உயருகிறது. அதாவது இந்த ஓர் இனத்தில் மட்டும் வரியின் உயர்வு 150 சதவிகிதம் ஆகிறது. ஏற்கனவே விலை உயர்ந்துள்ள ஒரு பொருளின் மீது இறக்குமதிச் சுங்க வரியையும் இரண்டரை மடங்காக்கினால், பத்திரிகைகள் இந்தச் சுமையை எவ்வாறு தாங்க முடியும்?

இம்மாதிரி ஒரு நடவடிக்கை எடுக்க 1957ம் ஆண்டிலேயே முயற்சி செய்யப்பட்டது. ஆனால் இதன் விளைவுகளைச் சீர்தூக்கிப் பார்த்துப் பத்திரிகைத் தொழிலின் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு இந்த முயற்சி கைவிடப்பட்டது. ஆனால் என்ன காரணத்தினாலோ இப்போது இது மீண்டும் மேற்கொள்ளப்படுகிறது.


பத்திரிகைக் காகிதத்தின் மீது 150 சதவீதம் வரி அதிகமாக்கியிருக்கிறது என்று பகிரங்கமாகச் சொன்னால் ஒருகால் பலத்த எதிர்ப்பு இருக்குமோ என்று

அறிவிப்பு

கல்கி காரியாலயத்தில் டெலிபோன் ஆபரேட்டராகவும், க்ளியரிங் (Clearing) கிளார்க்காகவும் இருந்த கே. எஸ். பலராமன் என்பவர் சென்ற பிப்ரவரி 28-ம் தேதியிலிருந்து கல்கி காரியாலயத்தில் வேலையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

— மானேஜர், கல்கி, கீழ்ப்பாக்கம், சென்னை - 10

சேதி தெரியுமா?



பயணவரி? வரி
தால் வரி
தேயிலை வரி
கோப்பி வரி
பாக்கு வரி
60 கோடிரூபாய்
மக்கள்
மூன்றுவருடதிட்டம்
1961-62 ஆண்டு காணிக்கை
நாடெங்கும் ஹோலிப் பண்டிகை கொண்டாடப் பட்டது!
நிர்வாக ஊழல் சேறு
யாழ்ப் பாணத்தில்!
யாழ் பாணம்
இலங்கைத் தமிழ்மக்கள்
இலங்கை சர்க்கார்
மக்களின் சாபங்கள்
வரிகள்
நிதி மந்திரி
மக்கள்

இப்படி முககால் மறைவு, [முழுமறை வான முறையில் வரிவிதித்தை மாற்று கிறார் நிதி அமைச்சர். எப்படியிருந்தா லும் வரிச் சுமை குறைந்து விடுமா?

இப்போதே பத்திரிகைகள் யாவும் தொட்டதும் விட்டதுமான நிலையில் தான் நடந்து வருகின்றன. அதோடு வரி உயர்வால் பெரிய பத்திரிகைகளே மிகவும் பாதிக்கப்படுகின்றன என்றும், சிறிய பத்திரிகைகளைப் பற்றியும், வாரப் பத்திரிகைகளைப் பற்றியும் சொல்லவே வேண்டியதில்லை. அவைகளின் கதி அதோகதிதான்.

பத்திரிகைத் தொழிலைப் பாதிக்கும் இவ்வரியை எல்லாப் பத்திரிகைகளும் ஒருமுகமாக எதிர்த்து இதுவரையிலிருந்த நிலைமையையே நீடிக்குமாறு வற்புறுத்த வேண்டியது அவசியம்.

வறுமைக்குச் சலுகை

பள்ளி மாணவர்களுக்கு வழங்கப் படும் இலவசக் கல்வி போன்ற சலுகை களை வகுப்புவாரி அடிப்படையில் இரா மல் பொருளாதார அடிப்படையில் அளிக்கச் சென்னை அரசாங்கம் தீர் மானித்திருப்பதை மக்கள் பாராட்டு வார்கள். வறுமை காரணமாக எந்த மாணவனும் தனது படிப்பு தடைப் பட்டு விட்டது என்று கருத இடமில்லா மல் ஒரு சமூகம் இயங்கினால் அது வர வேற்கத் தக்கது. இந்த உயர் லட்சி யத்தை நோக்கிச் செல்ல மேற்கொள்ளப் படும் நடவடிக்கைகளில் இப்போது எடுத்துக் கொண்டுள்ளது முதலாவ தாகும் என்று கல்வி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் கூறியது இவ்வளவு ஆண்டுகளாக அநீதிக்குள்ளான பகுதி யினருக்கு ஆறுதலாக இருக்கும். செயல் முறையிலும்கூட இதே உறுதியுடன் நடவடிக்கைகள் நிகழும்படி பார்த்துக் கொண்டால் நன்மை வளரும்.

பூசலுக்குப் பரிசா?

'**உ**த்தரப் பிரதேச [காங்கிரஸில் கோஷ்டிப் பூசலா? சரி, எதிர்க் கோஷ்டி யினரையும் மந்திரி சபையில் பிடித்துப் போட்டுச் சரிக்கட்டு. மைசூர் காங்கிர ஸில் பிளவா? யோசிக்க வேண்டாம். எதிர்ப்பாளரையும் அமைச்சர் குழுவில் சேர்த்துக் கொண்டு 'தாஜா' செய்து விடு. ஆந்திரா காங்கிரஸிலும் கட்சி—பிரதி கட்சியா? தயக்கமேன்? சண்டை யிடுபவர்கள் நாலு பேரை மந்திரியாக்கி விட்டால் போயிற்று! பீஹார் முதன் மந்திரி காலமாகி, அங்கும் கட்சிக்குள் பிரிவினை மனப் போக்குகள் வெளியா கின்றனவா? வேறு வழியே யில்லை. மந்திரி சபையை மாற்றி அமைக்க

சுதந்திர நிதி

கல்கியில் ராஜாஜி அவர்கள் விடுத்திருந்த வேண்டுகோளுக்கு இணங்கிக் கீழ்க்கண்ட அன்பர்கள் சுதந்திர நிதிக்குப் பொருளுதவி செய்திருக்கிறார்கள்.
(20-2-61 தேதி முதல் 2-3-61 முடிய)

ஸ்ரீமதி எம்.கே. வெங்கடராமன்	5	00
நாராயணன் ...	1	00
கே. ஆறுமுகம் ...	1	00
ஜி. கணபதி நாடார் ...	2	00
ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி சுவாமிநாதன்	5	00
ஸ்ரீமதி எஸ். ருக்மிணி ...	10	00
வி. ஆர். சுந்தரேச அய்யர் ...	15	00
பி. கே. சீதாராம பட் ...	5	00
ஈ. ஆராவமுதன் ...	5	00
எஸ். வேணுகோபாலன் ...	2	00
ஏ. வெங்கடராமன் ...	2	00
ஆர். தங்கம்மாள் ...	2	00
ராஜாஜிதாஸன் ...	5	00
எஸ். டி. ரங்கசாமி அய்யங்கார்	3	00
பி. டி. சுப்பராஜு ...	101	00
எஸ். சுகந்தி, எஸ். கிருஷ்ணசாமி ...	4	00
ஏ. ஆர். கிருஷ்ணன் ...	1	00
அன்பர் காந்தி நகர் ...	5	00
அன்பர், எழும்பூர் ...	100	00
ஆர். எஸ். ரத்தினம் ...	2	00
ஆர். வெங்கடசாமி நாயுடு ...	10	00
ஸ்ரீமதி விஜயலட்சுமி ...	1	00
ஸ்ரீமதி சினம்மாள் ...	1	00
குலமங்கலம் கிருஷ்ணமூர்த்தி...	2	00
ஸ்ரீமதி கமலம் சுப்பிரமணியம்...	25	00
கோவிந்தராஜு பிள்ளை ...	10	00
எஸ். தர்மராஜய்யர் ...	7	00
டி. முத்துகிருஷ்ணன் ...	3	00
எஸ். கந்தசாமி ...	1	00
ஆர். கணேசய்யர் ...	1	00
எஸ். ஆர். சுவாமிநாதன் ...	1	00
ஆர். கிருஷ்ணசாமி அய்யர் ...	1	00
எஸ். ராஜமாணிக்கம் ...	1	00
டாக்டர் வி. வி. நாகநாதன் ...	25	00
எஸ். சீதாராமன் ...	5	00
எஸ். ஆர். மீனாட்சி ...	5	00
ஆர். சுப்பிரமணிய அய்யர் ...	3	00
ஆர். வி. அய்யர் ...	1	00
எஸ். வி. மணி ...	1	00
பெங்களூர் அன்பர் ...	10	00
ஸ்ரீமதி துளசி அம்மாள் ...	2	00
ஸ்ரீமதி சுசீலா மூர்த்தி ...	2	00
நாக்பூர் அன்பர் ...	1	00
லக்ஷ்மிசந்த் பந்த்சாலி ...	11	00
10-1-61 முதல் 19-2-61 முடிய	1413	27
மொத்தம் வரவு	1819	27

வேண்டியதுதான்.'—இதுதான் காங்கிரஸ் கட்சியின் ஒற்றுமைப் படலம். சச்சரவு செய்பவர்களுக்கெல்லாம் மந்திரி பதவியைச் சன்மானமாக வழங்கி வருகிறார்கள் ஆளுங் கட்சியினர், பதவி தம் வசம் இருப்பதால்.

கட்சியினரின் வேற்றுமைகளைப் பூசிமெழுகுவதற்காகவே இவ்வாறு மந்திரி சபைகள் விஸ்தரிக்கப் படுகின்றன. ஆனால் இந்தப் புதிய மந்திரிமார்களின் சம்பளம், வீட்டு—வாகனப் படிகள், பிரசித்தி பெற்ற பிரயாணச் செலவுகள் இவை கட்சியின் கஜானாவிலிருந்து வரவில்லை; அரசியல் கட்சி ஒன்றுக்குள் நிலவும் பதவிப் பித்துக்காகப் பொது மக்கள் அளிக்கும் வரிப்பணம் தான் விரயமாக்கப்படுகிறது.

பூசலிடுவதின் இத்தனை ஆதாயம் இருக்கிறது என்று கண்டபின், அந்தக் கட்சியில் ஒற்றுமை எப்படி நிலவ முடியும்?

விசித்திரக் கொள்கை

கூட்டுறவு விவசாயம் உருப்படாத முறை என்பதை எடுத்துச் சொல்லுபவர்கள் பல காரணங்கள் காட்டுகின்றனர். அவற்றில் ஒன்று அரசாங்கத்தின் தலையீடும் நிர்ப்பந்தமும் நிர்வாகத்தில் எப்போதும் இருந்து கொண்டே வரும் என்பது. இதற்கு ஒரு நிரூபணம் சென்றவாரம் ராஜ்ய சபையில் ஓர் அங்கத்தினரின் கேள்விக்குக் கிடைத்த ருசிகரமான பதில். வெளியூர்களில் வசிக்கும் பட்டாதார்களையும், பெரிய பட்டாதார்களையும் பண்ணையில் நேரடியாகவோ, அல்லது அது சம்பந்தப் பட்ட இதர அலுவல்களிலோ வேலை செய்ய இயலாதவர்களையும் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்த்துக் கொள்ளக் கூடாதாம். இதுதான் சர்க்காரின் கொள்கையாம். இதைக் கடைப் பிடிக்கும்படி ராஜ்ய சர்க்கார்களுக்கு மத்திய அரசாங்கம் தெரிவித்திருக்கிறதாம். இவ்விதிக்கு விலக்காகச் சர்க்கார் ஊழியர்களும் அங்கஹீனர்களும், வயோதிகர்களும் மட்டும் சங்கங்களில் சேர அனுமதிக்கப்படுவார்களாம்.

இந்த விசித்திரமான கொள்கைக்கு விளக்கம் தேவையே இல்லை. ஒரு சாராருக்குக் காட்டப்படும் சலுகையும், விலக்கும் மற்றொரு சாராருக்கு அளிக்கப்படாதது அநீதி என்பது வெளிப்படை. கூட்டுறவு விவசாய முறையினால் ஏதாவது அனுகூலம் ஏற்படுவதானால், அது கிராமங்களிலேயே தங்கி வேலை பார்த்தால் கட்டுப்படி ஆகாது என்ற சிறுநிலக்காரர்களுக்குத்தான் கிடைக்க வேண்டும். இவர்களை நீக்கிவிட்டால் கூட்டுறவு பற்றிப் பேசிப் பயன் என்ன? பெரிய நிலச்சுவான்தார்கள், உச்சவரம்புச் சட்டத்தினால் சிறு நிலச்சுவான்தார்களாக ஆகி விட்டார்கள். இதனால் அவர்கள் அடைந்துள்ள கஷ்டங்கள் அதிகம். அவர்கள் கூட்டுறவு முறையில் சுயேச்சையாகச் சேருவதானால், அதை ஏன் தடை செய்ய வேண்டும்? இஷ்ட பூர்வமான கூட்டுறவு, சேவா கூட்டுறவு, சுயேச்சையுடன் செயலாற்றும் கூட்டுறவு, சர்க்கார் நிர்ப்பந்தமும் தலையீடும் இல்லாத கூட்டுறவு என்பன எவ்வளவு அர்த்தமற்றவை என்பது இப்போது தெரிகிறதல்லவா?



சைவமும், தமிழும், பக்தியும், சமூகநலனும் செழிக்க அரும் பணியாற்றிவரும் தருமபுர ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளுக்குத் தருமபுரத்தில் பக்தர்களின் பெருமுயற்சியினால் மார்ச்சு மாதம் 12 ந் தேதி கனகாபிஷேக விழா நடக்கவிருக்கிறது. இந்தக் கனகாபிஷேக பூஜையைத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் நிகழ்த்துவார்கள். அன்று மாலை மத்திய அரசாங்க மந்திரி டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் தலைமையில் மகா சன்னிதானத்துக்குப் பாராட்டுக் கூட்டம் ஒன்றும் நடைபெறும். திரு பி. டி. ராஜன், நீதிபதி சோமசுந்தரம் போன்ற பல பிரமுகர்கள் இவ்விழாவினில் பங்கெடுத்துக் கொள்ளுவார்கள். அன்பர்களனைவரும் விஜயம்செய்து விழாவினைச் சிறப்பிக்கக் கோருகிறோம்.

ரஸிக ரஞ்ஜன சபா

(ரிஜிஸ்டர்டு)

10, மகாராஜா நந்தகுமார் ரோடு, கல்கத்தா-29

ஸ்ரீ தியாகராஜ சுவாமி 114வது ஆண்டு விழா

11-3-1961 முதல் 19-3-1961 வரை

கல்கத்தா நேஷனல் ஹைஸ்கூல்
கட்டிட உதவி நிதிக்காக

சங்கீதக் கச்சேரிகளும், நடன கச்சேரிகளும்

நிகழ்ச்சி நிரல் (D. V.)

11-3-61 சனி மாலே 5 மணிக்கு

செம்மங்குடி ஸ்ரீநிவாச அய்யர் - பாட்டு
லால்குடி ஜி. ஜெயராமன் - வயலின்
பாலக்காடு டி.எஸ் மணி அய்யர் - மிருதங்கம்

12-3-61 ஞாயிறு மாலே 4-25 மணிக்கு

மதுரை மணி அய்யர் - பாட்டு
லால்குடி ஜி. ஜெயராமன் - வயலின்
பாலக்காடு டி.எஸ். மணி அய்யர் - மிருதங்கம்

13-3-61 திங்கள் மாலே 7 மணிக்கு

பண்டிட் ரவி சங்கர் & பார்ட்டி - சிதார்

14-3-61 செவ்வாய் மாலே 7 மணிக்கு

ஆலத்தூர் சகோதரர்கள் - பாட்டு
டி. என். கிருஷ்ணன் - வயலின
பாலக்காடு ஆர். ரகு - மிருதங்கம்
மாஸ்டர் விநாயகராமன் - கடம்

15-3-61 புதன் மாலே 7 மணிக்கு

டி. கே. பட்டம்மாள் & பார்ட்டி - பாட்டு

16-3-61 வியாழன் மாலே 7 மணிக்கு

எம். டி. ராமநாதன் - பாட்டு
டி. என். கிருஷ்ணன் - வயலின்
பாலக்காடு ஆர். ரகு - மிருதங்கம்
மாஸ்டர் விநாயகராமன் - கடம்

17-3-61 வெள்ளி மாலே 7 மணிக்கு

டி. ஆர். விஸ்வநாதன் & பார்ட்டி
புல்லாங்குழல்

18-3-61 சனி மாலே 5 மணிக்கு

எம். எஸ். சுப்புலக்ஷ்மி - பாட்டு
திருவாலங்காடு சுந்தரேசய்யர் - வயலின்
டி. கே. மூர்த்தி - மிருதங்கம்
கோதண்டராம அய்யர் - கடம்

19-3-61 ஞாயிறு மாலே 6 மணிக்கு

குமாரி யாமினி கிருஷ்ணமூர்த்தி & பார்ட்டி
பரதநாட்டியம் & குச்சிபூடி நடனம்

சீஸன் டிக்கெட்டுகள்

மெம்பர்கள் நபருக்கு	ரூ.	1.00
மெம்பரல்லாதவர்கள் நபருக்கு	ரூ.	15.00
சிறுவர்கள் நபர் ஒன்றுக்கு	ரூ.	5.00

ராஜா பஸந்த்ராய் ரோடிலுள்ள சபாவின் மனையில் அமைத்துள்ள விசேஷ பந்தலில்

எஸ். அனந்தராமன், கௌரவ காரியதரிசி

தொழில் விற்பன்னர்களுக்கு சேவை செய்ய

துளையிடுதல்
தட்டி நீட்டுதல்
கத்தறித்தல்
வார்ப்பு வேலே
பற்ற வைத்தல்
கடைசல்

மற்றும் பதப்படுத்தும் வேலேகளில் உதவுவோம்

★

தயாரிப்புகள் :

பித்தளே & ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டிபன் செட், டவரா முதலிய பாத்திரங்களும், வில் காக்குகள், திருகு குழாய்கள், மெஷின் ஸ்குருகள்

மற்றும் இதைச் சார்ந்த எஞ்ஜினியரிங் சாதனங்கள்

★

அணுகுக:

சூப்பரின்டென்டெண்ட்

பித்தளே சாமான் மற்றும் கட்லரி தொழிலுக்கான அரசினர் சேவை நிலேயம், கும்பகோணம்

GOVT. SERVICE CENTRE FOR BRASSWARE & CUTLERY INDUSTRY
KUMBAKONAM

62

நாம் அடைந்த நல் அரண்
நமக்கு என்று, நல் அமரர்
தீமை செய்யும் வல் அசுரரை
அஞ்சிச் சென்று அடைந்தால்,
காமரூபம் கொண்டு, எழுந்து,
அளிப்பான் திருமோகூர்
நாமமே நவின்று, எண்ணுமின்,
ஏத்துமின், நமர்காள்!

தேவர்கள் தம் விரோதிகளாகிய அசுரர்களின் தீமையிலிருந்து தப்புவதற்கு எவனைக் காப்பாகக் கொண்டு காப்பாற்றப்பட்டார்களோ, அவன் திருமோகூரில் எழுந்தருளியிருக்கிறான். அவனை தியானித்து, பெயர்கள் சொல்லித் துதியுங்கள் என்கிறார்.

மக்களுக்கு முக்கியமாக ஆழ்வார் உபதேசிப்பது இறைவனைக் கோயில்களிலுள்ள மூர்த்திகளின் மூலம் மனக் கண்ணில் தரிசனம் பெற்று உய்யுங்கள். அவனைக் காணவில்லையே என்று ஏக்கம் கொள்ளாதீர்கள். அவன் ஒவ்வொரு கோயிலிலும் பக்தர்களுக்குத் தரிசனம் தருகிறான். பக்தி செலுத்தாமல், காணவில்லையே என்று மோசம் போகாதீர்கள் என்பது.

காமரூபம்—விரும்பிய வடிவம்.

* * *

திருவனந்தபுரமாகிய திவ்விய தலத்தில் சயனித்தபடி தரிசனம் தரும் எம்பெருமானைப் பாடுகிறார்.

கேசவா என்று ஒரு முறை சொல்லவே இடராய எல்லாம் கெடும். எல்லாத் துன்பங்களும் அழிந்து போகும்; கொடிய எமதூதர்களைப் பற்றிப் பயப்பட வேண்டியதில்லை; அவர்கள் கிட்ட வரமாட்டார்கள்; ஆதிசேஷ சயனத்தில் அறிதுயில் செய்கின்ற எம்பெருமானுடைய தரிசனம் பெறத் திருவனந்தபுரம் செல்வோம் என்கிறார்.

கெடும் இடர் ஆய எல்லாம்,
கேசவா! என்ன; நாளும்
கொடுவினை செய்யும் கூற்றின்
தமர்களும் குறுககில்லார்;
விடம் உடை அரவில் பள்ளி
விரும்பினான் சுரும்பு அலற்றும்
தடம் உடை வயல் அனந்தபுர
நகர் புகுதும் இன்றே.

கேசவன் என்றால் கிலேசத்தைப் போக்குகிறவன் என்பது மகாபாரதம்.

சுரும்பு அலற்றும் தடம்—வண்டுகள் ஒலிக்கின்ற தடாகங்கள்.

வயல் அனந்தபுர நகர் — வயல்கள் சூழ்ந்த திருவனந்தபுரம்.

* * *

ஒரு நாள் பூஜித்தால் ஏழு ஜன்மங்களிலும் ஒரு துன்பமும் நெருங்காமல் காக்கப்படுவீர். திருவனந்தபுரத்தில் எம்பெருமானுடைய திருப்பெயர்களில் ஒரு பெயரைச் சொல்லித் துதித்தால் ஆயிரம் திருப்பெயர்களைச் சொன்ன பயனை அடைவீர். அவனைத் தியானித்தவர்கள் பரமபதமே அடைவார்கள்.

இன்று போய்ப் புகுதிராகில்,
எழுமையும் ஏதம் சாரா:
குன்று நேர் மாடம் மாடே குருந்து
சேர் செருந்தி, புன்னை,
மன்று அலர் பொழில் அனந்தபுர
நகர் மாயன் நாமம்
ஒன்றும் ஓர் ஆயிரமாம்;
உள்ளுவார்க்கு உம்பர் ஊரே.

குன்று நேர்—மலைகளை யொத்த, மாடு—பக்கம், குருந்து, செருந்தி, புன்னை—மர விசேஷங்கள். மன்று—மன்றல், வாசனை. மன்று அலர் பொழில் — வாசனை பரம்பா நிற்கும் சோலைகள். உம்பர் ஊர் — தேவ லோகம்.

திருவனந்தபுரத்து எம்பெருமானைப் பூஜித்தீராகில் எல்லா நோய்களும் அவைகளுக்குக் காரணமான வினைகளும் தீர்ந்து போகும். இது உறுதி. அநுபவத்தாலே கைகண்ட நான் சொல்லுகிறேன் என்கிறார்.

* * *

“வேதத்துக்கு மேல் சாஸ்திரம் இல்லை, கேசவனுக்கு மேல் தெய்வம்

இல்லை, கையை உயரத் தூக்கிச் சொல்லுகிறேன். சத்தியம், சத்தியம், மீண்டும் சத்தியம்" என்பது வியாச பகவான் வாக்கியம்.

"நாம் அறியச் சொன்னோம்"— அதாவது "என்மேல் குறை அற நான் சொல்லி விட்டேன்" என்கிறார்.

ஊரும் புள்; கொடியும் அஃதே;
உலகு எல்லாம் உண்டு உமிழ்ந்தான்
சேரும் தண் அனந்தபுரம்
சிக்கெனப் புகுதிராகில்,
தீரும் நோய் வினைகள் எல்லாம்
திண்ணம்; நாம் அறியச் சொன்னோம்;
பேரும் ஓர் ஆயிரத்துள்
ஒன்று நீர் பேசுமினே.

ஊரும் புள் கொடியும் அஃதே— கருட வாகனம், கருடக் கொடி.

* * *

கோகுலத்து இடைப் பெண்ணாகப் பாவித்துப் பாடுகிறார்: கண்ணா! உன்னைப் பிரிந்த விரகதாபத்தால் மூங்கில்போன்ற என் கைகள் இரண்டும் மெலிந்து போகின்றனவே. என் விரகதாபத்தைக் கண்டு கொஞ்சமும் இரக்கம் கொள்ளாமல் இந்த அழகிய குயில்கள் சந்தோஷமாகக் கூவுகின்றனவே, கூவி என் விரகதாபத்தை அதிகப்படுத்துகின்றனவே? இந்த மயில் கூட்டங்களும் அவ்வாறே கூடிக் கூடி நடனம் செய்கின்றனவே? நீ பசுக்களை மேய்க்கக் காடு சென்று விட்டாய். ஒரு பகல் ஆயிரம் ஊழிக் காலமாக நீள்கிறதே? நீ எப்போ திரும்பி வருவாய்? ஐயோ! உன் தாமரைக் கண்கள் என் உள்ளத்தைப் பிளக்கின்றனவே! உனக்குக் கருணை என்பது கிடையாது; நீ மிக்க கொடுமைக்காரன் என்று பாடி வருந்துகிறார்.

வேய் மருதோள்-இணை மெலியும்,
ஆலோ!
மெலியும், என் தனிமையும்
யாதும் நோக்காக்
காமரு குயில்களும் கூவும், ஆலோ!
கணமயில் — அவை கலந்து
ஆலும், ஆலோ!
ஆமருவு இனநிரை மேய்க்க நீபோக்கு
ஒரு பகல் ஆயிரம் ஊழி, ஆலோ!
தாமரைக் கண்கள் கொண்டு
ஈர்தி, ஆலோ!
தகவிலை தகவிலையே நீ, கண்ணா!

நீ போக்கு ஒரு பகல்—நீ போகின்ற ஒரு பகல். ஈர்தல்—பிளத்தல். தகவிலை—உனக்குத் தகவு இல்லை. அதாவது நீ இரக்கமற்றவன்.

* * *

நீ மிகக் கொடியவன். உன்னோடு அனுபவித்த இன்ப வெள்ளம் வானைக் கடந்து என் அறிவை அழித்துக் கனவைப் போல் மறைந்து போயிற்று. என் உயிருக்குள் புகுந்து பொறுக்க முடியாத ஆசை நிலையில் என்னை விழுத்துகிறது. நீ இந்தப் பசுக்களை மேய்க்கப் போவது ஒழிக.

தகவிலை தகவிலையே
நீ, கண்ணா!
தடமுலை புணர்தொறும்,
புணர்ச்சிக்கு ஆராச்
சுக வெள்ளம் விசும்பு இறந்து,
அறிவை மூழ்கச்
சூழ்ந்து, அது கனவு என
நீங்கி, ஆங்கே
அக உயிர் அகம்—அகம்தோறும்
உள் புக்கு,
ஆவியின்பரம் அல்ல வேட்கை,
அந்தோ!
மிகமிக இனி உன்னைப் பிரிவை
ஆமால்;
வீவ, நின் பசு-நிரை
மேய்க்கப் போக்கே.

ஆவியின் பரம் அல்ல வேட்கை— இந்த வேட்கை உயிரைக் காட்டிலும் பெரிதாயிருக்கிறது. அதாவது அடக்க முடியவில்லை.

விசும்பு இறந்து - வானைக் கடந்து.
வீவ - ஒழிக.

ஆழ்வாரின் கவிப் பண்பை அடுத்த பாட்டிலும் காணலாம்.

வீவன், நின் பசு - நிரை
மேய்க்கப் போக்கு;
வெவ்வுயிர் கொண்டு எனது
ஆவி வேமால்;
யாவரும் துணை இல்லை;
யான் இருந்து உன்
அஞ்சன மேனியை
ஆட்டம் காணேன்;

போவது அன்று ஒருபகல்,
நீ அகன்றால் ;
பொருகயல் கண் –
இணை நீரும் நில்லா ;

சாவது – இவ் ஆய்க்குலத்து
ஆய்ச்சியோமாய்ப்
பிறந்த இத் தொழுத்தையோம்
தனிமை – தானே.

விளக்கம் - நான் செத்துப்போவேன்.

பசுக்களை மேய்க்கப் போகும் உன்னுடைய காரியத்தால் நான் செத்தே போவேன் என்கிறாள். எனக்கு யாரும் துணையில்லை. உன் அஞ்சன மேனியைக் காணாமல் நான் உயிருடன் இருப்பது எப்படி? நீ இல்லாமல் நான் தனியா யிருப்பது ஒரு பகல் அல்ல, அது முடியாத ஒரு பகல், ஊழியைப்போல் நீள்கிறது.

கண்களில் நீர் பெருகுவது நிற்க வில்லை. நாம் ஆயர் குலத்தில் பெண்களாகப் பிறந்து நாம் அனுபவிக்கும் ஒருதலைக் காதல் பொல்லாதது. அது ஒழிக என்று விரகதாபத்தைப் பொறுக்க முடியாமல் சாபம் இடுகிறாள். பத்து பாசுரங்களும் விரகத்தை வர்ணிக்கும் மிக அழகிய பாசுரங்கள்.

அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்

சோமு

15. பொம்மைக் கொலு!

"இந்தக் கொலு நிலையத்திலே இருக்கும் பொம்மைகள் அனைத்தும் மெழுகினால் செய்யப்பட்டவை!" என்று சொல்லிக் கொண்டே டிக்கெட்டுகளைக் கொடுத்தார் கிருஷ்ணமூர்த்தி.

"மெழுகா?" என்று கேட்டார்கள் வீணைக் கலைஞர் கே. எஸ். நாராயணசுவாமியும் மிருதங்க வித்துவான் பாலக்காடு ரகுவும்.

"ஆமாம்; ஆளும் ஒவ்வொரு பொம்மையும் ஐந்தடி ஆறடி உயரம் இருக்கும். மனிதர்களைப் போலவே நிற்கும்!" என்று சொன்னார் கிருஷ்ணமூர்த்தி.

வீணை நாராயணஸ்வாமியும் ரகுவும் லண்டனுக்கு எப்படி வந்தார்கள் என்று கேட்கிறீர்களா? உலகப் புகழ் பெற்ற வயோலின் கலைஞர் எஹூடி மெனுஹின் என்ற மேதையைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். சென்னைக்குக்கூடச் சில ஆண்டுகளுக்கு முன்பு அவர் வந்திருந்தார். அவருக்கு நம்முடைய வீணையில் அபாரமான ஈடுபாடு! இங்கிலாந்தில் 'பாத்' என்ற அழகான ஊரிலே அவர் ஆண்டுதோறும் ஒரு பெரிய இசைத் திருவிழா நடத்துகிறார். அந்தத் திருவிழாவுக்காக நம்முடைய நாட்டிலிருந்து டாக்டர் நாராயண மேனனையும், கே. எஸ். நாராயணஸ்வாமியையும் வீணை வாசிக்க அழைத்திருந்தார். அவர்களுக்கு மிருதங்கம் வாசிக்கவே பாலக்காடு ரகுவும் அங்கே வந்திருந்தார்.

'மேடாம் டுஸாட்ஸ்' என்னும் பொம்மை நிலையத்தின் படிகளிலே நாங்கள் ஏறினோம். நாலைந்து படிகளைத் தாண்டியதும் வலது புறமும் இடது புறமும் படி வரிசைகள் திரும்பியதால் எங்கே செல்வது என்று எங்களுக்குச் சந்தேகமாகப் போய்விட்டது. அந்தத் திருப்பத்தின் முனையில் நின்ற காவலாளியை நோக்கி நடந்த நாராயணஸ்வாமி அவர்கள் "எந்தப் பக்கமாகத் திரும்ப வேண்டும்?" என்று மெதுவாகக் கேட்டார். பதில் இல்லை. மறுபடியும் கேட்டார்; பதில் இல்லை! மூன்றாம் முறை அவர் சற்று உரக்கவே கேட்க ஆரம்பித்ததும், எனக்குப் பின்னால் நின்ற கிருஷ்ணமூர்த்தி பலமாகச் சிரித்தார். அடுத்த விநாடி நாராயணஸ்வாமியும் சிரித்து விட்டார். அப்பொழுதுதான் ரகுவுக்கும் எனக்கும் விஷயம் புரிந்தது. நாங்களும் 'கொல்' என்று சிரித்தோம்!

நாங்கள் போய் விசாரித்த உருவம் காவலாளி இல்லை! கொலு நிலையத்திலே நாங்கள் பார்த்த முதலாவது பொம்மை அது. ஆறடி உயரத்தில் ஆங்கிலேயக் காவலாளியின் உடையிலே படிக்கட்டின் திருப்பத்தில் கம்பீரமாக நிற்கிறது இந்த முதலாவது பொம்மை. எப்படிப்பட்ட பூதக்கண்ணாடி போட்டவர்களும் ஏமாந்து விடுவார்கள், காவலாளிதான் நிற்கிறான் என்று!


இந்த ரசமான முதல் அனுபவத்தோடு உள்ளே நுழைந்தோம். ஸர் வின்ஸ்டன் சர்ச்சில், புல்கானின், மாக்மிலன் போன்ற தேசத் தலைவர்கள், டயானா டார்ஸ், கெனத்மோர் போன்ற திரைப்பட நட்சத்திரங்கள். மற்றும் உலகப் புகழ்பெற்ற, பெற்றுக் கொண்டிருக்கிற கலைஞர்கள்! முதலாவது வில்லியம் அரசனிலிருந்து இரண்டாம் எலிஸபெத் வரை இங்கிலாந்தின் அரசர்கள் அரசியர்கள்! அமெரிக்க ஜனாதிபதிகள்! எல்லோரும் அரங்கம் அரங்கமாக அவரவருக்கு உரிய இயல்பான உயரத்திலே, கற்றனிலே உடையிலே உயிரோடு நம் முன் நிற்பதுபோல் பொம்மைகள் நிற்கின்றன! இல்லை; பொம்மைகள் நிற்கிறார்கள் என்று சொல்ல வேண்டும். அத்தனை உயர்நிலையோடு மெய்த் தோற்றமாகவே இருக்கிறது அந்தக் காட்சி! முகத்தின் உணர்ச்சியும், மேனியின் நிறவேறுபாட்டுக்கும் சாயலுக்கும் ஏற்ப வர்ணப் பூச்சும், தலையின் கேசமும், கண்களைக் கண்ணாடித் துண்டுகளினால் செய்து பதித்துள்ள நேர்த்தியும் உள்ளத்தை மயக்குகிற அதிசயங்கள்!

"Sleeping Beauty"- தூங்கும் எழில்மங்கை- என்று ஒரு காட்சி. அழகி ஒருத்தி கட்டிலிலே சயனித்திருப்பதுபோல் காட்டியிருக்கிறார்கள். இந்தப் பொம்மை உலகப் புகழ் பெற்றது!

தனித்தனியான பொம்மைகள் தவிர, இங்கிலாந்தின் சரித்திரத்தில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள் பலவற்றை அப்படி அப்படியே பொம்மைகளைக் கொண்டு நாடகக் காட்சி போல் அணி அணியாக நிறுத்தி விருக்கிறார்கள்! ஸ்காட் ராணி மேரியின் மரண தண்டனை, தளபதி நெல்ஸன் பிரபுவின்

மரணம் முதலிய சரித்திரப் பெரு நிகழ்ச்சிகளையெல்லாம் பல பொம்மைகளைக் கொண்டு அரங்கம் அரங்கமாக வைத்துக் காட்டியிருக்கிறார்கள். லண்டன் அரண்மனையிலே உள்ள மகுட அறையில் எலிஸபெத் அரசியோடு எடின்பரோ கோமகனும் மற்றும் அதுபோல் அவர்களின் முன்னோர்களும் நிற்கிற அழகு ஓர் அற்புத அரச பவனியாக இருக்கிறது.

நாங்கள் இந்தப் பொம்மை நிலையத்துக்குச் சென்றபோது உலகப் பிரதமர்களின் வரிசையிலே நமது நேரு அவர்களின் பொம்மை அங்கே இல்லை. அதைச் செப்பனிடுவதற்கு எடுத்துச் சென்றிருப்பதாகக் கூறினார்கள். உலகப் பெரியோர்களின் வரிசையில் மகாத்மாவின் பொம்மையைப் பார்த்தோம். மிகவும் முயற்சி எடுத்தே செய்திருக்கிறார்கள். என்றாலும் மற்றப் பொம்மைகளின் அளவு இந்தப் பொம்மையின் "செய் நேர்த்தி" அமையவில்லை என்பது என் கருத்து. பொதுவாக நம் நாட்டிலுங்கூட மகாத்மாவின் உருவம் சிற்பிகளின் கையில் எளிதில் வசமாகவில்லை என்பதே நம்முடைய அநுபவம் அல்லவா! மற்றப்படி நாங்கள் பார்த்த பல நூறு பொம்மைகளும் பல நூறு அதிசயங்கள் என்று சொன்னால் புகழ்ச்சியில்லை!



'மதாம் துஸாட்ஸ்" நிலையத்தில் உள்ள பொம்மைக் கொலுவின் ஒரு பகுதி: அமெரிக்க ஜனாதிபதிகள்!

அதிசய புரியாகிய இந்தப் பொம்மை நிலையத்தை முதன் முதல் லண்டன் நகரத்தில் நிறுவியவர் மதாம் துஸாட் என்ற பெண்மணி. 1761-ல் பிரான்ஸ் தேசத்தில் பிறந்தவர். பெண்கள் வீட்டுக்குள்ளே ஒதுங்கி வாழ்ந்த காலத்தில் தன்னுடைய தளராத ஊக்கத்தினாலும், அற்புதமான ஆற்றலினாலும் முன்னேறி, என்றுமழியாத விதத்தில் தனதுபெயரை நிலைநிறுத்திக் கொண்ட இந்தப் பெண்மணியின் வாழ்க்கைச் சரித்திரத்தைப் படித்தால் உடம்பு புல்லரிக்கிறது. அவர் வாழ்ந்த காலம் ஐரோப்பாவிலே மிகவும் முக்கியமான பல நிகழ்ச்சிகள் நடந்த வரலாற்று யுகம்! அவர் சிறுமியாக இருந்தபோது பிரெஞ்சு அரசர்களின் வீழ்ச்சியும் பிரெஞ்சுக் குடியரசின் உதயமும் தம் கண்முன் கண்டார். பின்னர் அவர் வயதாகி லண்டன் வந்தபோது பிரிட்டனில் தொழிற் புரட்சி உருவாகி ஒரு புதிய விழிப்பு ஏற்பட்டிருந்தது. இந்த மாபெரும் சரித்திர மாறுதல்களையெல்லாம் தம் தொழிலின் முன்னேற்றத்துக்கும், தமது கலையின் விரிவுக்குமாகப் பயன்படுத்தினார் அவர்! அத்தனை திறமையும் அஞ்சா நெஞ்சமும் அவரிடம் இருந்தன. இவற்றைக்கொண்டு அவர் பட்ட பாடுகள், அவர் அனுபவித்த துன்பங்கள் நூறு கோடி. அந்தக் கலையரசியின் வாழ்க்கை ஒரு வீர காவியம். அவருடைய சாதனை பெண்குலத்தின் வெற்றி.

மரியம்மை என்று பெயர் தாங்கிய சிறுமியின் தந்தை ஒரு போர்வீரர். இந்தப் பெண்மகவு பிறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே தந்தை இறந்துவிட்டார். தாயும் குழந்தையும் தாய்மாமன் வீட்டிலே வாழ்ந்தார்கள். தந்தையை இழந்த சிறுமியைத் தாய்மாமன் மிகவும் அன்போடு வளர்த்து வந்தார். அவர் ஒரு டாக்டர். அவரிடம் பல மாணவர்கள் வைத்தியம் படித்து வந்தார்கள். அந்தக் காலத்தில் வைத்தியம் கற்கும் மாணவர்களுக்கு மனித உடலின் அமைப்பை விளக்குவதற்காக, மெழுகினால் மனித அங்கங்களைச் செய்து, அவற்றை எதிரில் வைத்துக் கொண்டு பாடம் நடத்துவது வழக்கம். மரியின் மாமனுக்கு மெழுகுப் பொம்மைகள் செய்வதில் நல்ல திறமையிருந்ததால், வைத்திய நேரம் போக மற்ற வேளைகளில் மெழுகு வேலை செய்து வந்தார். நாளாக நாளாக, வைத்தியக் கலையை விட மெழுகுக்கலைக்கு அதிகப் புகழ் உண்டாக ஆரம்பித்தது. நண்பர்கள் யோசனையின்பேரில் தமது வீட்டிலேயே ஒரு சிறு அறையில் பொம்மைக் காட்சி நிலையம் ஒன்றைத் திறந்தார். பிரான்ஸ் அரசர் லூயி மன்னரின் தாயாதியான இளவரசர் ஒரு கலைப் பித்தர். அவர் ஒருநாள் இந்த மெழுகுப் பொம்மை நிலையத்துக்கு வந்தார். பொம்மைகளின் அமைப்பைக் கண்டு அதிசயித்தார். பாரிஸ் நகரத்துக்கு வந்தால் தாம் வேண்டிய உதவிகள் செய்வதாகவும் அங்கே ஒரு கலை நிலையமே ஏற்படுத்தலாம் என்றும் கூறினார்.

டாக்டர் பாரிஸ் சென்றார். இளவரசரும் அரச குடும்பத்தினரும், பிரபுக்களும் வழங்கிய பேருதவியினால் கலை நிலையம் நன்கு வளர்ந்தது. வால்டேர், பெஞ்சமின் பிராங்க்ளின் போன்ற புகழ்ச் செல்வர்கள் எல்லாம் வந்து பொம்மை செய்து கொள்ளவுட்கார்ந்தார்கள். சிறுமி மரி மாமனோடு இருந்து இருந்து தானும் இந்தக் கலையை நன்கு கற்று விட்டதால், இந்தப் பெரியோர்களைத் தானே தனது திறமையினால் பொம்மைகளாக உருவாக்கி நிறுத்தினாள். பதினேழு வயதுக்குள் மாமனை விடத் திறமைசாலி யென்று பெயர் எடுத்தாள். மாமன் இவளையே தமது புதல்வியாகச் சுவீகாரம் எடுத்துக் கொண்டார். கலைக் கூடம் கீர்த்தியோடு வளர்ந்து செழித்தது. புகழும் பணமும் நிறைந்தன! ஆனால் இந்தச் சமயத்தில்தான் பிரெஞ்சுப் புரட்சி தேசமெங்கும் புகைய ஆரம்பித்தது. அது பெரு நெருப்பாக மூண்டு எரிந்தபோது, மரியம்மையும் மாமனும் உருவாக்கிய மெழுகுக் கனவு அந்தப் புரட்சி நெருப்பிலே உருகி ஓடித் தீய்ந்து கரிந்தது. இதன் பிறகு அடுக்கடுக்காகத் துயரங்கள்; மரியம்மை சிறை செய்யப் பட்டாள். அங்கே அவள் அடைந்த இன்னல்களும், வேதனைகளும் சொல்லும் தரமல்ல. என்றாலும் உறுதியைத் தளரவிடாமல் பொறுத்துக் கொண்டாள். சரித்திரப் பெருமாறுதல்களின் விளைவாக, பல தலைவர்களின் கொடிய சிரச்சேதங்களுக்குப்பின் மரியம்மை விடுதலை பெற்றாள். சிறைக்கு வெளியே வந்து பார்த்தால் மாமன் மடிந்திருந்தான். உதவி செய்வதற்குரிய உற்றார் உறவினர் யாரும் இல்லை. தன்னந்தனியான நிலையில் என்றும் செல்வது தவறு என்று உணர்ந்து, மாமனின் பழைய நண்பரான துஸாட் என்ற எஞ்சினீயரை மணந்து கொண்டாள். மீண்டும் மெழுகுப் பொம்மைகள் செய்யத் தொடங்கினாள். மீண்டும் பல சோதனைகள்! இப்படிச் சில ஆண்டுகள்!

பாரிஸ் நகரத்தில் அவளுடைய கலைக்கு ஆதரவு குறையவே, தன்னுடைய இரண்டு புதல்வர்களில் மூத்தவனைத் தன்னோடு அழைத்துக் கொண்டு 1802ம் ஆண்டில் லண்டனுக்கு வந்து சேர்ந்தாள். தன்னுடைய கலைக் காட்சியைத் தொடங்கினாள். ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் இங்கிலாந்திலும், ஸ்காட்லாந்திலும், அயர்லாந்திலும் நகரம் நகரமாகச் சென்று கலைக்காட்சி நடத்தினாள். பலமுறை தீக்கு இரையாயின பொம்மைகள்! கப்பலிலே செல்லும்போது கடலில் மூழ்கின அவளுடைய கலைச் செல்வங்கள்! என்றாலும் அந்த வீரக் கலைப் பெண்ணரசி இதயம் இடிந்து விடாமல், மீண்டும் மீண்டும் பொம்மைகள் செய்தாள். கொலுவிலே அடுக்கினாள். முடிவில் 1835ம் ஆண்டு மார்ச் மாதம் 27ந் தேதி லண்டனிலே தனது கலை நிலையத்துக்கு ஒரு நிலையான கட்டடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே பொம்மைக் கொலுவை நிலைநிறுத்தினாள் மரியம்மை என்ற மதாம் துஸாட்! அவள் நிலைநாட்டிய அந்தக் கலை நிலையமே "மதாம் துஸாட்ஸ்" (துஸாட் அம்மையின் உடைமை) என்ற பெயரில் நிலைபெற்றது.

1842இல் மதாம் துஸாட் தன்னுடைய புதல்வர்களிடம் நிலையத்தின் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு ஓய்வெடுத்துக் கொள்ளக் கருதினாள். அப்பொழுது அவளுக்கு வயது 81. கடைசிப் பொம்மையாகத் தனது உருவத்தையே மெழுகினால் செய்து அந்தக் கொலு நிலையத்திலே வைத்தாள். அந்த நிலையத்துக்கு எதிரிலேயே தனக்கு ஒரு வீடும் அமைத்துக் கொண்டாள். தனது பெயரால் நின்று நிலவுகிற அந்தக் காட்சிச்சாலையிலே ஆயிரக்கணக்கான மக்கள் திரள் திரளாகக் கூடுவதைத் தனது வீட்டில் இருந்துகொண்டே பார்த்தவாறு தன் கடைசி நாட்களைக் கழித்தாள் மதாம் துஸாட்.

1850ம் ஆண்டில் அவள் இறந்த பிறகு, புதல்வர்கள் இருவரும் அன்னையின் அருங்கலைக்குத் தொடர்ந்து பணி புரிந்தார்கள். நாளும் புதிய பொம்மைகள் செய்தார்கள். 1884ம் ஆண்டிலே இப்பொழுதுள்ள இடத்தில் புதிய கட்டடம் பெரிதாகக் கட்டிக் கலை நிலையத்தை விரிவு செய்தார்கள். அவர்களுடைய பிள்ளைகள், பேரர்கள், அவர்களின் பிள்ளைகள் என்று வழி வழியாக இந்தக் கலைக்கூடம் தொடர்ந்து நிலவி வந்தது. எனினும், துயரங்கள் தீர்ந்து விடவில்லை. 1925ல் ஒருமுறை இங்கே தீப் பிடித்தது. நூற்று ஐம்பது ஆண்டுகளாகப் பாதுகாத்து வந்த அரிய பொம்மைகள் உருகி ஓடின. எனினும் பழைய அச்சுகள் பத்திரமாக இருந்ததால் மீண்டும் பழைய உருவங்களைப் புதிதாகச் செய்து நிறுத்தினார்கள். சில ஆண்டுகளில் மறுபடியும் ஒரு பேரிடி விழுந்தது. 1940ல் நாஜி குண்டுக்கு இலக்கா யிற்று இந்தக் கலை நிலையம். ஆனால் அதற்கு முன்பே மிகவும் முன்யோசனையோடு துஸாட் அம்மையின் கொள்ளுப் பேரனை ஜான் தியடோர் துஸாட் என்ற கலைஞர், அச்சுகளையெல்லாம் அப்புறப்படுத்திக் கிராமத்திலே கொண்டுபோய் வைத்து விட்டதால், குண்டுக்கு இரையான இடத்தின் பாழ்வெளியிலே புதிய கட்டடம் கட்டியதும் மறுபடியும் பொம்மைகள் எல்லாம் புத்துயிர் பெற்றுக் கொலுவிலே அமர்ந்தன.

இந்த அதிசயக் கொலுவைப் பார்த்துக் கொண்டே இன்னொரு வாசல் வழியாக மறுபக்கம் வந்தோம். "இந்தப் பொம்மையைப் பார்த்தீர்களா?" என்று கேட்டார் ரகு. நாங்கள் மூவரும் அவர் சுட்டிக் காட்டிய வாசற் பொம்மையின் அருகிலே சென்றோமோ இல்லையோ, அது தனது வலது கையின் சுண்டு விரலை ஆட்ட ஆரம்பித்ததே பார்க்கலாம்! எங்கள் திகைப்பு அடங்குவதற்குள் தனது கண்களை மூடி விழித்தது அந்த உருவம்!


ஆம்; உயிருள்ள மனிதனுக்கும் மெழுகுப் பொம்மைக்கும் வித்தியாசம் தெரியாதபடி எங்களை மதிமயங்க வைத்திருந்தது துஸாட்ஸ் நிலையம்! அந்தக் கலைக்கிறக்கத்திலிருந்து தெளிய வைத்தார், பொம்மை யென்று நாங்கள் ஏமாந்துவிட்ட நிஜக் காவலாளி!

"இந்த வாசல் வழியாக ப்ளானெடேரியம் போகலாம்! ஆனால் அதற்கு முன் நீங்கள் பார்க்க வேண்டிய முக்கிய பகுதி இதோ என் இடதுபுறம் இருக்கிறது!" என்றார் அவர்.

காவலாளி சொன்ன வாசலைப் பார்த்தோம்.

"பயங்கர அறை - Chamber of Horrors" என்று கொட்டை எழுத்துக்களிலே எழுதியிருந்தது!

(தொடரும்)


GRUNDIG
இனிய நாதத்திற்கு...
கிரண்டிக்கே!
கிரண்டிக்

பலகார ராமன்!

ஆர்.கே.நாராயண்

சந்தைச் சாலைக்கும் மருந்துக் கடைக்குச் செல்லும் சந்துக்கும் நடுவேயுள்ள திருப்பத்தில்தான் அவனுடைய நிறுவனம் இருந்தது. 'நிறுவனம்' என்ற பதம் யாருக்கேனும் பிடிக்காவிட்டால் அவர் அக்கருத்தைத் தாராளமாக வெளியிடலாம். ஏனெனில் உண்மையிலேயே அது வானவெளியைக்கொண்டே நெய்தாற் போன்ற கற்பனையான ஏதோ ஒன்றுதான். எட்டு மணி அடித்ததும் அவனை நீங்கள் பார்க்கலாம்; பத்துமணி ஆச்சோ இல்லையோ, நீங்கள் அவன் வந்துபோன சுவட்டைக் கூடக் காண முடியாது. என்றாலும் இந்த எட்டிலிருந்து பத்து மணிக்குள் அவன் வந்திருக்கிறான்: தன் சரக்குகளை விற்பனை செய்திருக்கிறான்; புறப்பட்டும் போயிருக்கிறான்.

அவனைப் பார்த்தவர்கள், "கொடுத்து வைத்தவன். தினத்துக்கு ஒரு மணி வேலை செய்தால் எதேஷ்டம். அதற்குள் பத்து ரூபாய் பணம் பண்ணி விடுகிறான்—பட்டதாரிகள்கூட இவ்வளவு சம்பாதிக்கத் திணறுகிறார்கள். மாசத்துக்கு மூந்நூறு ரூபாயாகும்" என்று சொல்வார்கள். இப்படிப்பட்ட ஏனோதானோ என்ற பேச்சைக் கேட்டால் அவனுக்கு எரிச்சல் வரும். "இத்தனை சரக்குகளையும் வறுத்தெடுப்பதற்காக நாள் முழுக்க நான் அடுப்பங்கரையில் உட்கார்ந்திருப்பது இவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது?" என்பான்.

அண்டை வீட்டுக் கோழி கூவியவுடனே அவன் விழித்துக் கொண்டு விடுவான்; காலை மூன்று மணிக்கே விழித்துக் கொண்டு கூவும் வழக்கமும் அந்தக் கோழிக்கு உண்டு. ராமன் விழிப்புறும் போதே, கோழி ஏன் தன் சகஜமான நித்திரையை இழந்து விட்டது என்று அதிசயிப்பான்; எனினும், அந்த சமிக்ஞையை அவன் ஒரு போதும் தவறவிட மாட்டான்.

மணி மூன்றாயிருந்தாலும் சரி, நாலாயிருந்தாலும் சரி எல்லாம் அவனுக்கு ஒன்றுதான். அவன் எழுந்திருக்க வேண்டியதே; அன்றைய வேலையைத் தொடங்க வேண்டியதே!

இரவு சுமார் எட்டேகால் மணிக்குத் தன் சரக்குகளுடன் அவன் வந்து சேருவான். அவன் தூக்கிச் செல்லும் சாமான்களைப் பார்த்தால் அவனுக்கு நான்கு கைகளோ என்று தோன்றும். தலையில் துலாபாரம் தாங்கும் பெரிய தாம்பாளம் (இதில்தான் நானாவிதமான பணியாரங்களையும் தரவாரியாகப் பிரித்துவைத்திருக்கும்) கை மடிப்பில் தொங்கவிட்ட ஸ்டூல், இன்னொரு கையில் பிடித்துள்ள ஒரு விளக்கு. தாம்பாளத்தைப் பொருத்துவதற்கான மடிக்கக்கூடிய 'கால்'கள்—இவையே அவனுடைய உபகரணங்கள். சில்லறை சில்லறையாகக் கிடைக்கும் நாணயங்கள், கலந்தாங்கட்டியான பல பொருள்கள் ஆகியவற்றைக் கையாளவேண்டியிருந்ததால் அவன் மின்சாரத்தை மட்டும் நம்பியிராமல், தற்காப்பாக அந்த விளக்கையும் ஏற்றிக் கைக்கெட்டும் தூரத்தில் வைத்துக் கொள்வான்; அது நாளொன்றுக்கு ஆறு பைசா பெறுமானமுள்ள மண்ணெண்ணெயைக் குடித்து வாழும்.

தனது காட்சிப் பொருள்களை அந்தச் சிறிய தீபம் ஒளிரச்செய்யும் வகையில் அவன் அந்தத் தாம்பாளத்தைப் பொருத்துவான். அதன் பின், அந்தப் பக்கமாகச் செல்லும் ஊர்ஜிதமான குன்ம வியாதிக்காரனுங்கூட அவற்றின் மீது கண்ணோட்டம் செலுத்தாமலிருக்க முடியாது. குண்டு குண்டாக, பெரிசாக, ஆனால் வாயில் போட்டதும் கரைந்தே போகும் போண்டாக்குவியல்; வெள்ளை வெளேரென்று வட்ட வட்டமாக, துவளத் துவள, மல்லின் துணிகளை அடுக்கி வைத்தாற்போன்ற தோசைகள்; எவ்வளவு மெல்லிய சப்பாத்திகள் என்



றீர்கள்! அவற்றில் ஐம்பதை உங்கள் கண்டு விரலில் தூக்கி நிறுத்தி விடலாம்; தந்தப் பந்துகளைப்போல் அப்படியே வேக வைத்த வாத்து முட்டைகள்; அப்புறம், சதாகாலமும் அடுப்பின்மீது கொதித்துக் கொண்டிருக்கும் காப்பித் தண்ணி; பிரத்தியேகமான ஓர் அலுமினியப் பாத்திரத்தில் சட்டினி. அநேகமாக எல்லா இனங்களுக்குமே இந்தச் சட்டினி இலவசமாக வழங்கப்படும்.

சரியாக, மாலைக் காட்சி முடிந்து வெளி வரும் சினிமாக் கும்பல்களைப் 'பிடித்து' விடும்படி அவன் வந்து விடுவான். இந்த ஆட்சி பீடத்துக்குப் போட்டியிடும் இன்னொரு போலி வாரிசும் உண்டு. ஒல்லியான அந்த அரியாப் பிராயத்தினன் இவன் வரும்வரை இவனுடைய இடத்தில் அமர்ந்து வியாபாரம் செய்வான். ஆனால் நம் தோழர் அதை அதிகம் பொருட்படுத்துவதில்லை. அதோடு மட்டுமில்லை. "நான் இல்லாதபோது அந்தச் சுண்டெலிதான் பிழைத்துப் போகட்டுமே" என்று கூடப் பெரும்போக்காகச் சொல்லியிருக்கிறான். இதனால் அந்தப் போலி வாரிசுக்கே இவனிடம் மதிப்பு உண்டாகிவிட்டது: அதனால் இந்தப் பட்சணக்கார மன்னன் வருவதற்கு ஒரு நிமிடம் முன்பே அவன் வேறிடம் சென்று விடுவான்.

ராமனுடைய வாடிக்கைக்காரர்களுக்கு அவனிடம் பிரீதி. "ஆறு பைசாவுக்குக் காப்பியும், ஓரணாவுக்கு நாலு சப்பாத்திகளும் வேறெங்கும் கிடைக்குமா?" என்று அவர்கள் மெச்சிக் கொள்வார்கள். தாம்பாளத்தைச் சுற்றி அமர்ந்தபடி தங்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொள்வார்கள். அதன் மீது நிமிஷத்துக்குப் பத்து, பன்னிரண்டு கைகள் வட்டமிடும். ஆமாம்! அவனுடைய வாடிக்கைக்காரர்கள் தமக்கு வேண்டியதைத் தாமாகவே பொறுக்கி எடுத்து நுனுகிப் பரிசீலித்து, அங்கீகரிப்பதற்கு உரிமை பெற்றிருந்தார்கள்.

இத்தனை கரங்கள் அத்தனை குவியலிலுமாகத் துழாவி வந்தாலும் அவனுக்கென்னவோ யார் எதை எடுத்துக் கொள்கிறார்கள் என்பது தெற்றெனத் தெரியும். எந்த நொடியில் எந்த 'ஜட்கா'க்காரன் எந்தத் தின்பண்டத்தை எடுத்துக் கொள்கிறான் என்பதை ஏதோ ஓர் அசாதாரண உணர்வு மூலமே அவன் தெரிந்து கொண்டு விடுவான்; அந்த ஜட்காக்காரனுடைய கைசெல்கை இயக்கத்தைக்கூட அவனால் சொல்லிவிட முடியும். அதோ நிதானமற்ற முறையில் எழும்புகிறதே, ஓர் அழுக்குப் படிந்த கை. அது பூட்ஸுகளுக்கு பாலிஷ் செய்யும் பயனுடையதுதான் என்பது அவன் அறிந்ததே. அப்பழுக்குச் சொல்ல முடியாத ஒரு வாத்து முட்டையைத் தெரிந்தெடுத்து, தாம்பாளத்தின் மூலையிலேயே அதை உடைத்துச் சரி பார்க்கும் அந்த மல்யுத்த வீரனுடைய கையை இன்ன சமயத்தில் காணலாம் என்பதையும் அவன் உள்ளபடி அறிந்து வைத்திருந்தான்.

* * *

நடைபாதையை மொய்க்கும் ஜனக் கூட்டத்தைச் சேர்ந்ததே அவன் வாடிக்கை: உதாரணமாக, பையிலே புருசும் பாலிஷுமாக 'பாலீஸ், சார், பாலீஸ்' என்று ஓயாமாரியாகக் கத்தியபடி குறுக்கும் நெடுக்குமாக அலைந்து கொண்டிருக்கிறார்களே, பூட்ஸ்-பாலிஷ் பையன்கள், அவர்களைப் போன்றவர்களே. இந்த அநாதை ஜன்மங்களுக்கு ராமனுடைய இதயத்தில் கனிந்த இடமுண்டு. கொழுத்துப் போன ஆள் யாராவது இந்தச் சிறுவர்களிடம் பேரம் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டால் சரி! 'ஒன்றுமில்லாத இந்தப் பயலுக்குக் கொஞ்சம் கூடத்தான் கொடுமேன். மூக்கால் அழாமல் இன்னும் ஓரணா கொடுத்தீரானால் அவன், பாவம், ஒரு தோசையோ சப்பாத்தியோ வாங்கிச் சாப்பிட முடியும். இப்போது உள்ள நிலவரத்தில் அவன் பாதி வயிற்றுக்குத்தான் சாப்பிட முடிகிறது' என்று கூக்குரலிடலாம்போல் தோன்றும் ராமனுக்கு.

பசித்துப் போன, குழி விழுந்த அந்தக் கண்களைப் பார்த்தால் அவன் இதயம் பிளந்து விடும். அவர்கள் உடுத்தியிருந்த கந்தலைக் கண்டு அவன் வேதனைப்படுவான். தங்களுடைய தோல் பையை வைத்துவிட்டு, அவனை அவர்கள் ஆவலோடு அணுகும்போது அவனுக்கு என்னவோ செய்யும். அதற்காக அவன் என்ன செய்ய முடியும், சொல்லுங்கள்? அவனால் தர்ம சத்திரம் நடத்த முடியுமா என்ன? நடக்காத காரியம் அது. ஓர் அங்குலத்தின் தசாம்சத்துக்குச் சரியாகத்தான் அவன் அந்த அரை 'கிளாஸ்' காப்பியை விடுவான். ஆனால் அவர்கள் எத்தனை நேரம் அதை உறிஞ்சிக் கொண்டிருந்தாலும் அதற்கு ஆட்சேபணையே கிடையாது.



பெரிய ஹோட்டல் ஒன்றின் முன் உட்கார்ந்து கொண்டு நாள் முழுதும் ஓலமிட்டுச் சேகரித்ததில் ஒரு பகுதியை அவனிடம் கொடுத்துச் சிற்றுண்டி பெறுவான் ஒரு குருட்டுப் பிச்சைக்காரன். புல்லுக்கட்டுக்காரி ஒருத்தியும் உண்டு. பெண்களோடு வியாபாரம் வைத்துக் கொள்வது அவனுக்குப் பிடிக்கவே பிடிக்காது; ஐயோ அப்பா! கீச்சு மூச்சு என்று அவர்கள் கத்தும் கத்தலில் நரம்பையே அல்லவா அதிர அடித்து விடுகிறார்கள்? பிரதி மாலையும் ஒவ்வோர் இனத்திலும் கொஞ்சமாக ஒரு பொட்டலம் வாங்கிக் கொண்டு எதிர்ப் பக்கத்திலுள்ள மரத்தடிக்குச் சென்று, ஆசைநாயகி போல் தோன்றும் ஓர் ஜந்துவுக்கு அதை வழங்கும் ஓர் ஆசாமி, கபடமாகத் தோன்றுபவன், விந்தி விந்தி நடப்பவன் – அவனும் ராமனுடைய ஒரு வாடிக்கைக்காரன்தான்.

பிரபஞ்சத்தின் இந்த மூலையில் பலப்பல தொழில்கள் புரிந்து, ஆணும் பெண்ணுமாகச் சம்பாதித்ததெல்லாம் நாள் முடிவில் அவனிடம்தான் வந்து சேர்ந்தது. சட்டைக்குக் கீழே, அவனுடைய கழுத்திலிருந்து தொங்கும் சிறிய துணிப் பை ஒன்றில் அது முழுவதையும் அடக்கம் செய்து கொள்வான். இரவுக் காட்சி ஆரம்பமான பின், தன் 'ஆதரவாளர்கள்' யாவரும் கொறிப்பதற்கு வேண்டியதைப் பெற்று விட்டது என்று அவன் திருப்தி அடைந்த பின், வீட்டுக்குப் பணப் பையுடன் திரும்புவான்.


மார்க்கெட்டுக்குப் பின்பக்கமுள்ள இரண்டாவது சந்தில் அவன் வீடு. அவன் மனைவி கதவைத் திறந்தவுடன், சுட்ட எண்ணெயின் மணம் இரவின் காற்றுடன் கலக்கும். அந்த வீட்டில் அனவரதமும் அந்த மணம் சூழ்ந்திருக்கும். அவனுடைய சாமக்கிரிகளிலிருந்து அவனை விடுவித்து விட்டு, அவன் சட்டைக்கடியில் கையைப் போட்டுத் துணிப் பையை இழுத்து எடுப்பாள் அவள். உடனே தொகையை எண்ண ஆரம்பிப்பாள். இருவரும் பெருமிதப்பட்டுப் போவார்கள். காலையில் முதல் போட்ட ஐந்து ரூபாய் இன்னொரு ஐந்து ரூபாய் குட்டி போட்டிருக்கிறது. இந்த விசித்திரமான விந்தைப் பெருக்கத்தைப் பற்றி எண்ணி எண்ணிப் பார்ப்பார்கள். மறு நாள் முதலுக்கு வேண்டியதை மட்டும் அவனுடைய துணிப் பையில் வைத்து விட்டு, லாபத்தை யெல்லாம் கவனமாகப் பிரித்து எடுத்துக் கொண்டுபோய்ச் சின்ன மரப் பெட்டி ஒன்றில் போட்டு விடுவாள் அவள். எத்தனையோ வருஷங்களுக்கு முன்னால், பிறந்த வீட்டிலிருந்து அவள் கொண்டு வந்திருந்த பெட்டி அது.

இராச் சாப்பாடான பின் வெற்றிலையையும், புகையிலையையும் கன்னத்தில் அடக்கிக்கொண்டு திண்ணையில் படுத்து விடுவான் ராமன். தள்ளிப்போகுமாறு போக்குவரத்துப் போலீசார் அவனைக் கெடுபிடி செய்வதுபோலவும், அவனால் பல தொற்று வியாதிகள் பெருகி ஜனத்தொகை குறைந்து வருகிறது என்று சுகாதார இன்ஸ்பெக்டர்கள் சொல்வது போலவும் சொப்பனம் வரும். நிஜ வாழ்வில் என்னவோ, நல்லவேளையாக, யாரும் அவனை ரொம்பவும் தொந்தரவு படுத்தியதில்லை. எப்போதாவது அவன் தன் பட்சணப் பொட்டலத்தில் ஒன்றை 'டூட்டி' முடிந்து வீடு திரும்பும் போலீஸ்காரருக்கோ, அல்லது அவ்வழி செல்லும் சுகாதார இலாகா சிப்பந்திக்கோ அளித்திருக்கிறான்; அவ்வளவுதான்.

'இதெல்லாவற்றுக்கும் கண்ணாடியில் மூடி போடாவிட்டால் என்றாவது ஒரு நாள் அவ்வளவையும் நாசமாக்கிவிடுவேன். உஷார்!' என்று சுகாதார அதிகாரி உண்மையிலேயே சொன்னதுகூட உண்டுதான். என்றாலும் அவர் நல்ல மனிதர். மேல் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. உள்ளூறமட்டும் அவருக்கு ஆச்சரியம்! 'இந்தத் தீனிக்கு ஜனங்கள் எப்படித் தப்பிப் பிழைக்கிறார்கள்? அதில் படியும் தூசி! பின்னால் கழிவுகால் வேறு! இந்த விஷத்துக் கெல்லாம்கூட ஜனங்களே எதிர்ப்புத் திறன் பெறுகிறார்கள் போலும்' என்று எண்ணமிட்டார். சுத்தம், சுகாதாரம் குறித்த மறுக்க முடியாத சட்டங்களை ராமன் மீறியதென்னவோ வாஸ்தவம்தான். என்றாலும் அவனுடைய வாடிக்கைக்காரர்கள் அந்தத் தின்பண்டங்களுக்கு ஈடுகட்டியது மட்டுமில்லை; அதனால் ஊட்டம் பெறுவதாகவே கூடத் தோன்றியது. எத்தனையோ ஆண்டுகளாக அதைச் சாப்பிட்டும் அதனால் துளியும் பாதிக்கப்படவில்லை அவர்கள்.

* * *

எவ்விதமான கிளர்ச்சியோ, இதயக் கொதிப்போ இல்லாத பரம திருப்திகரமான வாழ்க்கை ராமனுடையது என்று சொல்லலாம். பூரணமாகச் சுயமுயற்சியின் பேரிலேயே



அவன் வாழ்க்கையை நடத்தினான் என்பதை எவ்விதத்திலும் நிரூபித்துக் காட்ட முடியும். அப்படி யிருக்கும்போது அண்டமெல்லாம் உறைந்து அழிந்து போகும்வரை, முடிவு என்பதே இல்லாமல், அவ்வாழ்க்கை அவ்வாறே ஏன் நீடிக்கக் கூடாது? அவனுடைய செயலினாலோ, பணம் பண்ணும் வகையாலோ யாருக்கும் ஒரு கேடும் வரவில்லை. அவனுடைய பண்டத்தைத் தின்று அப்படியொன்றும் அதிகமான பேர்வழிகள் செத்துப்போனதாகவும் சொல்வதற்கில்லை. உதவாக்கரை நகரசபை நிர்வாகத்தை விட ஒன்றும் அவனுடைய உணவு வியாபாரத்தால் அதிகம் பேர் உயிரிழந்து விடவில்லை.

ஆனாலும், இந்த மனித வாழ்வில் என்றுமே திருப்தி குலையாதிருப்பதற்கு ஒரு பாதுகாப்புப் பெறுவதென்பது அசாத்தியமானதே! எங்கேயாவது திருப்தி நிறைந்திருந்தால் தெய்வங்களுக்குப் பொறாமை பற்றிக்கொண்டு வந்து விடுகிறது. 'திடுதிப்'பென்று தங்கள் கோபத்தை யெல்லாம் அவர்கள் காட்டி விடுகிறார்கள்.

ஓர் இரவு அவன் தன் வழக்கமான இடத்துக்கு வந்தபோது தன்னுடைய அந்த மூலையில் ஒரு வம்புக்காரப் பட்டாளத்தைப் பார்த்தான். வழி விடுமாறு அவன் அதிகார பூர்வமாகக் கேட்டுக் கொண்டான். ஆனால் யாரும் லட்சியம் செய்யவில்லை. சில்லறைச் சாமான் கடைப் பையன் ஒருவன்தான் அவன் சட்டையைப் பிடித்திழுத்துச் சொன்னான்:

''சாயங்காலத்திலிருந்து அவர்கள் எதைப் பற்றியோ சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்....''

''எதைப் பற்றி?'' என்றான் ராமன்.

''எதையோ பற்றி'' என்றான் பையன். ''வோட்டோ, கீட்டோ எதையோ பற்றி சேல்ஸ் டாக்ஸ் ஆபீஸ் கிட்டே நோட்டீஸ் கொடுத்துக் கொண்டிருந்த யாரையோ கத்தியால் குத்தி விட்டதாகப் பேசிக்கொள்கிறார்கள். ஏதாவது சொந்த விவகாரமாக இருக்கும். நமக்கு என்ன வந்தது? சண்டை போட ஆசைப்படுபவர்கள் போட்டுக் கொண்டு போகட்டுமே.''

''எங்களைப் பற்றிப் பேச அதென்ன துணிச்சல்?'' என்று ஒரு குரல் வந்தது.

வெறுப்புடன் பல கண்கள் அந்தப் பக்கம் திரும்பின. கூட்டத்தில் யாரோ கேட்டார்கள்: ''ஒரு மனுஷன் பேசக்கூடக் கூடாதா?''

அவ்வளவுதான்; கேட்டவனுக்குப் பக்கத்திலிருந்தவன் அவனை மொத்தினான். தன்னுடைய சுமையைத் தாங்கியபடி ராமன் நின்றுவிட்டான், ஏதும் செய்ய இயலாதவனாய்.

அந்த ஓர் அறை ஒரு சங்கிலித் தொடரையே உண்டாக்கப் போதுமானதாக இருந்தது. ஒருவன் இன்னொருவனை, அந்த இன்னொருவன் வேறொருவனை என்று இப்படியே தாக்கிக் கொண்டு போனார்கள்.

''...ஒழிக'' என்று யாரோ கத்தினார்கள்.





சென்ற மாதம் காந்தி மண்டபம் பிரார்த்தனைக் கூட்டத்தில் சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் நள சரித்திரம் உபன்யாசம் செய்தார். ஸ்ரீ ராஜாஜியும் சென்னை கவர்னரும் பிரார்த்தனையில் கலந்து கொண்டனர்.



'ஆகா! நாம் நினைத்தது போலவே ஆயிற்று. நம்மை நசுக்குவதற்காக முன்கூட்டித் திட்டமிட்டு, கூட்டுச் சேர்ந்தே...'' என்று இன்னொரு பகுதியினர் கூப்பாடு போட்டனர்.

எல்லோரும் கூச்சலிட்டனர். சோடா புட்டிகள் பறந்தன. யாரும் யாரையும் தாக்கினர். ஒரு கோஷ்டி திடீரென்று எல்லாக் கடைகளிலும் புகுந்து அவற்றை மூடுமாறு வற்புறுத்தியது. 'ஏன்?' என்று கடை ஆள் கேட்டபோது, '......போது வியாபாரம் செய்ய உங்களுக்கு என்ன மனம்?' என்றனர்.

நாகரிக வாழ்வின் கட்டுப்பாடுகள் யாவும் தளர்ந்தன. ஒவ்வொருவனும் மற்ற எல்லாரிடமும் துவேஷம் கொண்டதாகத் தோன்றியது. ஒரே மணியில் அந்த இடம் முழுவதும் ரணகளமாக மாறிவிட்டது. போலீஸார் உடனடியாக ஸ்தலத்துக்கு விரைந்தது வாஸ்தவம்தான். ஆனால் அது விஷயங்களை மேலும் குழப்படி செய்தது. சண்டை போட இன்னொரு கட்சியுமல்லவா சேர்ந்துவிட்டது? சட்டத்தையும் ஒழுங்கையும் பராமரிப்பது, தங்களையும் பராமரித்துக் கொள்வது, காயமுற்றதாகத் தாங்கள் கருதுவோரைக் காப்பது, ஆக போலீசாருக்கு மூன்றுவித வேலைகள் ஏற்பட்டன.

மூடாத கடைகளெல்லாம் கொள்ளையடிக்கப்பட்டன.

சினிமாக் கொட்டகை சரேலென்று காலியாயிற்று. அந்தக் கும்பலும் அங்கங்கே அமளியில் பிரவேசித்தது. கத்தியும் கையுமாகச் சிலர் ஓடினார்கள். ரத்தக் காயத்துடன் சிலர் அரற்றினார்கள்; சிலர் அலறினார்கள். ஆம்புலன்ஸ் வண்டிகள் பறந்தன. போலீசார் தடியடி, கண்ணீர்ப் புகை வீச்சுகள் நடத்தினர். இறுதியாகத் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறங்கினர். பலபேர் மாண்டனர். மூவாயிரம் பேர் இறந்து போனதாகப் பொதுஜனம் கூறியது. அதிகாரபூர்வமான அறிக்கையோ போலீசின் துப்பாக்கிப் பிரயோகத்தால் ஐந்து பேருக்கு மட்டுமே காயம் ஏற்பட்டிருப்பதாகவும், நாலேகால் பேர் இறந்துபோனதாகவும் அடித்துக் கூறியது.

ராமன் நடுநிசியில் வாராவதி ஒன்றின் அடியிலிருந்து வெளிப்பட்டு வீடு சேர்ந்தான்.

மறுநாள் ராமன் தன் மனைவியிடம், ''இன்று வழக்கமான அளவு பட்சணம் எடுத்துச் செல்லப் போவதில்லை. வாங்குவதற்கு யாராவது இருப்பார்களா என்பதே சந்தேகம். எல்லா ஜனங்களுக்கும் என்னதான் பிசாசு பிடித்து விட்டதோ, கடவுளுக்குத்தான் தெரியும். ஏதோ சில வோட்டுக்களுக்காக ஒருவரை யொருவர் கொலை செய்து கொள்ளத் தயாராக இருக்கிறார்களே!'' என்று கூறினான்.

அவன் உள்ளுணர்வு சரியாகவே இருந்தது. கடைத் தெருவில் பொதுமக்களைவிடப் போலீஸாரே அதிகமாக இருந்தனர். அவனுடைய மூலை பலமாகப் பாதுகாக்கப்பட்டது. போலீஸ் அதிகாரி தூரத்தில் காட்டிய வேறு ஓர் இடத்தில் அவன் கடை போடவேண்டியிருந்தது.

பத்து நாட்களில் சகஜ நிலை ஏற்பட்டது. எதை எதையோ பற்றிப் பூரணமான பகிரங்க விசாரணை நடத்த வேண்டும், துப்பாக்கிப் பிரயோகம் நியாயமானதுதானா, கிளர்ச்சி நடக்காது தடுக்க முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டனவா என்றெல்லாம் ஆராய வேண்டுமெனப் பத்திரிகைகள் ஆர்ப்பரித்தன. பேப்பர்க்காரப் பையன்களின் கூப்பாட்டிலிருந்து நிகழ்கால சரித்திரம் ராமன் முன் விரிந்தது. நாளாவட்டத்தில் தன் மூலைக்குத் திரும்ப ஏற்பாடு செய்தான் ராமன். அவன் அங்கு சென்று கடை பரப்புவதுதான் தாமதம், 'பாட்ஜு' அணிந்த இரண்டு இளைஞர்கள் அவனிடம் வந்து, ''இனி இங்கே நீ கடை போட முடியாது'' என்றனர்.



பம்பாய் ஷண்முகானந்த சபையின் ஆதரவில் வைஜயந்திமாலாவின் திருப்பாவை நாட்டிய விருந்து நடந்தேறியது. இந்த வைபவத்துக்கு மத்திய மந்திரி திரு கோபால் ரெட்டி தலைமை வகித்துச் சிறப்பித்தார். இதன்மூலமாகச் சபையின் கட்டிட நிதிக்கு ஒரு லக்ஷம் ரூபாய் வசூலாயிற்று.

"ஏனும், சார்?"

"அன்று எங்கள் தலைவர் விழுந்த புனித ஸ்தலம் இது. அவர் இதயத்தை நோக்கிப் போலீஸார் சுட்டார்கள். அவருக்கு இங்கு நினைவுச் சின்னம் எழுப்ப விருக்கிறோம். இது எங்கள் இடம், இந்த மூலையை நகரசபை எங்களுக்குத் தந்து விட்டது."

விரைவிலேயே; அந்த மூலை மற்ற இடத்திலிருந்து தனிப்படுத்தப்பட்டது. எப்போது பார்த்தாலும் அங்குஏதேனும் கூட்டம் நடந்தபடி இருந்தது. நிதி வேண்டி உண்டிகள் குலுங்கின. ஜனங்களும் சில்லறை போட்டார்கள். பணம் பெறுவதற்கு அந்த ஓர் இடம் எவ்வளவு வாய்ப்பானது என்பதை ராமனைப் போல் அறிந்தவர் யாருமில்லை. நினைவுக் கல் எழுப்புவதற்குத் தேவையான அளவு நிதி சேகரித்தார்கள். அலங்காரமான சுற்று வேலியும், பூத்தொட்டிகளும் அந்த இடத்தை அடியோடு மாற்றிவிட்டன. கட்டுத் திட்டம் மிகுந்த சிந்தனையாளர்கள் அங்கு கூடித் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

இருநூறு கஜங்களுக்கு அப்பால், சந்து ஒன்றுக்கு ராமன் மாற வேண்டியதாயிற்று. அதாவது, அவன் தனது வாடிக்கைக்காரர்களின் திருஷ்டி எல்லைக்கு அப்பால் சென்று விட்டான்; அவர்கள் கண்படாத ஓர் இருட்டடிப்புப் பகுதிக்குப் போய்விட்டான். சினிமாக் கொட்டகைக் கும்பல் அவனுக்கு வெகு தொலைவில் சாரி சாரியாக வெளியேறியது; போக்குவரத்து போலீஸ் தாட்சிண்யம் காட்டும் ஒருசில விநாடிகளுக்குள், தங்கள் வண்டியைச் சாலை ஓரத்தில் விட்டு,ராமனிடம் வந்து அவசரம் அவசரமாக வயிற்றுக்குப் பெற்றுப் போன ஜட்கா வண்டிக்காரர்களுக்கும் இவ்வளவு தூரம் வரச் சௌகரியப்படவில்லை. எதிர்ப்புறத்தில் இருந்தானே ஒல்லியான போலி வாலிக, அவனை வாடிக்கை பிடித்துக் கொண்டார்கள் பூட்ஸ் பாலிஷ் பையன்கள். அதிர்ஷ்டம் அவன் பக்கம் திரும்பி விட்டதுபோல் இருக்கிறது!

இப்போதெல்லாம் ராமன் முன்னைவிட மிகக் குறைவாகவே தயாரித்தான். அப்படியும்கூடத் தினமும் ஏராளமான சரக்குகள் மிஞ்சிப் போய் வீடு திரும்பின. இதிலே கொஞ்சத்தை அவனே உள்ளே தள்ளி வைத்தான். பாக்கியை, மனைவியின் யோசனை பேரில், சுட வைத்து மறுநாள் விற்பனைக்கு எடுத்துச் சென்றான். அதை ருசி பார்த்த ஓரிருவருக்குக் குமட்டல் எடுத்தது. ராமன் பட்சணத்தின் தரம் முன்னைப் போலெல்லாம் இல்லை என்று அவர்கள் வதந்தி பரப்பினார்கள். துணிப் பையில் இரண்டே அணா காசுடன் ஓரிரவு வீடு திரும்பிய அவன் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு மனைவியிடம் சொன்னான்: "நம் வியாபாரம் முடிந்தே போய் விட்டது என்று நினைக்கிறேன். இனி அதைப் பற்றிச் சிறிதும் நினைக்காதிருப்போம்."

தன் வாணலிகளையும், தாம்பாளங்களையும் மூட்டை கட்டி வைத்து விட்டு ஓய்வு கால வாழ்க்கை நடத்தத் தயார் செய்து கொண்டான் ராமன். சேமிப்புகள் எல்லாம் கரைந்து போயின. அப்புறம் என்ன? எப்போது பார்த்தாலும் ஒலிபெருக்கிகள் அலறும் கோஹினூர் ரெஸ்டாரெண்ட் என்ற ஹோட்டலில் வேலை தேடி நின்ற 'க்யூ'வில் அவனும் சேர்ந்துகொண்டான். மாசம் இருபது ரூபாய் சம்பளத்துக்கு வேலைக்கு அமர்ந்து நாளொன்றுக்கு எட்டு மணி நேரம் 'ஸர்வர்' வேலைசெய்தான். ஜனங்கள் வந்தார்கள், போனார்கள்; எங்கிருந்தோ வந்த ரேடியோ இசை அவன் நரம்புகளைத் துளைத்தது. என்றாலும் அவன் வேலையில் ஒட்டிக் கொண்டிருந்தான்; ஒட்டிக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது. சாப்பிட வந்த யாரோ ஒருவர் அவனிடம் மட்டு மரியாதை இன்றி 'ஆர்டர்' செய்தபோது அவன் சொன்னான்: "நாசுக்காய்ச் சொல்லு, தம்பி! ஒரு நாள் நானும் ஹோட்டல் முதலாளியாக இருந்தவனுக்கும்" என்று. அந்தச் சிறிய நினைவுக் குறிப்பிலேயே அவன் பெரும் திருப்தி பெற்றான்!

நீதிமந்திரியின் பெருமிதம்!

கோவை அ. அய்யாமுத்து

திரு எம். எஸ். ராந்தவா என்பார் இந்திய அரசாங்கத்தின் காரியதரிசிகளில் ஒருவர். விவசாய ஆராய்ச்சிக் கௌன்சிலின் உபதலைவருமாவார்.

அவர் சமீப காலத்தில் தென்னிந்தியாவின் நிலைமையை நேரில் கண்டறிந்து, அது பற்றித் தாம் கொண்ட கருத்தை ஒரு கட்டுரையாக எழுதியிருக்கிறார். அக் கட்டுரை ஜனவரி மாதம் 22ந்தேதி சென்னை 'இந்து' பத்திரிகையின் வாரப் பதிப்பில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நமது சென்னை மாநில நிதிமந்திரியவர்கள் பிரஸ்தாபக் கட்டுரையைச் சென்னை சட்டசபைக் கூட்டத்தில் படித்துக் குதித்துக் கும்மாளம் கொட்டினாராம். மற்றவர்களையும் அதைப் படித்துக் களிப்பெய்துமாறு கூறினாராம்.

கோவைக் கூட்டமொன்றில் பேசும்போதும் மேற்சொன்ன கட்டுரையைப் பிரஸ்தாபித்துக் கோவைமா நகரம் விவசாயத் துறையிலும் முன்னேறி விருப்பது குறித்து இறுமாப்பும் எக்களிப்பும் கொண்டு பரவசமடைந்த காலை அவரது கால்களிரண்டும் நிலங்கொள்ளவில்லையாம்! மதுரையிலும் இந்தக் கட்டுரையின் அருமை பெருமைகளை வானளாவப் புகழ்ந்து மகிழ்ந்தாராம்.

ராந்தவா அவர்கள் கட்டுரையின் கனியும் சுவையும் மிகுந்த பகுதியை இதோ படியுங்கள்.

''தெற்கு ராஜ்யங்களிலே மிகவும் அபிவிருத்தியடைந்துள்ளது சென்னை. கல்வியின் தரமும், நிர்வாகத்தின் திறனும்போலவே விவசாயத்தின் தரமும் மிகவும் உயர்வடைந்துள்ளது. இந்தியாவில் உள்ள ஏனைய ராஜ்யங்களைக் காட்டிலும் சென்னை ராஜ்யத்தில் விவசாய மகசூல் அதிகமாக உள்ளது. விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் நுண்ணறிவும், இறையயான உழைப்பும் இதற்குக் காரணமாகும்.

''இந்தியாவிலேயே மிகவும் முற்போக்கான ஜில்லாவென்று கோயமுத்தூரைச் சொல்லலாம். விவசாயக் கல்லூரியின் பல்லாண்டு ஆராய்ச்சி இம்முன்னேற்றத்துக்கு ஓரளவு உதவியாய் இருந்ததென்று சொல்லலாம். என்றாலும் இம்முன்னேற்றத்துக்கு முக்கிய காரணஸ்தர்கள் விவசாயிகள்தாம். நாயுடுகளும் கவுண்டர்களும் அபிவிருத்திக்கான சாதனங்களைக் கையாள எப்போதும் தயாராக இருக்கிறார்கள்.

''எதிர்மாறான இயற்கைச் சூழ்நிலையோடு மனிதன் போராடிப் பெற்ற வெற்றியென்றே இந்த ஜில்லாவின் விவசாயத்தைச் சொல்ல வேண்டும். எனவே, அதன் புகழ் மேலும் உயர்வுடையதாகிறது. கடினமான பாறைகளைப் பிளந்தெடுத்துத் தடாகம் போன்ற கிணறுகளை வெட்டித் தங்கள் பூமிகளுக்கு நீர் பாய்ச்சி வருகிறார்கள். இந்தக் கிணறு ஒன்று வெட்ட நாற்பதினாயிரம் ஐம்பதினாயிரம் ரூபாய் செலவழித்துமிருக்கிறார்கள். உயர்ந்த தண்ணீர்த் தொட்டிகள் கட்டியும், நிலத்துக்குள் சிமெண்ட் குழாய்கள் பதித்தும் மேடு பள்ளமான எல்லா நிலங்களுக்கும் ஏக காலத்தில் ஒன்று போல் நீர் பாய ஏற்பாடு செய்துள்ளார்கள். கோயமுத்தூரிலுள்ள வேடபட்டிப் பண்ணைகளில் ஓரிடத்தில் பதினைந்து நீர்த் தொட்டிகள் அமைத்தும் இணைத்தும் விவசாயம் செய்து வருகிறார்கள்.

''விதைகளையும், நாற்றுக்களையும் வரிசை வரிசையாக நடுவது, பசுந்தாள் உரமிடுவது, ஆழ்ந்து மண்ணுழும், பிற உரங்களும் இடுவது ஆகிய முறைகள் இங்கு சர்வசாதாரணமாகும்.

''தரிசாய்க் கிடக்கும் ஒரு பூமியை ஒரு நாயுடுவிடம் கொடுத்துப் பாருங்கள். அவர் கவனத்தோடும் அக்கறையோடும் பாடுபட்டு அதனை அழகிய தோட்டமாக மாற்றி விடுவார்.

''பெரிய விவசாயிகளில் பலர் சிறு சிறு தொழிலதிபர்களாகவும் இருக்கின்றனர். தொழிலில் வரும் ஆதாயத்தை அவர்கள் விவசாய அபிவிருத்தியில் பயன்படுத்துவதோடு, தொழில் நுணுக்கங்களையும் விவசாயத்தில் புகுத்தி வருகின்றனர். சிறிய விவசாயிகளும் வாழை, கரும்பு, பருத்தி, நெல் போன்ற பலதரப்பட்ட மகசூல்களை எழுப்புகிறார்கள்.''

திரு ராந்தவா தொடர்ந்து கூறுகிறார் :—

''வட இந்தியாவோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், தென்னிந்திய கிராமங்கள் எவ்வளவோ சுத்தமான சூழ்நிலையில் இருக்கின்றன. வீடுகளெல்லாம் சுத்தமாகச் சுண்ணாம்பு பூசப்பட்டுள்ளன. வரிசை வரிசையாகக் கட்டப்பட்டுள்ளன. கோவில் இல்லாத கிராமங்களே கிடையா. சிறிய கிராமத்தில் கூட கிராமத்தின் நடுவிலோ, ஒரு புறத்திலோ அழகான கோவில் அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய காட்சியை வட இந்தியாவில் பெரிய நகரங்களில் கூடக் காண முடியாது.''

மேற்கூறியகட்டுரையை ராந்தவா அவர்கள் பரவசத்தோடு எழுதியிருக்கிறார். அவர் வாழும் பகுதியான வட இந்தியாவில் காணாத காட்சிகளை அவர் தென்னிந்தியாவில் கண்டார்.

(1) தென்னிந்திய விவசாயிகள் நுண்ணறிவாளர்கள்; திறமைசாலிகள்; பெருக்கமுள்ளவர்கள்; அயராத உழைப்பாளிகள். தங்கள் சர்வத்தையும் நிலங்களிலே போட்டு விவசாயத்தை முன்னேற்றமடையச் செய்துள்ளனர்.

(2) தென்னிந்தியர்கள் அறிவாளிகள். நன்றாக நிர்வாகம் புரிகிறார்கள்.

(3) தென்னிந்தியர்கள் சுத்தமானவர்கள். உடலையும், உடையையும், குடிலையும், ஊரையும் துப்புரவாக வைத்துக் கொள்ளும் மனப்பழக்கமும் கைப்பழக்கமும் உள்ளவர்கள்.

(4) தென்னிந்தியர்கள் தெய்வ பக்தியுள்ளவர்கள். கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க மாட்டார்கள். கலா ரசிகர்கள். கூத்து, பாட்டு, நாட்டியம் ஆகிய கலைகளில் சிறப்புடையவர்கள். அவர்களுடைய தைப் பொங்கல் ஒரு தேசியத் திருவிழா.

இவ்வாறாகத் தென்னாட்டவரின் திறமைப் புகழ்ந்திருக்கிறார். இப்புகழ்ச்சியில் திரு சுப்பிரமணியத்துக்கும், அவருடைய கட்சி அரசாட்சிக்கும் இம்மி அளவும் பங்கு கிடையாது.

இவ்வளவு மகோன்னத நிலையில் வாழும் மக்களின் உரிமைகளில், சுதந்திர வாழ்வில்,

திரு சுப்பிரமணியமும் அவருடைய கட்சியும் கைவைக்கப்பார்ப்பது எவ்வளவு பெரிய அறிவற்ற செயல் என்று உணர்வதற்குத் திரு ராந்தவாவின் கட்டுரை அவர்களுக்கு உதவி அளிக்க வேண்டும். காங்கிரஸ் ஆட்சியின் பெருமையையோ, சாதனையையோ அது அணுவளவும் எடுத்துக் காட்டுவதாக இல்லை.

திரு ராந்தவாவின் கட்டுரையைப் படிக்கும் தமிழன் வட இந்தியரின் வாழ்வு நிலைமையின் தாழ்வை அறிந்து இரக்கப்படுவான். இந்த நிலையிலுள்ளவர்களா நமக்குத் திட்டமும் சட்டமும் போடுகிறார்கள் என்று அவன் நினைப் படைவான். திட்டப் பணத்தில் பெரும் பகுதி வடநாட்டில் செலவிடப்படும் காரணத்தை யும் அவன் அறிந்துகொள்ள முடியும்.

தென்னாட்டைப் பற்றியும் தென்னாட்டவரின் திறனைப் பற்றியும் திரு ராந்தவாவின் கட்டுரையைப் படித்துத்தான் நாம் ஏதோ தெரிந்து கொள்ள முடியும் என்று திரு சுப்பிரமணியம் கருதியிருப்பாரானால், அவரைத் தென்னாட்டில் தப்பிப் பிறந்த பிரகிருதி என்று தான் நாம் கருத வேண்டும்.

திரு ராந்தவா சொல்வதைக்கேட்டுப் பரவசமடைந்திருக்கும் எனது ஜில்லாவாசியான சுப்பிரமணியத்துக்கு, இதோ 27–12–48-ல் இராஜாஜி என் மனைவிக்கு எழுதிய கடிதத்தைப் படிக்கும்படி கீழே தருகிறேன்.

புது டெல்லி, 27—12—48

ஆசீர்வாதம்,


கடிதம் படித்தேன். அதில் கண்ட விஷயங்களைப் பார்த்து நான் வியப்பு அடையவில்லை. உழைப்பாளிகள் நிறைந்த ஒரு ஜில்லாவில் இது வரையில் ஏதுபடியாகாத நிலங்கள் இப்படித்தான் இருக்க வேண்டும்.

இராஜகோபாலாச்சாரி

என் மனைவி கோவிந்தம்மாள் ஒரு 'தியாகி' என்ற காரணத்தால் கோவை ஜில்லாவில் அவளுக்கு ஒரு பூமி கொடுத்தார்கள். அப்பூமி ஒரு மலையடிவாரத்தில் இரண்டாகப் பிளந்து கிடந்தது. 1933ம் வருஷத்தில் ராஜாஜியோடு திருச்செங்கோட்டில் கைது செய்யப் பட்டு அவள் இரண்டாம் முறையாகச் சிறை சென்றவள். ஆதலால் தனது 'சகா'வுக்கு அச் செய்தியை ஆவலுடன் அறிவித்தாள். அதற்குப் பதிலே மேற்படி கடிதமாகும்.

கோவை ஜில்லாவாசிகளின் திறமைக்கு ராஜாஜி அளித்த சான்றைக் காட்டிலும், திரு ராந்தவா அதிகமாகவோ புதிதாகவோ ஒன்றும் தமது கட்டுரையில் கூறிவிடவில்லை என்பதை ராஜாஜியின் ரத்தினச்சுருக்கமான கடிதம் அறிவுறுத்துகிறது அல்லவா?

வரியோ வரி!



உங்கள் தந்தியை

டெலிபோன் நெம்பருக்கு

விலாசமிட்டு அனுப்புங்கள்



தந்தி துரிதமாகச் செல்ல டெலிபோன் நெம்பருக்கு விலாசமிட்டு அனுப்புங்கள். விலாசதாரரின் பெயர், TF என்று குறிப்பிட்டு அவர் டெலிபோன் நெம்பர், (இது ஒரே வார்த்தையாகக் கணக்கிடப்படும்). தந்தி ஆபீஸின் பெயர், இதைத்தான் நீங்கள் எழுத வேண்டும். உதாரணம்

பானர்ஜி
TF 31670 - புது டில்லி

போன் மூலம் நீங்களும் தந்தியை அனுப்பலாம்
அதற்காக உள்ளது போனோகிராம்

உங்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய
எங்களுக்கு உதவுங்கள்

தபால் தந்தி இலாகா

DA 60/552

மணிபல்லவம்

17 வேலியில் முளைத்த வேல்கள்!

நா. பார்த்தசாரதி



கையில் வேலையும் மனத்தில் துணிவையும் உறுதியாகப் பற்றிக் கொண்டு மெல்லப் பின்புறம் திரும்ப முயன்றார் வீரசோழிய வளநாடுடையார். புறநகரில் காவற்படைத் தலைவராகத்திரிந்த காலத்தில் இதைப் போலவும் இதைக் காட்டிலும் பயங்கர அநுபவங்கள் பலவற்றைச் சந்தித்திருக்கிறார் அவர். 'பயம்' என்ற உணர்வுக்காக அவர் பயந்த காலம் இருந்ததில்லை! ஒரு வேளை பயம் என்ற உணர்வு அவருக்காகப் பயந்திருந்தால் தான் உண்டு. அத்தகைய தீரர் முதுமைக்காலத்தில் ஓய்வு பெற்று ஒடுங்கிய பின் நீண்ட காலம் கழித்து வெளியேறிச் சந்திக்கிற முதல் பயங்கர அநுபவமாயிருந்தது இது.

கண் பார்வை சென்ற வரை கிழக்கிலும் மேற்கிலும், தெற்கிலும், வடக்கிலும் நெடுந் தூரத்துக்கு நெருந் தூரம் காடாகப் பரவிக்கிடக்கும் மரக் கூட்டம். ஓ வென்று மரங்கள் காற்றில் ஆடும் ஓசையும், மெல்ல மெல்ல இருண்டு கொண்டு வரும் தனிமைச் சூழலும். தவச்சாலையில் இருப்பது தெரியாமல் யாரோ இருக்கும் மர்மமான நிலையும் சேர்ந்து வளநாடுடையாரைச் சற்றே திகைக்கச் செய்திருந்தன. எதிர்பாராத நிகழ்ச்சிகள் நிகழுவதற்குமுன் நிலவு இறுத் போன்றதொரு மர்மமான சூழ்நிலையாகத் தோன்றியது அது.

தான் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து பின்புறம் நன்றாகத் திரும்பித் தவச்சாலைக்குள் கவடிக்கும், தீபத்துக்கும். அருகில் வந்திருப்பது யார் என்று பார்க்குமுன் 'அப்படிப் பார்க்க வேண்டாம்'-என்பதுபோல் தன் உள்ளுணர்வே எச்சரிக்கை செய்து தயங்க வைப்பது அவருக்கு மேலும் திகைப்பளித்தது. செயலுணர்வுக்கு முன்னதாக உள்ளுணர்வு தயங்கும் காரியங்கள் நல்ல விளைவைத் தருவதில்லை என்பது அவர் அநுபவத்தில் கண்டிருந்த உண்மை. அப்போது அந்தத் தவச்சாலையில் அவருக்குத் தெரிய வேண்டியது தம் வீட்டிலிருந்து காணாமற்போன அருட்செல்வ முனிவர் அங்கே வந்திருக்கிறாரா. இல்லையா, என்பதுதான். முனிவர் தவச்சாலைக்கு வர

வில்லை என்றால் நிம்மதியாக அங்கிருந்து வெளியேறுவதைத் தவிர வேறொன்றும் அவர் செய்ய வேண்டியதில்லை. முனிவர் அங்கே வந்திருக்கிறார் என்றால் தன் இல்லத்திலிருந்து சொல்லிக் கொள்ளாமல் வெளியேறியது ஏன் என்றும் தவச்சாலையில் தன்னைச் சந்திக்கத் தயங்கித் தனக்கு முன் வராமல் மறைந்தது என்ன காரணத்தினால் என்றும் அவரையே கேட்டுத் தெரிந்து கொண்டு விட வேண்டும் என்றும் வளநாடுடையார் விரும்பினார். தவச்சாலையில் கவடியையும், தீபத்தையும் வைத்து வாசித்துக் கொண்டிருந்த முனிவர் தாம் தன் வரவைக் கண்ணுற்றதும் அப்போது தம்மைக் காண விரும்பாமல் ஒளிந்து மறைந்து கொண்டிருக்க வேண்டும்'— என்று வளநாடுடையார் மனத்தில் சந்தேகப்பட்டார். தமது சந்தேகம் மெய்யாயிருந்து முனிவரும் அப்படி நடந்து கொண்டிருந்தால்தான், 'என்னைக் கண்டு ஏன் ஒளிந்து கொண்டீர்?' என்று முனிவரை அவர் கேட்க விரும்பினார். ஆனால் அவர் விரும்பியவாறு எதுவும் அங்கு நடைபெறவில்லை.

'செவியுணர்வுக்கு முன்னதாக உள்ளுணர்வு தயங்கும் காரியங்கள் நல்ல விளைவைத் தருவதில்லை'- என்று அவர் பயந்ததற்கு ஏற்ப நிகழ்ச்சிகள் வேறு விதமாக நிகழலாயின. அவர் நின்று திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்த இடத்திலிருந்து தவச்சாலையின் உட்பக்கம் ஒன்றரைப் பனை தூரம் இருந்தது. எனவே தீபத்துக்கும், கவடிக்கும் அருகில் குனிந்து அமர்வதுபோல் தெரிந்த ஆளை அவர் நன்றாகக் காண முடியவில்லை. 'அந்த ஆள் அங்கே அமர்ந்து கவடியைப் படிப்பதற்குத் தொடங்கக் கூடும்'— என்று அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக நடந்தது.

உள்ளே தீபத்துக்கும், கவடிக்கும் அருகே கீழ்நோக்கித் தாழ்ந்த கைகள் சுடர் அணைந்து விடாமல் தீபத்தை நிதானமாக மேலே தூக்கித் தவச்சாலையின் தென்னோலைக் கூரை இறப்பின் விளிம்பில் நெருப்புப் பற்றும்படி பிடித்தன. காய்ந்த ஓலைக் கீற்றுக்களின் நுனிப் பகுதியில் தீ நாக்குகள் எழுந்தன. வளநாடுடையார் திடுக்கிட்டார். உள்ளே இருப்பவர் முனிவராயிருக்கலாம் என்று தாம் நினைத்தது பிழையாகப் போனது மன்றி உள்ளே மறைந்திருந்தவர் என்ன தீச்செயலைச் செய்வதற்காக மறைந்திருந்தார் என்பதும் இப்போது அவருக்கு விளங்கி விட்டது. மறைந்திருந்தவர் வேற்றான் என்பதும் புரிந்து விட்டது.

" அடே, பாவி! இதென்ன காரியம் செய்கிறாய்? ஒரு பாவமுமறியாத முனிவர் தவச்சாலையில் நெருப்பு மூட்ட முன் வந்திருக்கிறாயே. உன் கையிலே கொள்ளி வைக்க......"— என்று உரத்த குரலில் இரைந்து கொண்டே தீ மூட்டும் கையைக் குறி வைத்துத் தம்மிடமிருந்த வேலை வீசினார் அவர். குறியும் தப்பாமல் குறி வைக்கப்பட்ட இலக்கும் தப்பாமல் சாமர்த்தியமாக அவர் எறிந்திருந்தும், அந்த வேல் அவர் நினைத்த பயனை விளைவிக்கவில்லை.

தீபத்தைக் கீழே நழுவ விட்டு விட்டு அதே கையினால் அவர் எறிந்த வேலைப் பாய்ந்து பிடித்து விட்டான் அவன். தன் கண்களைத் தீச்சுடர் கூசச் செய்யும் நிலையில் எதிர்ப்புறத்து இருளிலிருந்து துள்ளி வரும் வேலை எட்டிப் பிடிக்கத் தெரிந்தவன் சாதாரணமானவனாக இருக்க முடியுமென்று தோன்றவில்லை வளநாடுடையாருக்கு. ஆனால் அவர் அப்போது உடனடியாக நினைக்க வேண்டியது, நெருப்பை அணைக்க ஏதாவது செய்ய முடியுமா என்று முயலும் முயற்சியாயிருந்ததனால் எதிராளி வேலை மறித்துப் பிடித்து விட்ட திறமையை வியப்பதற்கு அப்போது நேரமில்லை

தவச்சாலையின் கூரையில் நெருப்பு நன்றாகப் பற்றிக் கொண்டு எரியத் தொடங்கியிருந்தது. கண் இமைக்கும் நேரத்தில் நெருப்பு மூட்டியவன் அங்கிருந்து எப்படியோ நழுவியிருந்தான். போகிற போக்கில் அவர் வீசிய வேலையும் பறித்துக் கொண்டு போயிருந்தான் அந்தப் பாவி. எனவே கைத்துணையாக இருந்த வேலையும் இழந்து வெறுங் கையோடு தீப்பற்றிய பகுதியில் புகுந்து தீயை அணைக்கத் தம்மால் ஏதேனும் செய்ய இயலுமா என முயல வேண்டிய நிலையிலிருந்தார் அவர்.


உறுதியும், மனத்திடமும் கொண்டு தீப்பற்றிய பகுதியில் நுழைந்தே தீருவதென்று முன்புறம் நோக்கி நடக்கப் பாதம் பெயர்த்து வைத்த வளநாடுடையார் மேலே நடக்காமல் திகைத்து நின்று கொண்டே தமக்கு இருபுறத்திலும் மாறி மாறிப் பார்த்தார். இரு புறமும் நெஞ்சு நடுக்குறச் செய்யும் அதிசயங்கள் தென்பட்டு அதிர்ச்சி தந்தன. உற்றுப் பார்த்தால் அதைப் புரிந்து கொள்ள முடிந்தது. அந்த இடத்தில் அவருக்கு இரு பக்கங்களிலும் முன்னும் பின்னும் சிறிது தொலைவு வேலி போலப் படர விடப்பட்டிருந்த மாதவிக் கொடிகளின் அடர்த்தியிலிருந்து கூரிய நுனியில் இலைகள் சிலிர்த்துக் கொண்டெழுந்தாற் போல் பளபளவென்று மின்னும் வேல் நுனிகள் தெரிந்தன. அவசரப் பார்வைக்குச் சற்றுச் செழிப்பான நுனியில் இலைகளைப்போலத் தோன்றிய அவை உற்றுப்

பார்த்தால் தம்மை வேல்முனைகளை நன்கு காட்டின.

வளநாடுடையார், ஒரு வேளை மாலையிருள் மயக்கத்தில் காணும் ஆற்றல் மங்கிய கண்கள் தம்மை ஏமாற்றுகின்றனவோ என்ற சந்தேகத்துடன் வலது புறம் மெல்லக் கைநீட்டி மாதவிக்கொடியின் இலைகளோடு இலைகளாகத் தெரிந்த அந்த வேல்களில் ஒன்றின் நுனியைத் தொட்டுப் பார்த்தார். சந்தேகத்துக்கிடமின்றி இலைகளினிடையே தெரிந்தவை வேல் முனைகள்தாம் என்பதை அவர் விளங்கிக்கொள்ள முடிந்தது. அந்த விளக்கமும் போதாமல் இன்னும் ஒரு படி அதிகமாகத் தெரிந்துகொள்ள விரும்பிய அவர் தாம் தொட்டுப் பார்த்த அதே வேல் முனையைப் பிடித்துச் சற்றே அசைத்துப் பார்த்தார். அவ்வளவுதான்! புற்று வளையிலிருந்து சீறிக் கொண்டு மேலெழுந்து பாயும் நாகப்பாம்புபோல் அந்த வேல்முனை முன்னால் விரைந்து நீண்டது. அப்படி அந்த வேல் முனை பாய்ந்து நீளும் என்பதை எதிர்பார்த்தவராக முன்னெச்சரிக்கையுடன் விலகிக் கொண்டிருந்தார் வளநாடுடையார். இல்லாவிட்டால் கூர்மையான அந்த வேல் அவருடைய பரந்த மார்பின் ஒரு பகுதிக்குள் புகுந்து புறப்பட்டிருக்கும். தாம் எத்தகைய சூழ்நிலையில் மாட்டிக் கொண்டிருக்கிறோம் என்பது அவருக்குப் புரிந்தது.

எதிர்ப்பக்கம் பார்க்கிறாற்போல் நின்று கொண்டு விழிகள் காதுவரையில் நீள, தமக்கு இரு புறங்களிலும் அடர்ந்து இருண்டு படர்ந்திருந்த மாதவிப் புதரை ஊடுருவி நோக்க முயன்றார் வளநாடுடையார். தரையிலிருந்து அவர் நிற்கும் உயரத்துக்கும் மேலாக ஒரு பாக உயரம் வரை கொடிகள் ஓங்கி வீசிப் படர்ந்திருந்ததனால் மாதவிப் புதருக்கு மறுபுறம் இருப்பவர்களை அவ்வளவு எளிதாகக் காண முடியவில்லை. எனினும் கண்கள், மூக்கு, கைகள் என்று தனித்தனியே இலைகளின் அடர்த்திக்கு அப்பால் சிறு சிறு இடைவெளிகள் மூலம் ஆட்கள் நிற்பதற்கான அடையாளங்கள் தெரிந்தன. இருந்தாற் போலிருந்து மாதவிப் புதருக்கு இரும்புக் கரங்கள் முளைப்பது போல் வேல்கள் சிறிது சிறிதாக நீண்டன. இரண்டு பக்கத்திலும் முன்னும், பின்னும், சிறிது தொலைவு வரையில் அணி வகுத்து நீட்டினாற்போல் நீளும் வேல்களைக் கண்டு தீயை அணைக்கும் முயற்சிக்காகத் தாம் முன் செல்லலாமா, வேண்டாமா என்று தயங்கி நின்றார் அவர். தீயை அணைப்பதற்காக அவர் முன் சென்றால் அப்படிச் செல்லவிடாமல் அவரைத் தடுப்பது அந்த வேல்களுக்கும், அவற்றுக்குரியவர்களுக்கும் நோக்கமாக இருக்கும்போல் தோன்றியது.

தீயும் இப்போது அவர் ஒருவரே தனியாக அணைத்துவிட முடியும் என்ற நிலையில் இல்லை. அங்கு வீசிக் கொண்டிருந்த பெருங் காற்றின் துணையும் சேர்ந்து விட்டதனால் தீ கொண்டாட்டத்தோடு பரவியிருந்தது. அனல் பரவியதனால் அருகிலிருந்த மரங்களிலிருந்து பலவேறு பறவைகள் விதம் விதமாகக் குரலெழுப்பிக் கொண்டு சிறகடித்துப் பறந்தன. ஓலைக் கீற்றுக்கள் எரியும் ஒலியும், இடையிடையே இணைக்கப் பெற்றிருந்த மூங்கில்கள் தீயில் வெடித்து முறியும் சடசடவென்ற ஓசையும் அவர் செவிகளில் உற்றன. அந்தக் கோரக் காட்சியைக் கண்டு கொண்டே ஒன்றும் செய்ய இயலாமல் நின்றிருப்பது அவருக்கு வேதனையாகத்தான் இருந்தது.





ஆயினும் ஒன்றும் செய்வதற்கு விடாமல் அந்த வேல்கள் வியூகம் வகுத்து அவரைத் தடுத்துக் கொண்டிருந்தன.

தீ மிகப் பெரிதாக எழுந்து தவச் சாலைக்கு மேலே வானம் செம்மையொளியும் புகையும் பரவிக் காட்டியதால் அந்த வனத்தின் பல பகுதிகளில் இருந்த வேறு மடங்களையும், மன்றங்களையும், தவச்சாலைகளையும் சேர்ந்தவர்கள் பதறி ஓடி வந்து கொண்டிருந்தனர். தீ வனம் முழுவதும் பரவிவிடக் கூடாதே என்ற கவலை அவர்களுக்கு. அன்றியும் தீப்பற்றியிருக்கும் இடத்தில் யாராவது சிக்கிக் கொண்டிருந்தால் முடிந்தவரையில் முயன்று காப்பாற்ற முனையலாம் என்று கருணை நினைவோடு ஓடி வந்து கொண்டிருந்தவர்களும் இருந்தனர்.

'ஐயோ! தீப்பற்றி எரிகிறதே!' — என்று பதறி ஒலிக்கும் குரல்களும் 'ஓடி வாருங்கள்! ஓடி வாருங்கள்! தீயை அணைத்து யாரையாவது காப்பாற்ற



வேண்டியிருந்தாலும் காப்பாற்றலாம்' என்று விரைந்து கேட்கும் சொற்களும் திமுதிமு வென்று ஆட்கள் ஓடிவரும் காலடி ஓசையும் தவச்சாலையை நெருங்கிக் கொண்டிருந்தபோது, தமக்கு இரு புறமும் நீண்டிருந்த வேல்கள் மெல்லப் பின்னுக்கு நகர்ந்து மறையும் விந்தையை வளநாடுடையார் கண்டார். அதையடுத்து மாதவிப் புதரின் அப்பால் இரு புறமும் மறைவாக இருந்த ஆட்கள் மெல்ல அங்கிருந்து நழுவுவதையும் அவர் உணர முடிந்தது. அந்தச் சமயத்தில் இன்னுமொரு நிகழ்ச்சியும் நடந்தது. மாதவிக் கொடிகளுக்கு மறு பக்கத்தி


சோப் உபயோகிப்பதால்
கூந்தல் சோபையை
இழக்கிறது
'ஹேலோ'
கூந்தலைப் பளபளப்பா
கச்செய்கிறது!

லிருந்து ஒரு வேல் பாய்ந்து வந்து வளநாடுடையாருக்கு முன் ஈர மண்ணில் குத்திக் கொண்டு நின்றது. அந்த வேல் வந்து குத்திக் கொண்டு நின்ற அதே நேரத்திலே, "பெரியவரே! உங்களுக்கு மிகவும் நன்றி. நீங்கள் வீசி எறிந்த வேலை இதோ திருப்பித் தந்தாகிவிட்டது. எடுத்துக் கொண்டு பேசாமல் வந்த வழியோடு போய்ச் சேருங்கள்" என்ற சொற்களை இரைந்து கூறிவிட்டு ஏளனமாகச் சிரித்துக் கொண்டே கொடிவேலிக்குப் பின்புறமிருந்து யாரோ ஓடிச் சென்று மறைவதையும் வளநாடுடையார் கவனித்தார். அப்போது அவருடைய நிலை தவிப்புக்குரிய இரண்டுங் கெட்டான் நிலையாக இருந்தது. இருதலைக்கொள்ளி எறும்புபோல் செய்வதறியாமல் வருந்தி நின்றார் அவர். அங்கே தீயின் நிலையோ அணைக்கலாம் என்று நினைக்கவும் இயலாதபடி பரவிப் பெருகிவிட்டது. இங்கே மறைந்திருந்த ஆட்களோ தப்பிவிட்டார்கள். அந்நிலையில் தீப்பற்றி ரியும் தவச்சாலைக்கு முன் தாம் மட்டும் தனியாக நின்று கொண்டிருப்பது எப்படி யெப்படியோ பிறர் தம்மேல் சந்தேகம் கொள்ள ஏதுவாகலாம் என்று தோன்றியது வளநாடுடையாருக்கு. 'தவச்சாலைக்குத் தீ மூட்டியதே அவர்தான்' என்று வருகிறவர்கள் நினைத்து விட்டால் வியப்படைவதற்கில்லை. அந்தப் பரபரப்பான சூழ்நிலையில், 'நெருப்பு மூட்டியது தாமில்லை' என்று மறுப்பதற்கும் அவரிடம் போதிய சான்றுகள் இல்லை. ஓடி வருகிற அக்கம் பக்கத்தார் ஓசை மிகவும்நெருங்கிக்கொண்டிருந்தது.



தீரச் சிந்தித்தபின் அப்போதுள்ள சூழ்நிலையில் தாம் செய்யக்கூடிய ஒரே நல்ல காரியம் 'அங்கிருந்து மெதுவாக நழுவிச் சென்று விடுவதுதான்' என்ற முடிவுடன் கீழே குத்திக்கொண்டு நின்ற தம் வேலை எடுத்துக் கொண்டு மரஞ் செடி கொடிகளின் மறைவில் பதுங்கிப் பதுங்கி நடந்தார் வளநாடுடையார். ஆனால் அங்கு நின்று கொண்டிருப்பது எப்படித் தவறான அனுமானத்துக்கு இடங்கொடுத்துத் தம்மேல் பழிசுமத்தப் படக் காரணமாகும் என்று அவர் பயந்தாரோ. அப்படிப் பயந்தது அவர் சென்று கொண்டிருக்கும்போதே நடந்து விட்டது. ஓடிவந்து கொண்டிருந்தவர்களில் யாரோ ஒருவர் மறைந்து பதுங்கிச் செல்லும் அவருடைய உருவத்தைப் பார்க்க நேர்ந்து விட்டதனால், 'தீ வைத்தவன் அதோ ஓடுகிறான்! விடாதீர்கள். பிடியுங்கள்' என்று பெருங் குரல் எழுந்தது. உடனே வந்த கூட்டத்தில் ஒரு பகுதி அவர் சென்று கொண்டிருந்த பக்கம் திரும்பிப் பாய்ந்து அவரைத் துரத்தத் தொடங்கிவிட்டது. எந்தப் பழிக்காக அவர் அங்கு நிற்கப் பயந்து சென்றாரோ, அந்தப் பழி துரத்திக் கொண்டே வந்து விட்டதே என்று தெரிந்தபோது துரத்துபவர்களிடம் அகப்படாமல் ஓடத் தொடங்குவதைத் தவிர வேறு வழி அவருக்கும் தோன்றவில்லை. கால்கள் சென்ற போக்கில் முதுமையின் ஏலாமையையும் பொருட்படுத்தாமல் ஓடலானார் அவர். பின்னால் துரத்திக் கொண்டு வந்தவர்கள் ஆத்திரத்தில் வீசி எறிந்த கற்களும், கட்டைகளும், அவர்மேல் விழுந்து சிராய்த்து இரத்தம் கசியச் செய்தன. அவருக்கும் அவரைத் துரத்தியவர்களுக்கும் இடையே அந்த முன்னிரவு நேரத்தில் சக்கரவாளக் கோட்டத்தை ஒட்டிய காட்டுக்குள் ஒரு பெரிய ஓட்டப் பந்தயமே நடந்து கொண்டிருந்தது. எல்லோருமே துரத்தி வளைத்துக் கொண்டு விரட்டியிருந்தால் அவர் பாடு வேதனையாகப் போயிருக்கும். நல்லவேளையாக வந்த கூட்டத்தில் ஒரு பகுதி தீயணைக்கும் முயற்சிக்காகத் தவச்சாலையருகிலேயே தங்கி விட்டது.

ஓடி ஓடிக் களைத்துப்போன வளநாடுடையார் இனிமேல் ஓடினால் கீழே விழுந்துவிட நேரும் என்கிற அளவு தளர்ந்திருந்தார். துரத்துகிறவர்களும் விடாமல் துரத்திக்கொண்டு வந்தார்கள். அந்நிலையில் அவர் ஒரு காரியம்செய்தார். மேலே ஓட முடியாமல் சுடுகாட்டுக் கோட்டத்தை ஒட்டியிருந்த பாழடைந்த காளிகோவில் ஒன்றின் இருண்ட பகுதியில் புகுந்து மூச்சு இரைக்க நின்றார்.

"வாருங்கள்!" என்ற மெல்லிய அழைப்புக் குரலோடு பின்புறத்து இருளிலிருந்து இரண்டு கைகள் அவருடைய தோளைத் தீண்டின. வளநாடுடையார் இருண்டு பயங்கரமாயிருந்த அந்த இடத்தில் பின்புறமிருந்து ஒலித்த குரல்

தமக்குப் பழக்கமானதா யிருந்ததை உணர்ந்தாலும் தற்காப்புக்காகத் தோள் மேல் விழுந்த கைகளை உதறிவிட்டு விரைந்து திரும்பி வேலை ஓங்கினார். ஓங்கிய வேலை அந்தக் கைகள் எதிரே மறுத்துப் பிடித்தன.

"வேலை ஓங்குவதற்கு அவசியமில்லை. நான்தான் அருட்செல்வர். என்னை இவ்வளவு சுலபமாக வேலாலே குத்திக் கொன்றுவிட ஆசைப்படாதீர்கள். நான் இன்னும் சிறிது காலம் இந்த உலகத்தில் வாழ்ந்து தொலைக்க வேண்டிய அவசியமிருக்கிறது" என்று சிரித்துக்கொண்டே குரல் அடையாளம் தெரியும்படி தெளிவாகக் கூறிவிட்டு வளநாடுடையாருக்கு அருகில் வந்து நின்று கொண்டார் அருட்செல்வ முனிவர். வளநாடுடையாருக்கு வியப்பு அடங்கச் சில கணங்கள் ஆயின.

18- உலகத்துக்கு ஒரு பொய்!

ஆத்திரமடைந்து துரத்திக் கொண்டு வந்த கூட்டத்தினரிடமிருந்து வீர சோழிய வளநாடுடையார் தப்பி விட்டார். துரத்தி வந்தவர்கள் சிறிது நேரம் காளிகோவில் சுற்றுப்புறங்களில் தேடிப் பார்த்துவிட்டு, அப்பாலுள்ளவை மயானப் பகுதிகளாதலால் அங்கே நுழைந்து போக அருவருப்பும், கூச்சமும் கொண்டு வந்த வழியே திரும்பிவிட்டார்கள். அவர்கள் திரும்பிச் செல்கிற வரை மௌனமாய், மூச்சுவிடுகிற ஒலி கூட இரைந்து கேட்டுவிடாமல் இருளில் மறைந்திருந்த முனிவரும், வளநாடுடையாரும் சற்றே வெளிப் பக்கமாக நகர்ந்து வந்து காளிகோவில் குறட்டில் எதிரெதிராக உட்கார்ந்து கொண்டார்கள். சோகம் மிகுந்து நாத்தழுதழுத்துத் துக்கம் விசாரிக்கிற குரலில் பேச்சை ஆரம்பித்தார் வளநாடுடையார் :

"முனிவரே! உங்களுடைய தவச்சாலை முழுதும்......"

"நெருப்பு வைக்கப் பெற்று அழிந்து போய்க் கொண்டிருக்கிறதென்பதைத் தெரிந்துகொண்டுதான் இந்தக் காளி கோவில் இருட்டில் உட்கார்ந்திருந்தேன். தவச்சாலை எரிந்ததனால் எனக்கு ஒன்றும் இழப்பே இல்லை. அங்கிருந்து என்னென்ன பொருள்களை நெருப்புக் கிரையாகாமல் காத்துக் கொண்டுவர வேண்டுமோ, அவற்றை நான் கொண்டு வந்து விட்டேன் உடையாரே. இதோ பாருங்கள். தவச்சாலையில் எரி மூள்வதற்குச் சிறிது நேரத்துக்கு முன்பே நானும் இந்தப் பொருள்களும் அங்கிருந்து சுகமாகத் தப்பி இந்த இடத்துக்கு வந்தாயிற்று."

இவ்வாறு கூறிக் கொண்டே அந்தக் கோவிலின் இருண்ட மூலையிலிருந்து சுவடிகள், மான்தோலாசனம், கமண்டலம், யோகதண்டம் முதலிய பொருள்களையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துக் காண்பித்தார் முனிவர்.

"தவச்சாலைக்கு யாரோ தீ வைக்கப் போகிறார்களென்று உங்களுக்கு முன்பே தெரிந்திருக்கும் போலிருக்கிறதே, முனிவரே?"

"ஆகா! தெரியாமலென்ன? நன்றாகத் தெரியும். யார், எதற்காக என்ன நோக்கத்துடன் தீ வைக்க வரப் போகிறார்கள் என்பது கூட எனக்குத் தெரியும் உடையாரே. எந்த நாழிகையில் நெருப்பு வைக்க வருவார்களென்பதும் தெரியும். அதனால்தானே உங்கள் இல்லத்திலிருந்து சொல்லிக் கொள்ளாமலே அவசரமாகப் புறப்பட்டு வந்தேன்?"

"முனிவரே! நீங்கள் பெரிய தவறு செய்து விட்டீர்கள். முன்பே தெரிந்திருந்தும் என்னிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் இருந்து விட்டீர்களே? என்னிடம் சொல்லியிருந்தால் எப்படியாவது முன்னேற்பாடு செய்து இது நடக்காமல் காத்திருக்கலாமே?"

"இருக்கலாம்! ஆனால் இதுதான் நடக்க வேண்டும் என்பது என்னுடைய ஆசையாக இருக்கும்போது நீங்கள் எப்படி இதைத் தடுக்க முடியும்? இன்று என்னுடைய தவச்சாலை தீப்பற்றி எரியாமற் போயிருந்தால்தான் நான் வருத்தப்பட நேர்ந்திருக்கும். அப்படியில்லாமல் அது அடியோடு எரிந்து போனதில்தான் எனக்குப் பெருமகிழ்ச்சி."

இதைக் கேட்டு முனிவர் தம் நினைவோடுதான் பேசுகிறாரா அல்லது மனம் வெறுத்துப் போய் இப்படிப் பிதற்றுகிறாரா என்று புரியாமல் திகைத்துப் போய்விட்டார் வளநாடுடையார்.

"உங்களைத் தேடிக் கொண்டுதான் நானும் தவச்சாலைக்கு வந்தேன். அங்கே சுவடி விரித்தபடி யிருந்தது. தீபமும் எரிந்து கொண்டிருந்தது. ஆகையால் நீங்கள் உள்ளேதான் இருப்பீர்களென

அநுமகரத்வஜா

ஷட்குண மகரத்வஜா
சக்தி வாய்ந்தது



சுத்தமான ஷட்குணத் தங்கத் திறல் மிகவும் சிறிய அளவில் ஆனால் பிரமாத சக்தி வாய்ந்ததாக உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டுப் பிறகு மாத்திரை வடிவம் ஆக்கப்பட்டிருக்கிறது. உபயோகிப்பதற்கு மிகவும் சுலபம். மற்ற மகரத்வஜாங்களை விடச் சக்தி வாய்ந்தது.

○★○

14 மாத்திரைகள்
ஒரு புட்டியில் இருக்கின்றன
(7 முழு அளவுகள்)

○★○

பெங்கால் கெமிகல்

கல்கத்தா – பம்பாய் – கான்பூர்

சென்னை ராஜ்ய டிஸ்ட்ரிபியூட்டர்கள்:

ஆர். எல். கௌடர் & கம்பெனி
69, பந்தர் தெரு :: சென்னை-1

ஆந்திர ராஜ்ய டிஸ்ட்ரிபியூட்டர்கள்:

சத்ய நாராயண பார்மஸி
குமரி தெரு, விஜயவாடா-1 & விஜயநகரம்

ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சபா

திருவல்லிக்கேணி, சென்னை-5

சபாவின் கட்டிட நிதிக்காக

இந்திய நடனங்கள் (திருவாங்கூர் சகோதரிகள்)
பத்மினி, ராகினி & பார்ட்டியார்

முதன்முறையாக அளிக்கும்
அழியாப் புகழ்பெற்ற மகா காவியம்

இராமாயணம்

(நாட்டிய நாடகம்)

ஸ்ரீ ராமநவமி தினத்தன்று

25-3-61 சனி மாலை 7 மணிக்கு

திருவல்லிக்கேணி
என். கே. டி. கலாமண்டபத்தில்

★

நாடக அமைப்பு

தொகுத்தவர்:
ஹரிகதை புகழ் ஸ்ரீ எம்பார் விஜயராகவாச்சாரியார்

சங்கீத டைரக்ஷன்:
சங்கீதவாணி ஸ்ரீமதி எம். எல். வசந்தகுமாரி

நடன அமைப்பு:
ஸ்ரீ பி. எஸ். கோபாலகிருஷ்ணன்

இசை:
ஸ்ரீமதி ஜி. கே. பொன்னம்மாள்

ஆடை அலங்காரங்கள் தூய கதர் மற்றும் கைத்தறித் துணிகளில் தயாரிக்கப்பட்டவை

டிக்கட்டுகள்: ரூ. 250; 100; 50; 25; 10; 5 & 3

கிடைக்குமிடம்:

24, டி.பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5
2, அரமனைக்காரத் தெரு, சென்னை-1
ராஜா அண்ணாமலை ஹால், சென்னை-1



REGISTERED USER OF THE TRADE MARK 'SANFORIZED'

நினைத்தேன்" — என்று தொடங்கித் தவச்சாலையில் நிகழ்ந்தவற்றையும் தாம் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு ஆட்களால் துரத்தப்பட்டதையும் முனிவருக்கு விரிவாகச் சொன்னார் வளநாடுடையார். எல்லாவற்றையும் கேட்டு விட்டு முனிவர் சிரித்தார்.

"துடைத்து வைத்தாற் போல் எல்லாவற்றையும் ஒழித்துக் கொண்டு வந்து விட்டால் தவச்சாலையில் யாருமே இல்லை என்று நெருப்பு மூட்ட வந்தவர்கள் நினைத்துக் கொண்டு பேசாமல் திரும்பிப் போயிருப்பார்கள். உள்ளே நான் இருப்பதாக அவர்கள் நினைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு பாவனைக்காக அந்தச் சுவடியையும், தீபத்தையும் அப்படி வைத்துவிட்டு வந்தேன். தீ வைத்தவர்கள் நான் தவச்சாலைக்குள்ளே யிருந்து வெளியேற முடியாமல் தீயில் சிக்கி மாண்டுபோக வேண்டுமென்பதற்காகத்தான் இந்தச் செயலிலேயே இறங்கினார்கள். இப்போது அவர்கள் அப்படி நினைத்து நான் தீயில் மாண்டு விட்டதாக மகிழ்ந்து கொண்டுதான் போயிருப்பார்கள். அவர்கள் அப்படி நினைத்துக் கொண்டு போக வேண்டுமென்றுதான் எனக்கும் ஆசை!"



"இது என்ன குரூரமான ஆசை? நீங்கள் ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? நீங்கள் உயிருடன் இருக்கும் போது தீயில் சிக்கி இறந்ததாக எல்லாரும் எதற்காக நினைக்க வேண்டும்? அதனால் உங்களுக்கு என்ன ஆக்கம்?"

"நிறைய ஆக்கம் இருக்கிறது, உடையாரே! இத்தகையதொரு பொய்யான செய்தி மிக அவசியமாக, அவசரமாக, ஊரெங்கும் பரவ வேண்டும். நான் உயிரோடிருப்பதாக வெளியுலகத்துக்குத் தெரிகிற வரையில் இளங்குமரனுடைய உயிருக்குப் பகைகள் நெருங்கிக் கொண்டே யிருக்கும். நான் உயிரோடில்லை என்று உலகம் ஒப்புக் கொள்ளும்படி செய்து விட்டால் இளங்குமரன் உயிரோடிருப்பதற்கு விட்டுவிட அவனறியாமலே அவனுக்கு ஏற்பட்டிருக்கும் பகைவர்கள் முன்வரலாம்."

"எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை! ஒரே குழப்பமாயிருக்கிறது. உங்கள் தவச்சாலைக்குத் தீவைக்க வந்தவர்கள் யாரென்று உங்களுக்குத் தெரியுமானால் எனக்கு ஏன் சொல்லக் கூடாது? நீங்கள் உயிருடனிருப்பது உலகத்துக்குத் தெரிகிறவரையில் இளங்குமரனுக்குப் பகைகள் ஏற்படும் என்கிறீர்கள்! அதுவும் எனக்குத் தெளிவாக விளங்கவில்லை. மேலும் தவச்சாலையில் நெருப்புக்கு இரையாகாமல் நீங்கள் தப்பி வந்து இங்கே உயிரோடிருப்பதை நான் ஒருவன் பார்த்துத் தெரிந்து கொண்டு விட்ட பின்பு உங்களால் எப்படி உலகத்தை ஏமாற்ற முடியும்?"

"முடியும்! உங்களை என்னுடைய வேண்டுகோளுக்குக் கட்டுப்படச் செய்து விடலாம் என்று நான் நம்புவது சரியானால் நிச்சயமாக உலகத்தை ஏமாற்றி விட முடியும். இன்று இரவு இரண்டாம் சாமத்தில் பூம்புகாரிலிருந்து மணிபல்லவத்துக்குப் புறப்படும் கப்பலில் ஏறி யாரும் அறியாமல் சென்றுவிடலாமென்று நினைக்கிறேன் நான். நேற்று முன் தினம் படைக்கலச் சாலையில் நீலநாகமறவரைச் சந்தித்து இளங்குமரனைப் பற்றிய சில பொறுப்புக்களை அவர் ஏற்றுக் கொள்ளும்படி செய்திருக்கிறேன். ஆயினும் நாளைக் காலையில் நான் தீயில் மாண்டு போனதாகச் செய்தி பரவும்போது நீலநாகமறவரும் அதை மெய்யெனவே நம்புவார். எவரும் மெய்யென்று நம்புவதற்கு ஏற்றாற்போலத்தான் சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறேன். உண்மையில் 'நான் சாகவில்லை' என்பது உங்களுக்கு மட்டுமே தெரியும். 'விண்மகள், மண்மகள் சாட்சியாய், காலம் வருகிறவரை இந்த உண்மையை இளங்குமரன் உட்பட எவருக்கும் சொல்வதில்லை' என்று இப்போது நீங்கள் எனக்குச் சத்தியம் செய்து கொடுக்க வேண்டும்."

"இந்தச் சத்தியத்தை நான் செய்து கொடுக்க மாட்டேனென்று மறுத்தால்......?"


"மறுத்தால் வேறு வழியில்லை. மெய்யாகவே நான் இறந்து போக வேண்டியதுதான். சக்கரவாளக் கோட்டத்துப் பூதம் நின்ற வாயிலின் மேலே ஏறிப்

செவிசாயுங்கள்!



ஒரு பிச்சைக்காரன் ரோட்டில் மயக்கம் போட்டு விழுந்தான். அவனைச் சுற்றிக் கூட்டம் சேர்ந்தது. கூட்டத்தில் எல்லோரும் சேர்ந்து பசிக் கொடுமையைப் பற்றிச் சளசளவென்று பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது கூட்டத்தில் நின்ற இரக்க முற்ற ஓர் அம்மையார் "யாரேனும் போய்ச் சூடாக ஒரு கப் காப்பி வாங்கிப் பிச்சைக்காரனுக்குக் கொடுங்கள்!" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தாள். அது யார் காதிலேயும் விழாததைக் கண்டு கீழே விழுந்து கிடந்த பிச்சைக்காரன், சட்டென்று எழுந்து உட்கார்ந்து, "தயவு செய்து உங்கள் பேச்சை நிறுத்தி அந்த அம்மாள் சொல்வதைக் கேளுங்களேன்" என்றான்!

என்ன தைரியம்!



ஓட்டல்காரர்: ஓய்! நேற்று நீர் சாப்பிட்டுவிட்டுப் பணம் கொடுக்காமல் கம்பி நீட்டிவிட்டீரே!

சாப்பிட வந்தவர்: கொடுத்து விட்டுத்தான் போனேன். அப்படிக் கொடுக்கா விட்டால் மறுபடியும் இந்தப் பக்கம் வந்திருப்பேனா ஓய்?

பூதச் சிலையின் உச்சியிலிருந்து கீழே குதித்து ஊரறிய உயிரை விடுவேன். ஏனென்றால் எனக்கு என் உயிரைவிட இளங்குமரன் உயிர் பெரிது" என்றார் அருட்செல்வ முனிவர்.

இந்தக் குரலின் உறுதியைக் கேட்ட பின் முனிவர் இப்படிச் செய்யத் தயங்க மாட்டார் என்று வளநாடுடையாருக்கு நன்றாகத் தெரிந்து கொள்ள முடிந்தது.

"முனிவரே! இளங்குமரனுக்குக்கூட நீங்கள் உயிரோடிருப்பது தெரியக் கூடாதென்கிறீர்களே?" என்றார் வீரசோழிய வளநாடுடையார் வியப்புடன்.

"அப்படியல்ல, ஒரு குறிப்பிட்ட காலம் வருகிறவரை அவனுக்கு இது தெரிய வேண்டாம். அப்புறம் நானே தக்க சமயத்தில் தக்க ஆள் மூலம் உங்களையும், அவனையும் நான் இருக்குமிடத்துக்கு வரவழைத்து உங்கள் இருவரிடமும் இப்போது நீங்கள் தெரிந்து கொள்ளத் தவிக்கும் சில உண்மைகளைச் சொல்வதற்கு நேரிடும். அந்தச் சமயத்தில் 'நான் இறக்கவில்லை' என்று இளங்குமரனும் தெரிந்து கொள்ளலாம். அதுவரையில் அவனுக்கும் இது தெரியாமலிருப்பதே நல்லது"

'அந்தச் சமயம் எப்போது வருமோ, முனிவரே?"


"அநேகமாக அடுத்த ஆண்டு வைகாசி விசாகம் புத்த பௌர்ணமிக்குள் அந்த நல்ல சமயம் வாய்க்கலாம்."

'இத்தனை வயதுக்கு மேல் இந்த முதுமைக் காலத்தில் என்னை ஒரு பொய்யைக் காப்பாற்றுவதற்காகச் சத்தியம் செய்யச் சொல்லுவது உங்களுக்கே நன்றாயிருக்கிறதா? இது அடுக்குமா, முனிவரே....?"

"பொய், மெய் என்பதற்கு நான் இன்று காலை உங்களிடம் கூறிய விளக்கத்தை நினைத்துக் கொள்ளுங்கள், உடையாரே! பின்பு நன்மை பயப்பதற்குக் காரணமான பொய்யும் மெய்தான்! நீங்கள் செய்யப் போகும் இந்தச் சத்தியத்தினால் இரண்டு உயிர்களைக் காப்பாற்றும் புண்ணியத்தை அடைகிறீர்கள்......"

மறு பேச்சுப் பேசாமல் முனிவருடைய வலது கையில் தமது வலது கையை வைத்து 'மண்மகள் விண்மகள் சாட்சியாக முனிவர் உயிரோடிருக்கும் மெய்யைக் கூறுவதில்லை' -- என்று சத்தியம் செய்து கொடுத்தார் வீரசோழிய வளநாடுடையார். அதைக் கேட்டு முனிவர் முகம் மலர்ந்தது. (தொடரும்)

அனேக விதமான கிரீம்களையும், லோஷன்களையும் பற்றி அலட்டிக்கொண்டு ஆத்திரப்படுவானேன்? பல நன்மைகளை பயக்கும் நிவியா கிரீமினால் உங்கள் சருமத்தை பாதுகாக்க முயற்சியுங்கள்



உங்கள் வதனத்திற்கு

நிவியாவில் உங்கள் சருமத்திற்குள் ஊடுருவிச் செல்லும், அருமையான, இதமளிக்கும் யூசெ ரைட் என்ற பண்பொருள் சேர்க்கப்பட்டுள்ளது. சருமத்தை பளபளப்பாகவும்... மாசற்றதாகவும்...எழிலுடையதாய் செய்கிறது.



உங்கள் கரங்களுக்கு

சோப்பினாலும், தண்ணீராலும் கருக்கப்பட்டுவிடும் இயற்கையான எண்ணெய்ப்பசையை உங்கள் சருமத்திற்கு திரும்பவும் அளிக்கிறது...சரும வெடிப்புகளுக்கும், சொரசொரப்பிற்கும் சமனமளிக்கிறது...உங்கள் கரங்களை பளபளப்பாகவும், மிருதுவாகவும் விளங்கச் செய்கிறது.



குழந்தைகளுக்கு

நிவியா புண்களுக்கு இதமளிக்கிறது...குழந்தைகளின் இளஞ் சருமத்தை பராமரித்து பக்குவமாக பாதுகாக்கிறது.





சருமத்திற்கு நிச்சயமாக வேண்டுவது நிவியா

கல் சுவர்

கௌசிகன்

ஆதில்ஷாவின் அந்தரங்க அவை கூடி இருந்தது. அவசியமும் அவசரமுமான காலத்தில்தான் அப்படி அந்த அரசியல்கூட்டம் நடப்பது வழக்கம். அந்த அவையிலே பொறுக்கி எடுத்தாற் போல ஏழெட்டுப் பிரபுக்கள் மட்டுமே பிரசன்னமாகி யிருந்தனர். பீஜப்பூர் சுல்தான் முகம்மது ஆதில் ஷாவின் முகத்திலும் அப்படி யொன்றும் கவலைக் குறி எதையும் காணோம். சேனாபதி நவாப் முஸ்தபா கானின் முகத்தைச் சீற்றம் சிவக்க வைத்திருந்தது. ஆதில்ஷாவின் அருகிலே அவரது அன்புக்கும் அந்தரங்கத்துக்கும் பாத்திரமான ஷாஜி அமைதியாக உட்கார்ந்திருந்தார். ஷாஜிக்கு அரசாங்கத்திலும் அரசரிடமும் இருந்த செல்வாக்குப் பிறருக்குப் பொறாமையையும் பகைமையையும் வளர்ப்பதாக இருந்தது. அதுவும் முக்கியமாக முகமதியப் பிரபுக்களும் படைத்தலைவர்களும் 'ஒரு காபிருக்கு இத்தனை கௌரவமா?' என்று வயிறெரிந்து கொண்டிருந்தார்கள். உல்லாசப் பிரியரான ஆதில்ஷா பீஜப்பூரின் மானங்காத்த ஷாஜியின் தீரத்துக்கும் அரசியல் நிர்வாகத் திறமைக்கும் மதிப்பளித்துக் கௌரவித்தார். இது ஷாஜிக்கு நாட்டிலே பல விரோதிகளைச் சம்பாதித்துக் கொடுத்தது. எப்போது சமயம் வாய்க்கும் என்று காத்திருந்தார்கள் பொறாமைக்காரர்கள். அவர்கள் காத்திருந்தது வீண் போகவில்லை.

ஷாஜியின் மைந்தன் சிவாஜி சுதந்திர தாகம் கொண்டு சீறி யெழுந்தான். தனியரசு காணத் துடித்த அவன் தடதடவென்று பீஜப்பூர் சுல்தானின் ஆளுகைக்கு உட்பட்ட கோட்டைகளை ஒவ்வொன்றாகத் தன் வசமாக்கிக் கொள்ளலானான்.



ஆதில்ஷாவின் அவையிலே பொறுப்பான பதவி வகிக்கும் சிவாஜியின் தந்தை—சுல்தா வின் அன்புக்குப் பாத்திரமானவர். மகனோ சுல்தானின் ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்து பல கோட்டைகளைக் கைப்பற்றித் தனதாக்கிக் கொண்டிருக்கிறான். இது போதாதா பொறாமைக்காரர்களுக்கு?

நல்ல மனம் படைத்த ஆதில்ஷாவின் உள்ளத்திலே நஞ்சூட்டவே அன்று அந்தரங்க அவையில் கூடியிருந்தார்கள் அத்தனைபேரும். நவாப் முஸ்தபாகான் படபடப்பாகப் பேசினார். "பாதுஷா இதைப் பதினாறுவயதுப் பாலகனின் விளையாட்டுச் செய்கை என்று அலட்சியமாக எண்ணி விடக்கூடாது. இளங் கன்றின் பயமறியாச் செய்கை என்று சமாதானம் கூறுகிறார் சாரேறுப் ரந்துலாகான். ஆனால் பாய்ச்சல் காளைகளைப் பாரதத்திலே எப்படி உருவாக்குகிறார்கள், தெரியுமா? துள்ளித் திரிகின்ற கன்றின் பருவத்திலிருந்தே அதைத் தன்னிச்சையாக வளரவிடுகிறார்கள். அப்படி வளர்ந்துவிட்ட அதைப் பிறகு யாராலுமே அடக்கிப் பிடிக்க முடியாது."

ஷர்ஸாகான் வெளுப்புச் சாயமேற்றிய தன் அழகிய தாடியைத் தடவி விட்டபடியே முஸ்தபா மூச்சு விடாமல் பேசியதைக் கேட்டு மெல்ல நகைத்தார். "மொகலாயர் பீஜப்பூரை முற்றுகை விட்டபோது கூட நவாப் முஸ்தபாகான் இத்தனை ஆவேசம் காட்டவில்லையே. ஆனால் தோரணக் கோட்டையைத் தன்னிலையறியாச் சிறுவன் ஒருவன் தனதாக்கிக் கொண்டதற்காக இத்தனை ஆக்ரோஷமடைவதை நினைக்கும்போதுதான் ஆச்சரியமாக இருக்கிறது." அந்த அவையிலே ஷாஜியின் அன்புக்கும் நட்புக்கும் உரிய அன்பர்களும் இருந்தார்கள். ரந்துலாகானும் ஷர்ஸா கானும் ஷாஜியிடம் அபிமானமுடையவர்கள். "அப்படி அந்தச் சிறுவனும் அந்நியன் இல்லையே, நம் மதிப்புக்குரிய பாதுஷாவின் அன்புக்குப் பாத்திரமான ஷாஜியின் புதல்வர்தானே சிவாஜி" என்றார் ரந்துலாகான். முஸ்தபாகானின் முகம் சிவந்தது. "நம் கையால் நம் உடலில் காயமுண்டாக்கிக் கொண்டால் வேதனை இருக்காதா? இன்று கோட்டைச் சுவரிலே முளைத்துள்ள செடியை அலட்சியமாக எண்ணலாம். ஆனால் அதே சின்னஞ்சிறிய செடி மதிள் சுவரையே பிளக்கும் வலுவுள்ள மரமாக வளரும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்."



சுகமாகத் திண்டிலே சாய்ந்து கண்களை மூடியபடி ஹூக்காவை ரசித்துக் கொண்டிருந்தாலும் ஆதில்ஷாவின் காதுகள் மூடியிருக்கவில்லை. தம் அவைப் பிரபுக்களின் அந்தரங்கத்தையும் ஒருவாறு புரிந்துகொண்டு தானிருந்தார் அவர். ஆகவே, "ஷாஜி போன்ஸ்லே! இது விஷயமாகத் தாங்கள் அபிப்பிராயம் ஏதும் சொல்லாமல் மௌனம் சாதிக்கிறீர்களே" என்று கேட்டார்.

"நான் சொல்லுவதற்கு ஏதுமில்லை, பாதுஷா. அப்படி ஏதாவது சொன்னாலும் முஸ்தபாகான் அதற்கு விபரீதமான வியாக்யானம்தான் கொடுப்பார். வீண் மனக் கசப்பை வளர்ப்பானேன்?" என்றார் ஷாஜி.

அவருக்கும் தம் மகனின் செய்கை விபரீதமாகத்தான் பட்டது.

“ஷாஜி போன்ஸ்லே சாகஸமாகப் பேசி என்னை முட்டாள் என்று ஆதில்ஷா அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதைவிடத் தம் அருமை மகன் தோரணக் கோட்டையைத் தன் வசமாக்கிக் கொண்டது தவறான செய்கையல்ல என்று சொல்லிவிடலாமே!” குரோதம் பொங்கச் சீறினார் முஸ்தபாகான்.

முஸ்தபாகானின் வாதத்தை முறியடிக்க முனைந்து நின்றார்கள் ஷர்ஸாகானும் ரந்துலாகானும். “கொள்ளையர்களின் கொடுமையிலிருந்து மக்களைக் காப்பாற்றக் கோட்டையிலோ காவலன் இல்லை. அந்த நிலையில் சிவாஜி அங்கு சென்று குடிமக்களின் பயத்தையும் பரபரப்பையும் போக்கியதை நாம் பாராட்டத்தான் வேண்டும்” என்று சிவாஜியின் செய்கைக்குப் பரிந்து பேசினார் ஷர்ஸாகான்.

அட்டகாசமாகச் சிரித்தார் முஸ்தபா. அதிலே அனல் பறந்தது. “விந்தையான வாதம். மழைக்காலத்திலே தோரணக் கோட்டையிலே தங்கி இருப்பது தற்கொலைக்கு ஒப்பான செயல் என்பதையும் கோட்டையின் அதிபதி தனது படையுடன் அடிவாரத்தில் மாரிக்காலம் முடியும்வரை முகாமிட்டிருப்பதுதான் வழக்கம் என்பதையும் ஷர்ஸாகான் அவர்கள் அறியாதவரில்லையே! அப்படி இருந்தும்....”

“அதற்காகக் கோட்டையில் வாழும் மக்களுக்குப் பாதுகாப்பில்லாமல் பரிதவிக்கவிட்டு வரலாமா?”—இது ரந்துலாகான்.

ஜாஃகானின் கர்வு குளிர்ந்ததோ, அல்லது இவர்கள்வாதத்திலே அலுப்புத் தட்டியதோ, ஆதில்ஷா நிமிர்ந்து உட்கார்ந்தார். “இந்தச் சின்ன விஷயத்துக்கு ஏன் இத்தனை குழப்பம்? நமது ஷாஜியின் புதல்வன்தானே சிவாஜி? விரோதியல்லவே? அவனையே அந்தக் கோட்டைக்கு அதிபதியாக்கி விட்டால் போகிறது. என்ன ஷாஜி, நான் சொல்லுவது சரிதானே?” என்றார்.

ஷாஜியின் முகத்திலே வெற்றி எக்காளமிட்டது. “ஆலம்பனாவின் அன்பிலே என்றுமே எனக்கு அவநம்பிக்கை கிடையாது. ஆனால்...” என்று அரைக்கண்ணால் முஸ்தபாகானைப் பார்த்து, “நவாப்! முஸ்தபா கான் தங்கள் முடிவை ஏற்கவேண்டுமே?” என்றார்.

நிலைமை தலைகீழாகி விட்டது. தோல்வி தம்மை நோக்கி எள்ளி நகையாடுகிறது என்பதை உணர்ந்து கொண்ட முஸ்தபாவின் முகம் தொங்கி விட்டது. நிமிராத தலையுடன் தளர்ந்த குரலில், தரையைப் பார்த்தவாறே, “பாதுஷாவின் முடிவு அதுவானால் பிறகு நான் பேசுவதற்கு ஏதுமில்லை” என்றார்.

ஆதில்ஷா அத்தகைய முடிவுக்கு வருவதற்குக் காரணமில்லாமலுமில்லை. சிவாஜி தன் செயலுக்குச் சமத்காரமான சமாதானம் சொல்லி விடுத்திருந்த ஓலைதான் அது. பீஜப்பூர் அரசின் நன்மையைக் கருதியே தான் அந்தக் கோட்டையைக் கைப்பற்றியுள்ளதாகவும் இதுவரை அந்தக் கோட்டையிலிருந்து கிடைத்து வந்த இறைப் பணத்தைத் தான் இரட்டிப்பாக்கித் தருவதாகவும் அடக்கமாக எழுதி ஆசையும் காட்டி இருந்தான்.

சிவாஜியின் உள்ளத்திலே உருவாகிக் கொண்டிருக்கும் எரிமலையை பாவம், ஆதில்ஷா அறிந்து கொள்ளவில்லை.

மாவலி வீரரிடையே ஒரு மகாராஷ்டிர ஜீவன் உதயமாகி விட்டது. தாழ்வுற்று அடிமைப்பட்டு அன்னியருக்கு அடங்கிக் கிடக்கும் ஆத்மாக்களை ஆவேசங்கொள்ளச் செய்ய ஒரு அற்புத வீரன் தோன்றிவிட்டான் அன்னை ஜீஜாபாயின் உதிரத்திலே. ‘இந்து தர்மத்தைக் காப்பேன்’ என்று சபதமிட்டு, ‘ஜெய் பவானி!’ என்று வீராவேசம் கொண்டெழுந்த மைந்தனைக் கண்டு இந்தியத்தாய் இறும்பூதெய்தினாள்.

அன்னை ஜீஜாபாயும் தன் அன்பு மகனைப் பற்றி நினைத்தபடிதான் உட்கார்ந்து கொண்டிருந்தாள். சற்று முன்புதான் தூதுவன் வந்து கொண்டனாக் கோட்டை சிவாஜியின் வசமாகிவிட்டது என்ற செய்தியைச் சொல்லி விட்டுப் போயிருந்தான். பதின்மூன்று வருஷங்களுக்கு முன்னால் அதே கோட்டையில் தானும் தன் மூன்று வயது மகனும் சிறைப் பட்டிருந்ததை நினைத்துக் கொண்டாள் அன்னை. தன் உடலோடு ஒட்டிக் கொண்டிருந்த சிவாஜியைப் பிரிக்க அன்னியனொருவன் முயன்றபோது அந்த நீசனின் கையைக் கடித்து உதறினான் குழந்தை. அதை நினைத்துக் கொண்ட ஜீஜாபாயின் கண்களில் நீர் நிறைந்தது.

அதே சமயத்தில் “அம்மா!” என்று அழைத்தபடியே உள்ளே வந்த சிவாஜி ஜீஜாபாயின் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டு அன்னையின் அருகே அமர்ந்து கொண்டான்.

தன் அருமை மைந்தனின் உச்சி முகர்ந்து உள்ளம் குளிர்ந்த ஜீஜா, “சிவா! உன்னைப் பெற்ற பொழுதைவிட இன்பமடைகிறது என் மனம். பகைவர்களுக்கு உன் பெயர் சிம்ம சொப்பனமாக இருக்கும்படி அன்னை பவானி அருள் புரியட்டும். கொண்டனாக் கோட்டைக்கு சிம்ஹகட் என்றே பெயரிடு” என்றாள்.

“ஆகட்டும் அம்மா! நாளையே நீங்கள் சிம்ஹகட்டிற்குள் பிரவேசிக்க வேண்டும்.”

“சிவா...” என்று ஏதோ சொல்ல வந்தவள் குரல் அடைபட மௌனமானாள். தாயின் நிலை கண்டு தவித்துப் போனான் சிவாஜி.

“ஏனம்மா தங்கள் கண் கலங்குகிறது?”

“ஒன்றுமில்லை சிவாஜி. உன் வீர வாழ்வை, வெற்றிப் பிரதாபங்களைக்கண்டு நான் மகிழும் இந்தப் பாக்கியத்தில் பங்கு கொள்ளக்கூடிய இன்னொருவர் இங்கு இல்லையே என்றுதான்...” மறுபடியும் முடிக்காமலே மௌனமானாள் மராட்டிய குல மாதரசி.

“யார்? காலமாகிவிட்ட என் குருதேவர் தாதாஜி கொண்டதேவைச் சொல்லுகிறீர்களா தாயே?” என்று கேட்டான் சிவாஜி.

“இல்லை சிவா...உன் தந்தை......” என்று சொல்லிவிட்டு எங்கோ நெடுந்தூரத்தில் தன் பார்வையைப் பதித்தாள். தன்னையும் தன் தாயையும் புறக்கணித்து விட்டு வேறொருவளின் வாழ்க்கையை வளம்பெறச் செய்து கொண்டு அன்னியனுக்குத் தன் வீரத்தை விலை பேசி வாழும் தந்தையின் நினைவு சிந்தையிலே சுழன்றதோ என்னவோ, சிவாஜி



மணமுள்ள சார்மிஸ் டால்கம் பௌடர் உபயோகித்தபின் நீங்கள் பெறும் உணர்ச்சிகள் இவை. சார்மிஸ் குளுமையும் புத்துணர்ச்சியும் அளிக்கிறது... உன்னத மனோரம்மிய மணம் கொண்டது.



சார்மிஸ்

உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பௌடர்!

CHTP/8/9 TAM

யின் முகம் சிவந்தது. ஆனாலும் அமைதியாகவே, "அம்மா! எனக்குத் தந்தையும் நீங்கள்தான். எனக்கு நினைவு தெரிந்ததிலிருந்து சுகத்தையே அனுபவிக்காத சோகம் நிறைந்த உங்கள் முகத்தைத்தானம்மா நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். சுக வாழ்வு, பதவி, கௌரவம் இவைகளுக்காக அன்னியனுக்குத் தலை வணங்கும் தந்தையைப் பற்றிய எண்ணம் என்றுமே என் மனத்தில் இடம் பெற்றதில்லை" என்றான்.

"சிவா! இப்படியெல்லாம் பேசாதே!" என்றாள் அன்னை. அவள் கண்களில் நீர் முத்துக்கள் திரண்டு, உதிரத் துடித்துக் கொண்டிருந்தன.

"பின் எப்படியம்மா பேசச் சொல்லுகிறீர்கள்? மாற்றானுக்கு மண்டியிட்டு, தன் மகன் வணங்க மறுத்துவிட்டானே; அதனால் தான் மகிமையாக வாழும் வாழ்வுக்கு ஆபத்து வந்துவிடப் போகிறதே என்று பெற்ற மகனையும் உற்ற மனைவியையும் எங்கோ ஓட்டி விட்டாரே, அப்படிப்பட்டவரிடமா தந்தைப் பாசம் பிறக்கும்? கல்வி கேள்விகளில் வல்லவனாக்க வேண்டிய பொறுப்பும் கடமையுமுள்ள தந்தையால் உதறப்பட்ட என்னைத் தாங்கள்..." சிம்மக்குரல் கம்ம நாத்தழுதழுக்க உணர்ச்சி வசப்பட்டவனாகப் பேசினான் சிவாஜி. "தாங்கள் கண்ணீரால் வளர்த்தீர்கள். எத்தனையோ வேதனையிலும் கதைகள் சொல்லி என் ரத்தத்திலே வீரத்தைக் கலந்தீர்கள். அம்மா எனக்கு நீங்கள்தான் தாய், தந்தை, தெய்வம்-என்.சகலமும்..."



வீர மகனைப் பெற்ற அன்னையின் கண்களும் குளமாயின. "கண்ணே சிவா! என் செல்வமே! உன்னால்தான் என் சிறுமையை எல்லாம் மறந்து கொண்டிருக்கிறேன்" என்றாள்.

"எந்த அரச சேவகமும் அந்தஸ்தும் பெரிதென்று நம்மைப் புறக்கணித்தாரோ, அதையும்விட உயர்ந்த சம்பத்தை உங்கள் காலடியில் கொண்டு வந்து குவிக்கிறேனம்மா. எந்த சுல்தானுக்கு என்னை மண்டியிட்டு வணங்கும்படி சொன்னாரோ அதே பீஜப்பூர் சுல்தானை, உங்கள் ஆசியும் அன்னை பவானியின் அருளும் இருக்குமானால் உங்கள் பாதங்களிலேயே வந்து விழச்செய்வேன், அம்மா!"

அன்னை தான் பெற்ற செல்வனின் சிரத்தை வருடியபடியே ஆனந்தக் கண்ணீரோடு "சிவாஜி, உன் புகழ் இந்துஸ்தானம் முழுதும் பரவ வேண்டும். தருமத்தின் காவலன், அன்பின் இருப்பிடம், ஆண்மையின் பிறப்பிடம், விடுதலை வீரன் என்றெல்லாம் மக்கள் உன்னைப் போற்றிப் புகழ வேண்டுமடா, கண்ணே!" என்றாள்.

"அது இல்லையம்மா, தாய்க் குலத்தின் அன்பை, பெண்மையின் சகிப்புத்தன்மையைப் பற்றிப் பேசும்போதெல்லாம் உலகோர் உங்கள் பெயரைச் சொல்லவேண்டும். ஒவ்வொரு தாயும் தன் மகனுக்குப் பாலூட்டி வளர்க்கும்போதும் 'ஜீஜாபாய் சிவாஜியை எப்படி வீரனாக்கினாளோ, அப்படியே என் மகனையும் நான் இந்த இந்துஸ்தானத்தின் ஏற்றத்துக்கு உருவாக்கித் தருவேன்' என்று உங்கள் பெயரை நினைவில் கொண்டு சபதம் செய்து கொள்ளுவார்களம்மா" என்றான் சிவாஜி பெருமை பொங்க.

★

"சபதம் செய்திருக்கிறான் ஷாஜியின் மைந்தன்..." என்று முகம் சிவக்கக் கூறிக்கொண்டே ஆலோசனை மண்டபத்துக்குள் நுழைந்தார் முஸ்தபாகான். அவர் வரவை எதிர்நோக்கி இருந்தது போலவே எல்லோர் முகங்களும் ஆவலை வெளியிட்டன. இன்றைய ஆலோசனை மண்டபத்தின் போக்கே வேறு விதமாக இருந்தது. அங்கு ஷாஜி இல்லை. சுல்தானுக்கு வெற்றி தேடித்தர அவர் செஞ்சி முற்றுகையிலே ஈடுபட்டிருந்தார். ஷாஜியின் ஆதரவாளர்களும் இல்லை. இருந்தாலும், அவர்களின் வார்த்தைகள் எடுபடாது நிலைமையை மோசமாக்கியிருந்தன சிவாஜியின் செய்கைகள்.

"பாதுஷா அவர்களை இந்துஸ்தானத்தை விட்டே ஓட்டிவிட்டு ஒரு பரந்த இந்து சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போவதாகச் சபதம் செய்திருக்கிறானாம் ஷாஜியின் மகன் சிவாஜி" என்றார் முஸ்தபா கான்.

ஆதில்ஷாவின் முகம் சினத்தால் சிவந்தது. "அறியாப் பையனின் அசட்டுக் காரியம் என்று அலட்சியமாக இருந்தது எத்தனை ஆபத்தாகி விட்டது என்பதை இப்போது தான் உணர்கிறேன், முஸ்தபா!" என்றார்.

"ஆதியிலேயே எச்சரித்தேன், முளையிலேயே கிள்ளிவிட வேண்டுமென்று. தகாத முறையில் தோரணக் கோட்டையைத் தனதாக்கிக் கொண்டவனைத் தட்டிக்கொடுத்துத் தலைவனுமாக்கினீர்கள். வைக்கோல் போரில் விளக்கை வைத்து மூடுவது போலக் கொள்ளைக்காரனுக்குத் துணிவு கொடுத்து வளர்த்து விட்டீர்கள்." சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு இடித்துரைத்தார் முஸ்தபா கான்.

"ஒன்று, இரண்டா? ஒன்பது கோட்டைகளில் இன்று மராட்டியரின் கொடி பறக்கிறது. கொண்டனா 'சிம்மகட்'டாயிற்று. மோர்பந்த் 'ராஜகட்'டாயிற்று" என்று பட்டியல் தயாரித்தார் ஒரு பட்டாணியப் பிரபு.

"புரந்தர்கோட்டை நம்மிடமிருந்து பறி போயிற்று. கல்யாண் நகரைக் கொள்ளையிட்ட கொடுமையை நினைத்தால் என் ரத்தம் கொதிக்கிறது பாதுஷா. பாலகன் என்று

தாங்கள் பாராட்டிய மராட்டியனின் பலம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கிறது'' என்றபோது முஸ்தபாவின் உடலே துடித்தது.

முஸ்தபாவின் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை ஆதில்ஷாவினால். ''மோசம் போய் விட்டேன் முஸ்தபா. அன்றே உன் எச்சரிக்கையைக் கேட்டிருந்தால் இன்று பல கோட்டைகளை நாம் இழந்திருக்க வேண்டியதில்லை'' என்றார்.

''இன்னும்கூடக் காலம் கடந்துவிடவில்லை பாதுஷா!'' என்றது ஒரு குள்ளநரிக் குரல். பேசியது பாஜிகோர்படே என்ற மராட்டிய வீரன்தான். உடன்பிறந்தே கொல்லும் வியாதியைப் போல ஷாஜியின் செல்வாக்கைக் கண்டு பொறாத சேனாபதி அவன். சமயத்தை எதிர்பார்த்திருந்தான்.

ஆதில்ஷா அவனை அர்த்தபுஷ்டியோடு நோக்கினார். பிறகு ''அந்த சிவாஜியின் செயல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும், பாஜி!'' என்றார்.

நயவஞ்சக நரி நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு பேசிற்று: ''அந்த அட்டூழியக்காரனின் தந்தை இன்னும் தங்கள் அன்புக்குப் பாத்திரமான அரசாங்க ஊழியராகத்தானே இருக்கிறார்? மகனின் செய்கைகளைக் கண்டித்து அவர் ஏன் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை?''

''எப்படி எடுப்பார்? மகனின் செய்கைகளுக்கு உடந்தையாக, உற்சாகப்படுத்துபவராக இருக்கும் போது'' என்றார் ஏகத்தாளமாக முஸ்தபாகான்.

''நீங்கள் சொல்லுவது போலத் தம் மகனின் தகாத செயல்களுக்கு ஷாஜியின் ஆதரவு இருக்குமென்று நான் நினைக்கவில்லை. தந்தையை மதிக்காத தனயன் அவன். தன் தாயை ஒதுக்கி விட்டு வேறொரு பெண்ணை மணந்து கொண்டதற்காக அந்த சிவாஜி தன் தந்தையின் மீது வெறுப்பும் ஆத்திரமும் கொண்டிருக்கிறான். இவரை அவன் லட்சியமே செய்வதில்லை'' என்றார் ஆதில்ஷா.

இந்த நிலையிலும்கூட சுல்தானுக்கு ஷாஜியின் பேரில் உள்ள நம்பிக்கையைக் கண்டு திகைக்கத்தான் செய்தார்கள் அவையிலிருந்த ஷாஜியின் வைரிகள். கோடரிக் காம்பான பாஜிகோர்படே மெள்ள நகைத்தவாறே, ''என்ன இருந்தாலும் உறவு விட்டுப்போகுமா பாதுஷா? பாசந்தான் பட்டுப் போகுமா? ஷாஜி உண்மையாகவே தமது மகனின் செயல்களை வெறுப்பவரானால் மகனைக் கண்டித்துக் கடிதம் எழுதித் தகுந்த நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா?'' என்றான்.

''அப்படியானால் இதற்கு ஒரு முடிவு காண வேண்டுமே'' என்ற ஆதில்ஷாவின் முகத்தில் கவலை கனத்துக் கிடந்தது.

''முஸ்தபா மீது தங்களுக்கு நம்பிக்கை இருக்குமானால் ஒரு வழி சொல்லுகிறேன். 'மகன் சிவாஜி தர்பாரிலே வந்து ஆஜராக வேண்டும்' என்று ஷாஜிக்குக் கட்டளையிடுங்கள்; அதற்குக் கெடுவும் வையுங்கள். நீங்கள் அவருக்கு அளித்துள்ள மதிப்புக்குத் தகுதியானவர்தானா என்பதைப் பரீட்சிக்க இதுவே சரியான சந்தர்ப்பம்'' என்றார் சேனாபதி முஸ்தபாகான்.

''உண்மையாகவே தம் மகனின் செய்கைகளை ஷாஜி வெறுப்பவரானால் முஸ்தபா சொல்வது போல் சிவாஜியை இங்கு வரவழைக்கட்டும். தாயின் சொல்லை ஒரு நாளும் தட்டமாட்டானாம் சிவாஜி. மகனை அனுப்பி வைக்கும்படி மனைவிக்காவது கட்டளையிட்டுக் கடிதம் எழுதட்டுமே?'' என்றான் பொறாமைக்கார பாஜிகோர்படே.

அதற்கு மேல் யாருமே ஆதில்ஷாவுக்கு யோசிக்க அவகாசம் அளிக்கவில்லை. உத்தரவை எழுதி முத்திரை மோதிரத்தையும் அதில் பதித்து வாங்கிக் கொண்ட பிறகே அவரை ஜனானாவுக்குப் போக விட்டார்கள்.

★

தந்தையின் கடிதத்தைப் படித்து விட்டுக் கடகடவென்று நகைத்தான் சிவாஜி. அடுத்த விநாடி அவன் கண்கள் சிவந்தன. மீசை துடித்தது. என்ன ஆகுமோ என்று நடுங்கியபடி நின்று கொண்டிருந்தான் தூதுவன்.

''பாரதத் தாயின் மடியிலே பிறந்தவனுக்கு இல்லாத உரிமை எங்கிருந்தோ வந்த இந்தப் பாதுஷாவுக்கு எப்படிவந்தது?'' சிங்கமென கர்ஜித்தான் சிவாஜி. ''நான் பிடித்த கோட்டைகளை விடவும் மாட்டான், அதற்குக் கப்பம் தரவும் மாட்டான், ஆதில்ஷாவின் அவையிலே வந்து தரையைத் தொட்டு முத்தமிட்டு அவைகளைத் தானமாகத் தருமபடி கெஞ்சவும் மாட்டான் இந்தச் சிவாஜி. வீரத்தினால் பெற்றது, அன்னை பவானியின் அருளினால் அடைந்தது. இதை அன்னியன் கையிலே ஒப்படைக்க மாட்டேன்'' என்றான்.

இடி முழக்கத்தின் முடிவிலே ஈனஸ்வரத்தில் தூதுவன் குரல் கரகரத்தது. ''இந்தப் பதற்றமான பேச்சு தங்கள் தந்தையின் பத்திரத்துக்கு அபாயத்தை விளைவிக்கும் என்பதை...'' அவன் முடிக்கவில்லை. சிவாஜியின் குரலே அதிர்ந்தது.

''நன்றாக அறிந்துதான் பேசுகிறேன். அரசபோகமும், அடிமை வாழ்வும் ஆனந்தமென்று நம்பி, ஆண்டி பரதேசியைப் போல எங்களை வாழ வைத்தார்—ஆதில்ஷாவின் அவையை அலங்கரிக்கும் உங்கள் ஷாஜி அவர்கள். இன்றைக்கு எனக்கு உத்தரவிட அவருக்கு என்ன உரிமை இருக்கிறது? அவர் தந்தையைப் போல நடந்து கொண்டிருந்தால் நானும் தனயனுக்கு உரிய கடமையை மறக்காமல் மதிப்போடு செய்வேன்.''

''இந்தச் செய்தியுடனேயே நான் திரும்பலாம் அல்லவா?'' என்றான் தூதுவன்.

''இதையும் போய்ச் சொல் உன் பாதுஷாவிடம். நான் பிடித்த கோட்டைகளை என்னிடமிருந்து திருப்பப் பெறும் எண்ணத்தைக் கைவிட்டு அவைகளின் மன்னனாக எனக்கு மதிப்புக் கொடுத்துப் பேசுவதானால் சிவாஜி ஆதில்ஷாவின் தர்பாருக்கு விஜயம் செய்வார் என்று போய்ச் சொல், போ'' என்றான் மகாராஷ்டிரத்துக்கு மகத்துவத்தைத் தேடிக் கொடுத்த மன்னன் சிவாஜி.

சிவாஜியின் பதில் கேட்டுப் பதற்றமடைந்தார் பாதுஷா. அவர் கோபத்துக்குத் தூபமிட்டார்கள் முஸ்தபாவும், துரோகி பாஜி கோர்படேயும்.

''எல்லையோரத்துக் கோட்டைகளைக் கைப்பற்ற மகனுக்குத் துணிவுண்டாகத் திட்டம் வகுத்துக் கொடுத்துவிட்டுத்தான் உள்ளிருந்தபடியே சதி செய்து நாட்டைச் சூறையாடி முடிசூடிக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறான் எத்தன் ஷாஜி'' என்று புனைந்துரைத்துப் போதனை செய்தார்கள் புலவர்கள்.

சூழ்ச்சிக்காரர்களுக்கு ஏற்றபடி சூழ்நிலையும் சதி செய்தது. ஷாஜி தலைமை தாங்கி நடத்திய செஞ்சிப் போரிலே பீஜப்பூர் படைகள் பெருந்தோல்வி அடைந்து வந்தன. இதை ஷாஜியின் விதி என்றுதான் சொல்ல வேண்டும். 'செஞ்சிப் போர்க்களத்திலே வஞ்சகம் புரிகிறார் — துரோகியாக மாறிவிட்ட ஷாஜி' என்று சதிகாரர்கள் இதைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு ஆதில்ஷாவின் ஆத்திரத்தை வளர்த்தார்கள். முடிவு?...

முஸ்தபா பீஜப்பூரின் பிரதம சேனாபதியாக்கப்பட்டார். பாஜிகோர்படே ஷாஜியைக் கைது செய்துகொண்டு வரவேண்டும் என்று ஏற்பாடாயிற்று.

பாஜியினால் வஞ்சகமாகக் கைது செய்யப்பட்ட ஷாஜி, பீஜப்பூருக்குக் கொண்டு வரப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டதும் வீர சிவாஜிக்கு ஓலை போயிற்று.

'ஷாஜியைச் சிறைவைத்துள்ள அறையின் ஒரே வழி; அவன் மகன் சிவாஜி பீஜப்பூரின் சபையில் சரணடையத் தாமதமாகும் ஒவ்வொரு நாளும் ஒரு வரிசைக் கற்களாக மாறிச் சுவர் உயர்ந்து கொண்டே போகும். குறிப்பிட்ட தினத்துக்குள் பாதுஷாவின் பாதங்களைத் தொட்டு முத்தமிட சிவாஜி வராவிடில் ஷாஜியை உயிரோடு சிறையில் வைத்து மூடிச் சமாதியும் கட்டப்படும். தந்தையை உயிரோடு காண வேண்டுமானால் உடனே ஓடி வந்து சரணடைந்து விட வேண்டும்.''

சிவாஜிக்குச் செய்தி அனுப்பிவிட்டுச் சிந்தை மகிழ்ந்திருந்தார்கள் 'ஷாஜியின் விரோதிகள். ஷாஜியைச் சிறை வைத்துள்ள அறையில், காற்றும் வெளிச்சமும் வரக்கூடிய ஒரே வழியான வாயிலை மறைத்துக் கொண்டு சுவர் வளரலாயிற்று. ஒரு காலத்தில் பீஜப்பூரின் வாழ்வை உருவாக்கியவரின் உயிர் இன்று இருட்டறையிலே ஊசலாடிக் கொண்டிருந்தது. தம் முந்தைய கடிதங்களை மதிக்காததால், ஷாஜி தம் நிலையை—தம்மைக் கைது செய்து சிறையிலடைத்திருப்பதை — சிவாஜிக்கு அறிவிக்கவில்லை. வெறுப்பும் வேதனையும், விரக்தியும் சூழுறக் கொந்தளிக்கும் உள்ளத்துடன் இருட்டறைக்குள்ளே குறுகும் நெடுக்கும் உலவி உலவி உரு மாறிப் போனார். அவருக்கு அவர்மீதே வெறுப்பு மூண்டது. ஆத்திரத்துடன் சுவரைத் தம் முஷ்டியால் ஓங்கி ஓங்கி அறைவார். தசை வெடித்து ரத்தம் பெருகும். ரத்தத்தைக் கண்டு வீர முழக்கம் செய்தவர் விம்மி விம்மி அழலானார். உயிர் ஆசையினால் அல்ல. உதவாக்கரைகளால் இப்படி வஞ்சிக்கப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டோமே என்ற அவமான உணர்ச்சிதான் அழுகைக்குக் காரணமாக இருக்க வேண்டும். அசையாச் சிலையாக உட்கார்ந்திருப்பவர் திடீரென்று



''எலிஸபெத் ராணியைப் போய்ப் பார்த்தீங்களா?''

''இல்லை!''

''ஏன்?''

''பார்க்கிறதுக்கு 'பர்மிஷன்' தர மாட்டேன்னு சொல்லிட்டாள் என் வீட்டுராணி...!''

வாய்விட்டுக் கடகடவென்று சிரிப்பார். அவரது நிலை கண்டு சிறைச்சாலைக் காவலாளிகள்கூடப் பரிதாபப்பட்டார்கள். இப்படியே இருந்தால் சித்தப்பிரமை ஏற்பட்டுவிடலாம் என்று பயந்தார்கள்.

ஒவ்வொரு நாளும் காலையில் கொத்தர்கள் வந்து சுவரில் புதிய வரிசைக் கற்களைப் பதித்து அதன் உயரத்தை அதிகமாக்கிவிட்டுப் போவார்கள். இப்போதெல்லாம் ஷாஜியின் வாய் 'சிவாஜி சிவாஜி' என்றே திரும்பத் திரும்ப உச்சரித்துக் கொண்டிருந்தது.

''பெற்றவனின் கடமையை நான் செய்திருந்தாலல்லவா பிள்ளையிடம் உரிமையோடு உதவியை எதிர்பார்க்கலாம்.'' விரக்தியோடு தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்.

''பெற்றோரைத் தெய்வமாக மதிப்பவன் என்று தாதாஜி எழுதி யிருந்தாரே—நீயாவது உன் மகனுக்குச் சொல்லக் கூடாதா ஜீஜா?'' ஷாஜியின் நெஞ்சைத் துக்கம் வந்து அடைத்துக் கொண்டது. ''நீயும்தான் எப்படிச் சொல்லுவாய்? உனக்கு நான் எத்தனை கொடுமை இழைத்து விட்டேன்? உன் தகப்பனார் குலப்பெருமை பேசி என்னை இழிவாக நடத்தியதற்காக நான் உன்னைப் பழி தீர்த்துக் கொண்டேனே பாவி. இன்று நான் துன்பப்படும்போது உன்னை நினைப்பவன் இன்பத்திலே உன்னை எண்ணவே இல்லையே...'' உண்ணுமல் மூலையில் எறும்பு மொய்த்துக் கிடந்த உணவை எலி வந்து உருட்டிவிட்டு ஷாஜியின் மீது விழுந்துகொண்டு ஓடியது. ஈரம் கசிந்து துர்க்கந்தம் வீசும் அந்த இருட்டறையின் தரை எப்படி இருக்கிறது. அங்கு என்ன

ஓடுகிறது என்பதைக்கூட அறியாதபடி இருள் கப்பிக் கிடந்தது. அவர் படுத்து உறங்கிப் பல நாட்களாகிவிட்டன.

★

சில நாட்களாகவே சிவாஜியின் போக்கு அவன் தோழர்களுக்குப் புரியாத புதிராக இருந்தது. பீஜப்பூரிலிருந்து ஷாஜியைப் பற்றிய செய்தி வந்ததிலிருந்து தனிமையும் சிந்தனையுமே அவரைத் தழுவிக் கொண்டிருந்தன. அன்னை ஜீஜாபாயின் நிலையோ இன்னும் மோசமாக இருந்தது. தன்னைக்கூடக் காணவராத மகனுக்காகவே தவிப்படுவாளா? இல்லை, தன்னை மறந்தாலும் எங்காவது சுகமாக இருக்கிறார் என்று நிம்மதியுடனிருந்த கணவன் நிலையை எண்ணிப் புழுங்குவாளா?

குமுறும் உள்ளத்தோடு சிவாஜியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் ஜீஜாபாய்.

''அழைத்தீர்களாமே அம்மா?'' என்று கேட்டபடி குனிந்த தலையோடு அருகில் வந்த சிவாஜியின் பொலிவிழந்த முகத்தை நிமிர்ந்து பார்த்தாள் ஜீஜாபாய்.

''உன் தந்தையின் விடுதலை விஷயமாக என்ன செய்யப் போகிறாய் சிவா?''

''செய்வதற்கு ஏதுமில்லை.'' எங்கோ பார்த்துக்கொண்டு பதிலளித்தான் சிவாஜி.

''அப்படியென்றால்—''

''அவர் விடுதலையில் என் வீழ்ச்சி இருக்கிறது. கைப்பற்றிய கோட்டைகளை ஒப்படைத்து, பீஜப்பூர் சுல்தானின் முன்னால் போய்க்கைகட்டித் தலை கவிழ்ந்து குற்றவாளியைப் போல உங்கள் மகனை நிற்கச் சொல்கிறீர்களா அம்மா?''

மகனின் மனநிலை அறிந்த அந்த மாதரசி அவன் மதிமுகத்தைப் பார்க்காமலேயே, ''சிவாஜி, என் மனநிலையை நீ உணரவில்லை. என் கணவரை அங்கு உயிரோடு சிறையில் சமாதி கட்டிக் கொண்டிருக்க நான் எப்படியடா இங்கு அமைதியாக இருக்க முடியும்?'' பொங்கி வரும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் தவித்தாள் அன்னை. தாயின் கண்ணீரைக் கண்டும் கூட சிவாஜியின் முகத்தில் சலனம் ஏற்படவில்லை.



குரலில்கூடத் தான். ''நம் விஷயத்தில் அவர் ஒன்றுமே இல்லாதவராகத் தானே அம்மா இருந்திருக்கிறார்? இப்போது மட்டும் ஏன் இத்தனை பதற்றமடைய வேண்டும்?'' சாளரத்தின் அருகே சென்று பனி மூடிய மலைச் சிகரங்களைப் பார்த்தவாறு நின்றான் சிவாஜி.

''எங்கிருந்தாலும் எப்படி இருந்தாலும் என் மஞ்சளுக்கும் குங்குமத்துக்கும் பங்கம் வராமல் காத்துவரும் கணவரல்லவா அவர்?'' உணர்ச்சி வசப்பட்டுக் குரல் அடைபடக் கூறினாள் ஜீஜா.

சட்டென்று திரும்பினான் சிவா. அவன் கண்கள் நெருப்புத் துண்டங்களாக ஜ்வலித்தன. ''கணவருக்குள்ள கருணையை, அன்பை, ஆதரவை என்றாவது உங்களிடம் காட்டியதுண்டா, அம்மா? அறியாப் பருவத்திலே அவர் கைப் பற்றினீர்கள். அந்தஸ்தும் அரச போகமும் அவர் அறிவை மயக்கி ஆணவத்தை வளர்த்தபோது குலப்பெருமை பேசிய என் பாட்டனுக்காக உங்களைக் குலுங்கக் குலுங்க அழ வைத்தார். தாயையும் குழந்தையையும் கொஞ்சமும் இரக்கமின்றித் தம் வாழ்க்கையிலிருந்தே விலக்கி வெகு தூரத்துக்கு விரட்டிவிட்டு வேறொருத்தியின் காதலிலே மூழ்கிக் கிடந்தார். அப்படிப்பட்ட கணவருக்காகக் கண்ணீர்விட்டுக் கலங்குகிறீர்களே, அம்மா?''

கேட்கக் கூடாததைக் கேட்டு விட்டவள் போல, தீண்டக் கூடாததைத் தீண்டிவிட்டவள்போல உடல் கூச, கண்ணீர் உறை, விழிகளிலே வெறுப்பு வழிய சிவாஜியைப் பார்த்தாள் ஜீஜா.

''சிவாஜி! நீயா இப்படிப் பேசுகிறாய்? நமது ஹிந்து தர்மத்தை எல்லாம் உனக்குப் போதித்தேனே, அதன் பலன் இதுதானா? பாரதப் பெண்ணுக்குப் பதியே தெய்வம் என்பதை நீ அறியாயா? அல்லது நளாயினியின் கதைதான் மறந்து விட்டதா உனக்கு?''

''எதையும் நான் மறந்து விடவில்லையம்மா. ஆனால் உங்களுக்கு அவர் இழைத்த கொடுமை ஆறாத ரணமாக என் உள்ளத்திலே நின்று விட்டது...'' கனல் விழிகள் கண்ணீரால் நனைந்தன.

''உன் உணர்ச்சிகளை நான் அறிவேன்—ஆனால்—ஆனால்...'' பேசமுடியாமல் வெளிப்பட்ட விம்மல்களினூடே, ''உன் தந்தையின் உயிரை நீ காப்பாற்றித்தான் ஆகவேண்டும் சிவாஜி—'' என்றாள் ஜீஜா.

சிவாஜி தன் தாயின் அருகே வந்து ஆதரத்துடன் அவளைப் பார்த்தான். ''அம்மா! இப்போது நான் சரணடைந்துவிட்டால் இனி எப்போதுமே நான் எழுந்திருக்க முடியாதபடி என்னைச் செய்துவிடுவார்கள் பகைவர்கள். பிறகு பரந்த பாரத சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்ற என்னுடைய இட்டம் வெறும் பகற் கனவாகி விடுமே அம்மா.''

''பெற்ற தந்தை உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் நீ சாம்ராஜ்ய ஆசையைப் பற்றிப் பேசுவதை என்னால் காதுகொண்டு கேட்க முடியவில்லையடா சிவா'' என்றாள் ஜீஜா.

'பெற்ற தந்தை' என்று சிவாஜி சிரித்தான் விரக்தியோடு. சீறினாள் அன்னை அடிபட்ட புலியைப்போல. ''சிவாஜி, இது என்ன சிரிப்பு? ஆயிரமானாலும் அவர் என் கணவர். உன் தாய் உயிரோடு இருக்க வேண்டுமானால்...'' அவனை முடிக்க விடாமல் தவிப்போடு குரல்

நடுங்க, ''ஐயோ அம்மா இப்படி எல்லாம் சொல்லாதீர்கள். என் இதயம் வெடித்து விடும்'' என விம்மினான் சிவாஜி.

''உன் சாம்ராஜ்யக் கனவுகள் சரிந்தாலும் சரி. உன் தாய், நான் கட்டளையிடுகிறேன்.''

அன்னையின் காலடியில் விழுந்தான் சிவாஜி. ''சிரமேற் கொள்ளுகிறேன், சொல்லுங்கள் தாயே. என் கனவுகளை வளர்த்தவரும் நீங்கள்தான். ஹிந்து தர்மத்தையும் பாரதத்தின் பெருமையையும் கதை கதையாகச் சொல்லி என் உள்ளத்திலே சுதந்திரக் கனலை மூட்டி விட்டீர்கள். அதைக் கொழுந்துவிட்டு எரியச் செய்வதோ அல்லது அணைத்துவிடுவதோ இரண்டுமே உங்கள் கையில்தான் அம்மா இருக்கின்றன.''

பாதங்களைப் பிடித்துக்கொண்டு விம்மும் மைந்தனின் தலையைக் கோதியபடியே பேசினாள் ஜீஜா. குரலில் உறுதி கலந்திருந்தது. ''இப்போது என் லட்சியமெல்லாம் உன் தந்தையின் உயிரைக் காக்க வேண்டும் என்பதுதான். கைதியாகிப் பாதாளச் சிறையிலே பரிதவித்துக் கொண்டிருக்கும் அவருக்கு விடுதலை அளிக்க நம்மால் முடியும். அதுவும் உன்னால்தான் அது ஆகும். ஆகவே அதைக் கணமும் தாமதிக்காமல் நிறைவேற்று. இல்லாவிட்டால் முதலில் என்னைக் கொன்று விடு'' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு விம்மினாள் ஷாஜியின் பத்தினி.

உள்ளம் வெடிக்க 'ஓ'வென்று அலறினான் சிவாஜி. ''ஐயோ, அம்மா, இப்படிப்பட்ட வார்த்தையைச் சொல்வதற்குப் பதில் கூரிய வாள் கொண்டு என் நெஞ்சைப் பிளந்திருக்கலாமே அம்மா!'' சரேலென்று எழுந்திருந்தான் சிவாஜி. ''என்னை அத்தகைய கொடியவன்! என்று எண்ணி விட்டீர்கள்? இதோ இப்போதே பீஜப்பூர் போகிறேன். பாதுஷாவின் பாதங்களிலே விழுந்து, என் தாய்க்காக, அவள் கண்ணீரைத் துடைப்பதற்காக—என் தந்தையை விடுதலை செய்யுங்கள் என்று கெஞ்சுவேன். என் கரங்களை நீட்டி விலங்கை மாட்டுங்கள் என்று வேண்டுவேன். 'ஷாஜிக்குப் பதில் அவர் மகன் சிவாஜியைப் பாதாளச் சிறையிலே தள்ளி அடையுங்கள். உங்கள் கோட்டைகளைப் பிடித்துக் கொண்ட குற்றவாளி நான்தான்' என்று சொல்லி உங்கள் பதியை விடுதலை செய்கிறேனம்மா. 'சிவாஜி தன் தாயின் வேண்டுகோளை உதாசீனம் செய்தான்' என்ற உலகோரின் அபகீர்த்திக்கு மட்டும் ஆளாக மாட்டேன். இதோ இப்போதே போகிறேன் தாயே'' என்று சொல்லி வெளியேறலானான் சிவாஜி.

இருதலைக் கொள்ளியிடை எறும்பு போலத் துடித்துப் போனாள் யாதவ குலக் கொழுந்து. ''சிவா, கண்ணே சிவா! நீ—ஆத்திரத்திலே ஏதேதோ பேசி உன் மனத்தைப் புண்படுத்தி விட்டேனடா கண்ணே! கண்ணை இழந்து எப்படி வாழ முடியும்? யாருக்காக வாழ வேண்டும்? நீயும் சிறைப்படாமல் உன் தந்தையையும் விடுவிக்க மார்க்கம் ஏதுமில்லையா, கண்ணே?'' என்று கலங்கிய கண்களோடு தன் கண்மணியைப் பார்த்தாள்.

தாயிடம் இன்று இப்படிப் பேசினாலும், ஆதில்ஷாவின் ஓலை வந்ததிலிருந்து சிவாஜியின் சிந்தனை எல்லாமே தாயார் கேட்ட அதே கேள்விக்கு விடை காண்பதிலேயேதான் இருந்தது. தந்தைப் பாசமென்று சொல்ல முடியாது அதை. குல கௌரவத்தை நிலை நாட்டத் துடித்தது மகாராஷ்டிர ஜீவனின் இதயம்.

''எனக்கு எதுவுமே தோன்றவில்லையம்மா. தாங்கள் எது சொன்னாலும் அதன்படி நடக்கச் சித்தமாக இருக்கிறேன்'' என்றான் சிவாஜி அடைபட்ட குரலில். ''சிவா, கண்ணே, மனந் தளராதே! உன் புத்திக் கூர்மையிலே, சாதுர்யத்திலே எனக்கு நம்பிக்கையுண்டு. அன்னை பவானி உனக்கு அறிவையும் ஆற்றலையும் அளிப்பாள். விரைவிலேயே சிந்தித்து ஒரு முடிவுக்கு வா'' என்று அருகே வந்த அன்னையின் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டு தளர்ந்த நடையோடு தன் இருப்பிடத்துக்குத் திரும்பினான் சிவாஜி.

அன்னை ஜீஜாபாயின் நம்பிக்கை வீண்போகவில்லை. பீஜப்பூரைத் தன் வசமாக்கிக் கொள்ளத் திட்டமிட்டுப் பலதடவை முயன்று சமயத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஷாயின்ஷா ஷாஜஹானுக்கு லிகிதம் ஒன்று அனுப்பினான் சிவாஜி. தக்காணத்திலுள்ள முகமதிய அரசுகளை வெற்றி கொள்ளத்தான் உதவுவதாகவும் அதற்குப் பிரதியாக பீஜப்பூர் மீது படையெடுத்துத் தன் தந்தையை மீட்க மொகலாயப்படையின் உதவி தேவை என்றும் கேட்டான். வளர்ந்து வரும் சிவாஜியின் புகழையும் வீரத்தையும் கேள்விப்பட்ட ஷாஜஹான் சிவாஜியின் விருப்பத்துக்கு உடன்பட்டு ராஜா ஷாஜியை உடனே விடுதலை செய்ய வேண்டுமென்று பீஜப்பூருக்கு ஆணையிட்டதோடு தன் அரசிலே சிவாஜிக்குப் பட்டமும் பதவியும் தருவதாகவும் செய்தி அனுப்பினார்.

மராட்டிய வீரன் மொகலாய சாம்ராஜ்யாதிபதியின் உதவியுடன் வருகிறான் என்ற செய்தியே ஆதில்ஷாவை ஆட்டம் கொள்ள வைத்து விட்டது. இப்படி ஒரு நிலை வருமென்று அவர் எதிர்பார்க்கவே இல்லை.

சிறைச்சாலை வாயிலில் சுவர் உயர்ந்து வெகு நாட்களாகி விட்டன. ஒரே ஒரு சிறு துவாரம் தான் பாக்கி. அதுவும் உள்ளிருக்கும் கைதிக்கு உணவை வைத்து நகர்த்துவதற்காக விடப்பட்டிருந்தது. ஒரே ஒரு கல். அதையும் வைத்து விட்டால் ஷாஜியின் ஆயுள் முடிந்து விடும். சிவாஜி ஓடி வந்து பணிந்து விடுவான் என்ற அல்ப ஆசையில் அந்த ஒரு கல்லையும் வைத்து மூடிவிடாமல் காத்திருந்தார் ஆதில்ஷா. ஆனால் வந்ததோ ஷாயின்ஷா ஷாஜஹானின் உத்தரவு!

அந்த ஒற்றைத் துவாரத்திலிருந்து வரும் ஒளிதான் ஷாஜியின் உலகமாக இருந்தது. அவர் காணும் காட்சி எல்லாம் அந்தச் சிறிய துவாரத்தின் வழியே கல் தரையில் விழும் சூரிய வெளிச்சம்தான். அதுவும் நாளில் ஒரு சில நாழிகைகள். அவரோடு உறவு கொண்டாட ஒவ்வொரு நாளும் தவறாமல் வரும் ஒரே உயிர்த்தோழன்; அவரது வாழ்வாசையின் கடைசிக் குருத்து; நம்பிக்கையின் ஆணி வேர்.

"ஏ, ஒளியே! ஒளிந்து விளையாடும் நிழலே! நீயாவது என் பரிதாபமான நிலையைப் போய் என் மகனிடம் சொல்லக் கூடாதா?" என்று புலம்புவார். பிறகு விரக்தியோடு "என் மகன்—அவன் எங்கே வரப் போகிறான்? சிவாஜி பெரிய வீரன் என்று நாடே புகழ்கிறது நான் பெற்ற மகனை. ஆனால் என்னைக் காப்பாற்ற அவன் வரவில்லை. வரவும் மாட்டான். இருண்ட அறைக்குள்ளே எலியோடும் பூச்சி புழுக்களோடும் உறவாடி வந்தேன்—என்றாவது ஒரு நாள் என் மகன் வருவான், விடுதலை வாங்கித் தருவான் என்ற நம்பிக்கையோடு. இனி அந்த நம்பிக்கைக்கும் இடமில்லை..." என்று கலங்குவார். ஒளி ஒழுகும் அந்த ஒரே துவாரத்தையும் ஒற்றைக் கல் என்றைக்கு வந்து அடைக்கப்போகிறதோ என்று அதையே பார்த்துக் கொண்டு நாளெல்லாம் உட்கார்ந்திருப்பார் ஷாஜி.

திடீரென்று ஒரு நாள் சுவருக்கு வெளியே பலத்த ஆரவாரம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தார் ஷாஜி. தவிப்போடு தம் தலைக்கு மேலே உள்ள அந்தத் துவாரத்தின் வழியே பார்க்கத் தாவித்தாவி எம்பினார், அதை எட்டிப் பிடிக்க. உடலில் தெம்பில்லாததாலும் எட்டாத உயரத்தில் அந்த இடைவெளி இருந்ததாலும் சுவரில் மோதித் தரையில் பரிதாபமாக விழுந்தார்.

குதிரைகளின் குளம்பொலி, கத்திகள் உராயும் சத்தம், சுவரை இடிக்கும் அதிர்ச்சி இவையெல்லாம் சோர்ந்து கிடந்த ஷாஜியின் உடலில்கூட ஒரு துடிப்பையும் பரபரப்பையும் ஏற்படுத்தின. "எனக்கு நிரந்தர விடுதலை அளிக்கச் சுவரிலுள்ள ஒரே துவாரத்தையும் அடைக்கக் கொத்தர்கள் வந்து விட்டார்களா? இல்லை இருக்காது...... பாதாளச் சுவரை இடிக்கவா செய்கிறார்கள்? அப்படியும் இருக்குமா?" பித்தரைப் போலச் சிரித்தார் ஷாஜி. உணர்ச்சி மேலிட்டால் அவர் உடல் நடுங்கிற்று. இத்தகைய அவஸ்தையைத் தாங்க அவர் உடலில் வலுவில்லை. இதயம் வெளியே வந்து விடும் போலப் படபடத்தது. நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டார். சுவரில் துவாரம் வரவரப் பெரிதாகிக் கொண்டு வந்தது. வெள்ளமென ஒளி அலை உள்ளே பாய்ந்தது. பிறகு தடாலென்று நெடும் சுவரே தரையில் விழுந்தது.

"விடுதலை-விடுதலை—என் மகன் வந்து விட்டானா? என் அருமை சிவாஜி எங்கே—எங்கே?" பாய்ந்துவரும் ஒளி வெள்ளத்தைப் பார்க்க முடியவில்லை ஷாஜியினால். இத்தனை காலமும் இருளிலேயே இருந்த அவரது கண்கள் ஒளியைக் காணும் வலிமை இழந்து விட்டன. வெளிச்சம் அவர் கண்களைக் குருடாக்கிக் கூச வைத்தது. "ஐயோ ஒளி ஒளி—எந்த ஒளியைக் காணத் தவித்தேனோ அதைக் காண முடியவில்லையே" என்று புலம்பினார் ஷாஜி—இரு கைகளாலும், மூடிய கண்களை, இடுங்கி இறுகிப்போன இமைகளை மெள்ள மெள்ள விலக்கிப் பார்த்தார். "அதோ அதோ—அந்த ஒளிப் பிழம்பின் நடுவே? கையிலே ஜ்வலிக்கும் வாளுடன் அது யார்? சிவாஜியா—என் மகன் சிவாஜியா?" அரற்றினார் ஷாஜி.

அந்த உருவம் அவர் அருகே வந்தது. அடைபட்ட குரலில் பேசவும் செய்தது.

"ஜீஜாபாயின் புதல்வன் சிவாஜி நான் தான்." அப்போதும் அவர் மகன் என்று சொல்ல விருப்பமில்லை போலும் சிவாஜிக்கு.

தம்முன் நின்ற உருவத்தைத் தழுவிக் கொண்டார் ஷாஜி. அதன் ஒவ்வொரு அங்கத்தையும் தொட்டுத் தொட்டுப் பார்த்து மகிழ்ந்து, "எத்தனை கம்பீரமாக வளர்ந்து விட்டாயடா மகனே?" என்று பூரித்துப் போனார். இடுங்கிய அவர் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாக ஓடியது. "எனக்குத் தெரியும் நீ வருவாய் என்று" பெருமையுடன் சொல்லிக் கொண்டார் ஷாஜி.

"பீஜப்பூர் சுல்தானிடம் கெஞ்சிக் கேட்டு உங்கள் விடுதலையை நான் பெறவில்லை. அதிகாரத்தோடு அதட்டிக் கேட்டே உங்கள் சுதந்திரத்தை நான் வாங்கினேன்" என்றான் சிவாஜி.

"அப்படியா—அது எப்படியப்பா? எல்லாம் விவரமாகச் சொல். வா போகலாம்" என்று மகனின் கையைப் பற்றிக் கொண்டு நடக்கலானார் ஷாஜி. ஆனால் அவரது தோளைப்பற்றி நிறுத்தியது ஓர் இரும்புக் கரம்.

"ஷாஜி போன்ஸ்லே! பாதாளச் சிறையிலிருந்துதான் உங்களுக்கு விடுதலையே தவிர தலைநகரை விட்டு எங்கும் வெளியே போகக் கூடாது" என்றது ஒரு குரல். அது சேனாதிபதி நவாப் முஸ்தபாகான்தான் என்பதை அறிந்து கொள்ள ஷாஜிக்கு அதிக நேரமாகவில்லை. ஷாஜஹானின் படையெடுப்பு அபாயத்திலிருந்துவிடுபட ஷாஜியை விடுதலைசெய்தாரே தவிர அவரை வெளியே அனுப்ப ஆதில்ஷா சம்மதிக்கவில்லை. தந்தையும் தனயனும் மொகலாயருடன் சேர்ந்துகொண்டு தங்களுக்கு எதிராகக் கிளம்பிவிட்டால்?

'இன்னமும் நான் கைதிதானா?" என்ற ஏக்கப் பெருமூச்சொன்று வெளிப்பட்டது ஷாஜியிடமிருந்து.

★

"அம்மா, உங்கள் கணவரை விடுதலை செய்து விட்டேன்" என்று கூறிக்கொண்டே வந்தான் சிவாஜி.

"நீ வருவதற்கு முன் செய்தி வந்துவிட்டது சிவா. உன் திறமையிலே எனக்கு என்றுமே நம்பிக்கை உண்டு" என்றாள் ஜீஜாபாய் கண்களில் நீர் ததும்ப-தன்னை வணங்கிய மகனைத் தழுவியபடியே.

"ஆனால்......அம்மா, அவரை என்னுடன் அழைத்துவர முடியவில்லை" என்றான் சிவாஜி குனிந்த தலையுடன்.

ஜீஜாபாய் குரல் அடைக்க அழுகையை உள்ளுக்கடக்கிக் கொண்டே சொன்னாள். "வேண்டாம் சிவாஜி. உன்னோடு அவர் வராதிருக்க வேண்டுமே என்றுதான் நான் கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன். அவரைக் காண நான் விரும்பவில்லை. நமது கடமையைச் செய்து விட்டோம் என்ற நிம்மதி ஏற்பட்டிருக்கிறதே அதுவே போதும். என்னையும் உன்னையும் பொறுத்தவரை நம் வாழ்க்கைக்கு அப்பால் அவர் ஒரு கைதிதான் சிவாஜி, கைதிதான்!" என்று விம்மியபடியே பூஜை அறைக்குள் ஓடினாள். பவானியின் காலடியில் போய் விழுந்து தேம்பித் தேம்பி அழும் தன் அன்னையைப் பார்த்தபடியே சிலையாக நின்றான் சிவாஜி.



மனத்தளவே யானாலும்

'சக்தி'

என் அப்பா கடிதம் எழுதியிருந்தார்கள்.

''சம்பிரதாயத்துக்காக, நீ வந்து 'பெண்ணைப் பார்க்க வேண்டும். மற்ற விஷயங்களெல்லாம் நாங்களே பேசி முடித்துவிட்டோம். அநேகமாக இந்த இடம் முடிந்து விட்ட மாதிரிதான்.''

பட்டம் பெற்றாலென்ன? பதவி வகித்தால்தானென்ன? தந்தையின் வார்த்தைக்கு என்றும் மதிப்புக் கொடுக்க வேண்டியது அவசியந்தானே!

வாழ்த்துக் கூறி வழியனுப்பினான் நண்பன் நாகநாதன்.

கடைசி மணி ஓய்ந்து வண்டி நகரும் நேரத்தில் அவன் கூறிய சொல், ஓடும் வண்டியில்கூட என் நெஞ்சில் ஒலித்தது.

''ஒத்தையாகப் போய் இரட்டையாகத் திரும்பி வாருங்கள்!''

''ஊஹூம் மாட்டேன்'' என்றதும் திடுக்கிட்டான்.

''மூன்று பேராக வருவேன்'' என்றதும் ஆச்சரியப்பட்டான்.

''ஆம், என் திருமணத்துக்கு வந்து திரும்பும் நீயும் என்னுடனேயே சேர்ந்து வரவேண்டியவன்தானே...'' என்றதும் ஆனந்தப்பட்டான்.

என் அப்பா ஒரு விஷயம் குறித்தால் அதை அத்தனை உறுதியாகச் செய்து முடிப்பார் என்ற நம்பிக்கை என்னை விட நண்பனுக்கு அதிகமாக இருந்தது. அதனால்தான் அத்தனை உறுதியுடன் வழியனுப்பி வைத்தான்.

மூன்றாம் நாள் சென்னையில் வந்து நின்றேன். அடேயப்பா, எனக்குத்தான் எத்தனை வரவேற்பு!

கவியாக மாறிப் பெண்ணின் அழகை வர்ணித்தாள் தங்கை. முகத்திலே இலங்கும் சீதேவித் தன்மையையும் அடக்கத்தையும் கட்டிச் சொல்லி என் ஆவலைப் பெருக்கினாள் அம்மா. அணிந்து கொண்டிருக்கும் நகை, கொண்டு வரப் போகும் சீர்வரிசை இவைகளைப் பற்றி வாய் கொள்ளாமல் பேசினாள் அத்தை. சம்பந்தியாகப் போகிறவரின் பெருமையை வானளாவப் புகழ்ந்தார் அப்பா. அறிவிப்புக் கொடுத்து விட்டு நல்லதொரு நாளில் பெண்ணைக் காணச் சென்றோம். வழக்கமான வரவேற்புகளெல்லாம் சிறப்புற நடந்தன.

சீதையின் அழகு திருமகளின் செல்வம், அன்பு, அடக்கம், பண்பு எல்லாமே ஒருங்கு வாய்த்து திகழ்ந்து கொண்டிருப்பதாக வர்ணிக்கப்பட்ட பெண்ணுருவைக் காணும் துடிப்பில் படபடத்தது என் மனம்.

திரையின் அசைவை எதிர்நோக்கிக் கண் இமைக்காமல் விழித்திருந்தேன்.

விழித்த இமை மூட முடியாது குத்திட்டு நிற்க வைத்தது எதிரே காட்சி தந்த உருவம். அன்னத்தின் நடையும் மானின் மருண்ட

பார்வையும் கொண்ட பெண்ணின் கண்களிலே அன்பையும் குழைவையும் எதிர் நோக்கினேன்.

ஆனால் நான் 'கண்டதோ அருவருப்பும் சீற்றமும் பொங்கியெழுந்த கண்களை! கண் சிமிட்டும் நேரத்துக்குள் அந்தக் கண்கள் எனக்கு ஏதேதோ எச்சரித்துச் சென்று விட்டனவே...

என் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. முகத்தைத் துடைத்துக் கொண்டேன்.

அப்பா வெற்றிச் சிரிப்பு சிரித்தார். அம்மா மகிழ்ச்சி பொங்கக் குலுங்கினாள். தங்கையோ குறும்பைக்கொட்டி நகைத்தாள். எல்லாம் அதே மின்வெட்டும் நேரந்தான்.

அன்ன நடையும் மானின் பார்வையும் நாகத்தின் சீற்றத்துடன் பின்னால் திரும்பிச் சென்று விட்டன.

என் குழப்பத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு எல்லாரும் நகைக்கிறார்கள். நானோ என்னுள் ஓலமெழுப்பும் ஏளன நகைப்பைக் கேட்டு உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தேன்.

'எப்பொழுது தேதி வைத்துக் கொள்ளலாம்?' என்று பெண்ணின் தந்தை குழைந்தார்.

"இப்போது வேண்டுமானாலும் வைத்து விடலாம்" என்று சொல்லத் தயாராக இருந்தார் அப்பா.

நானும் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராகத் தான் வந்தேன். சற்று முன்னால் என் எதிரில் மின்னிமறைந்த மங்கை நல்லாளின் வெறுப்புத் தெறித்தோடும் கருவிழிகள் வேறேதோ கூறி விட்டனவே.


"சொல்லி அனுப்பலாமே, அப்பா!" என்று கூறி எழுந்து நடந்தேன்.

அப்பாவுக்கு என் போக்கு ஆச்சரியமாக — ஆத்திரமாகக் கூட இருந்திருக்கலாம். அதற்கு நானென்ன செய்ய முடியும்? என்றோ நடந்து போன சம்பவம் இன்று குறுக்குச்சுவராக எழுந்து நிற்கும் என்று எதிர்பார்த்தேனா? யாருடைய கண்ணில் என் நிழல்கூட விழக் கூடாது என்று ஒதுங்கி மறைந்தேனோ, அவளே நான் பார்க்கச் செல்லும் பெண், என்று தெரிந்திருந்தால் தென்னூட்டுக்கே வராமல் தலை மறைவாக இருந்திருப்பேனே...

வீட்டுக்கு வந்ததும் அப்பா என்னிடம் வெகுண்டார்.

"எத்தனை நாட்களாய்க் காத்திருந்தா என்னை அவமானப்படுத்த வேண்டுமென்று? தந்தைக்கு அடங்காத பிள்ளையாக உன்னைக் காட்டிக் கொண்டதில் உனக்குக் கிடைத்த பெருமைதான் என்ன?" என்று பொரிந்தார்.

"நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள், அப்பா! எனக்கு இதில் ஆட்சேபணை எதுவுமே



இல்லே. ஆனால் அவர்கள் யோசனைக்கு அவகாசம் அளிக்க வேண்டாமா அப்பா?''

''சம்மதமில்லாதவரா தேதி குறிப்பிடத் துடிப்பார்?''

''பெண்ணின் தந்தையைச் சொல்லவில்லே. பெண்ணைப் பற்றித்தான்.''

பெரிதாகச் சிரித்தார் தந்தை.

எந்த நம்பிக்கையாலோ கலியாண வேலைகளைத் தொடர்ந்தார் அப்பா. அம்மாவும் அத்தையும் மட்டுமென்ன சளைத்தவர்களா? அவர்கள் தங்கள் பங்கு வேலையில் வெகு மும்முரமாக ஈடுபட்டார்கள்.

என் மனம் மட்டும் எதையோ எதிர்நோக்கிச் சூனியமாய்ச் சாய்ந்தது. நான் எதிர்பார்த்த அந்த வெறுமை பெண் வீட்டின் வேலைக்காரன் மூலம் வந்தது.

பெண்ணுக்கு இந்தத் திருமணத்தில் விருப்பமில்லையாம்......

இப்பொழுது நான் சிரித்தேன்.

''அப்பொழுதே நான் சொல்லவில்லையா இந்தத் திருமணம் நடக்காதென்று. என் சொல்லைப் பொருட்படுத்தவில்லை. இப்பொழுது உட்கார்ந்து சிந்தியுங்கள்'' என்று கூறிப் பெரிதாகச் சிரித்தேன்.

என் சிரிப்பு அப்பாவின் வயிற்றில் நெருப்பாகப் பற்றியிருக்க வேண்டும்.

''ரங்கன்...'' அப்பாவின் குரல், பாசம் பற்று இவற்றுக்கெல்லாம் அப்பால் நீதியின் எல்லையில் நின்று பயங்கரமாக ஒலித்தது.

''உனக்கும் அந்தப் பெண்ணுக்குமிடையில் ஏதாவது...''

இருந்தது. ஆனால் நான்தான் அதைச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். சொல்லக்கூடியதாக இருந்தால் மனச்சாட்சி அதற்கு ஒத்துழைக்கும் பட்சத்தில் அன்றே அந்த உண்மையை உடைத்தெறிந்திருக்கலாமே.

நான் அதை விரும்பவில்லை. எதுவும் பதில் சொல்லாமல் என் அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டேன்.

என் மனக் கதவு திறந்து என்னை எங்கோ அழைத்துச் சென்றது.

ஒரு சில வருஷங்களுக்கு முன்னால் —

இறுதி வகுப்பு முடிந்து கல்லூரியில் சேர்ந்த புதிது. நண்பர்கள் அதிகம் சேராத பருவம்.

பாலக்கரை ஸ்டேஷனில் ஏறிக் கோட்டை ஸ்டேஷனில் இறங்கி ஒன்றாய்க் கல்லூரி வாசற்படியில் காலை வைக்கும் பழக்கத்தால் சந்திரன் மட்டும் என்னோடு நெருங்கிய நண்பனாகி விட்டான்.

ஒருவன் வரத் தாமதமானாலும் மற்றவன் அந்த ரயிலைத் தவற விடுவது என்ற அளவுக்குப் பழகி விட்டோம்.

ஒரு நாள்...

கோட்டை ஸ்டேஷனில் இறங்கிய கூட்டம் பகுதி பகுதியாகப் பிரிந்து விரைந்தது. ஆபீஸ் நோக்கிச் சென்றவர்கள், பாங்கி நோக்கிச் சென்றவர்கள், பள்ளி நோக்கி நகர்ந்த மாணவர்கள் இப்படி. அலைமோதியது. மாணவிகளும் அதில் கலந்திருந்தார்கள். நானும் சந்திரனும் கல்லூரி நோக்கி நடந்தோம். திடீரென்று என் முதுகில் அறை விழுந்தது.

''என்னடா?'' என்று திடுக்கிட்டேன்.

''அதோ அங்கே பார்...'' என்று சந்திரன் சுட்டிக் காட்டிய திசையை நோக்கினேன்.

இரட்டைப் பின்னலும் மேலாடையும் காற்றிலே பறக்க அரட்டையடித்துச் சென்ற பெண்கள் கூட்டத்தை விட்டுத் தனித்துச் சென்று கொண்டிருந்தார்கள் இரு பெண்கள்.

பண்பான உடையும் அடக்கமான நடையுமாகச் சென்ற அவர்களைப் பற்றி நல்ல எண்ணமே உதித்தது என் மனத்தில்.

''நல்லவர்கள்'' என்றேன்.

''யார் இல்லை என்றார்கள்? வலதுபுறம் நீலத் தாவணி அணிந்து செல்கிறாளே அவள் யாரென்று உனக்குத் தெரியுமா?''

அருவருப்பு நிறைந்த பார்வையை அவன் மீது வீசினேன். 'நீயும் மட்டமான ஒரு மாணவன்தானா?' என்று கேட்கத் துடிதுடித்தேன். ஒருவேளை அவன் காதலியாக இருக்கலாமோ? படிக்கிற மாணவனுக்கு அந்த எண்ணமே தவறானதுதான்.

''தெரியாது. தெரியவேண்டிய அவசியமும் இல்லை என்றே நினைக்கிறேன்...''

''உன் அண்ணி என்று சொன்னால் ஆச்சரியப்படுவாயல்லவா?''

உண்மையாகவே அதிசயித்து நின்றேன்.

''நீ.. நீ...'' என்று இழுத்தேன்.

''ஆம். கலியாணமானவன்தான். இருவரின் படிப்பும் தடைப்படாமல் இருக்கப் பிரிந்தே இருக்கிறோம்...'' என்று கூறினான். பிறகு என்ன நினைத்தானோ, ''விஷயத்தை உன்னுடனேயே வைத்துக்கொள். மற்ற நண்பர்களுக்குத் தெரிந்து கலாட்டாவில் முடிந்து விடப் போகிறது'' என்றான்.

''எனக்கொரு சந்தேகம்.''

''இதுவரையில் நண்பர்களுக்குத் தெரியாமல் எப்படி இருக்கிறது என்றுதானே கேட்கிறாய்? உன்னைப் போலவே நானும் இந்த வருஷ மாணவன்'' என்றதும் பேசாமல் நடந்தோம்.

பின்னும் ஒரு நாள்...

அதே கோட்டை ஸ்டேஷன். அதே காலை நேரம். அதே ஜன நெரிசல். நானும் சந்திரனும் கூட்டத்தை முண்டியடித்துக் கல்லூரியை நோக்கி நடந்து கொண்டிருந்தோம்.

எங்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த இரு நண்பர்களின் பேச்சில் பெண் பற்ற வார்த்தைகள் அடிபட்டன. தூரத்தே செல்லும் இரு பெண்களைச் சுட்டிக் காட்டி மனம் போன போக்கில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

என்னுடன் நடந்த சந்திரனின் முகம் கறுத்தது. அவன் பார்வை சென்ற திக்கை நோக்கினேன். கலாட்டா நண்பர்களின் பேச்சில் அடிபட்ட பெண்கள் வேறு யாருமல்ல. சந்திரனின் மனைவியும் அவள் தோழியும்தான். என் ரத்தம் கொதித்தது.

''மிஸ்டர்...'' என்று ஆக்ரோஷமாகக் கத்திக்கொண்டு இரண்டு எட்டு முன் நடந்தேன். சந்திரன் என் கையைப் பற்றி இழுத்து, 'பேசாமல் நட' என்று கண்களால் சாடை காட்டினான்.

துடுக்காகப் பேசிச் சென்ற மாணவன் திரும்பிப் பார்த்துக் கேலி நிறைந்த புன்னகையை என் மீது வீசினான். அவன் முகத்திலே


மலர் வனத்தில்
வசந்த எழிலைப் பருகுங்கள்
கசேதா 4.50
பசந்தர் 5.75
கமல் 3.50
மலே 7.50
B.S.C.
Quality Shoes
தயாரிப்பாளர்கள் :
பாட்டா ஷூ கம்பெனி பிரைவேட் லிட்.
பார்வைக்கு உகந்தவை
நடப்பதற்கு உகந்தவை
உழைப்புக்கு உகந்தவை


சிறுவர்கள்
முகம் மலர
சிறந்த பரிசு
Nutrine
மிட்டாய்கள்
நியூட்ரைன் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட்
சித்தூர் (ஆந்திரப் பிரதேசம்)
NC-59a


முயற்சியின் வெற்றியில் நாம் பெருமையடைகிறோம். கவர்ச்சியான தோற்றத்திற்குப் பளபளப்புடைய கருமையான கேசம் முக்கியம். அதற்குச் சிறந்தது வாஸ்மால்
அழகுடன் திகழும் கேசம் வெற்றிக்கு அறிகுறி!
வாஸ்மால் சிறந்த கூந்தல் தைலம். கூந்தலை கருமையாகச் செய்கிறது. கேசவளர்ச்சியை ஊக்குவிக்கிறது. தைலமாகவும், போமேடாகவும், மோசடி செய்ய முடியாத மூடியுடைய பாட்டில்களில் எல்லாக் கெமிஸ்ட்டுகளிடமும் கடைகளிலும் கிடைக்கும்.
கூந்தலின் இயற்கை வளர்ச்சிக்குச் சிறந்ததான லனோலின் சேர்ந்தது வாஸ்மால். கேசத்திற்கு அதிகப்படியான பாதுகாப்பை அளிக்கிறது.
Vasmol
கருமையை வளர்க்கும் கூந்தல் தைலம்
ஹைஜீனிக் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்
தபால் பெட்டி 1182, பம்பாய்-1
சென்னை ஏஜெண்டுகள் :
ஆர். எல். கவுடர் & கம்பெனி
பந்தர் தெரு .: சென்னை-1

தெறித்த விஷத் தன்மையைக் காணவே கண் கூசியது.

"தெருவோடு போகும் பெண்களைப் பற்றி மரியாதையாகப் பேசுங்கள் என்பதைச் சொல்லவே கூப்பிட்டேன்!"

"தெருவோடு செல்லும் பெண்கள் எல்லாம் உங்கள்..." என்று கண்ணைச் சிமிட்டினான் அவன்.

"சகோதரி...மேலும் நீங்கள் குறிப்பிட்டுப் பேசிய பெண் என் நண்பனின் ...."

"சகோதரி" என்று முடித்த சந்திரனைத் திகைத்துப் பார்த்தேன்.

பேசாமல் வா என்பதைப் போல் என் கையைப் பற்றி இழுத்துச்சென்றான் சந்திரன்.

வகுப்பில் நடந்த பாடத்தில் மனமே பதியவில்லை. ரயில்வே நிலயத்தில் துடுக்காகப் பேசிய மாணவனையும் அவனைக் கண்டிக்காமல் விட்டுவிட்ட சந்திரனையுமே சுற்றிச் சுற்றி வந்தது மனம்.

மாலையில் கல்லூரி முடிந்து வெளியே வந்ததும் முதல் கேள்வியாகச் சந்திரனிடம் கேட்டேன்.

"அண்ணியைப் பரிகாசம் செய்த அவனைச் சும்மாவிடக் கூடாது" என்றபோது சிரித்தான் சந்திரன்.

"வெளி உலகில் நடமாட வேண்டிய அவசியம் இருக்கும் பெண்களுக்கு இதுபோல் சில்லறைத் தொந்தரவு ஏற்படுவது இயற்கை தானே? எப்பொழுதுமே நாம் அவர்களுக்குப் பின்னால் காவல் சென்று கொண்டிருக்க முடியாதல்லவா? தன்னைத் தானே காத்துக் கொள்ளும் தன்மை பெண்களுக்கு உண்டு என்பதை அந்த முரடன் உணராமலா இருந்து விடப் போகிறான்?"

"உணர வைக்க வேண்டியது உன்னுடைய கடமையில்லையா?"

"நாம் தலையிடுவதால் குழப்பம் அதிகரிக்குமே தவிரப் பலன் ஏதுமில்லை" என்று சொல்லி விட்டுப் பேச்சை வேறு பாதையில் திருப்பி விட்டான்.

எனக்கு அவன் பேச்சு புரியவில்லை; பிடிக்கவுமில்லை. ஒருவேளை வீண் கலாட்டாவாக வேண்டாம் என்று நினைக்கிறானோ என்னவோ? அத்துடன் விட்டுவிட்டேன்.

தேர்வுப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது. இரவும் பகலுமாய்க் காப்பியும் டீயும் பருகிக்கொண்டு படிப்பில் மூழ்ந்தோம்.

இன்னும் ஒரு வாரம். ஒரே வாரம். ரயில் வரத் தாமதமாகும் சிறு நேரத்தில் கூடக் கண்களை அங்கேயிங்கே அலையவிடாமல் ஏடுகளைப் பிரித்து வைத்துப் புரட்டிக் கொண்டிருந்தோம்.

அன்று...

ரயில், கோட்டை நெருங்கும்வரையில் படிப்பில் மூழ்கி இருந்திருக்கிறேன். ஜனங்களின் பரபரப்பைக் கண்டு புஸ்தகத்தை மூடிவிட்டு வண்டியில் ஏறத் தயாரானேன். அப்பொழுது தான் என் கண்கள் சந்திரனைத் தேடத் தொடங்கின.

படுபாவி. இன்னும் வரக் காணோமே. இரவெல்லாம் படித்த களைப்பில் தூங்கிக்கொண்டிருக்கிறானோ? தடுமாற்றத்துடன் அங்கும் இங்கும் நோக்கின என் கண்கள்.

ஆடவர்!

புதிதாக நாட்டியப் பள்ளியில் சேர்ந்த ஒரு சிறுமியை அழைத்து ஆசிரியை விசாரித்தாள்: "உன்



குடும்பத்தில் யாராவது நாட்டியம் ஆடுபவர்கள் இருக்கிறார்களா?"

"ஓ... எங்கப்பா இருக்காரே! அம்மா சொல்றபடி ஆடறதுதான் அவர் வேலை!"

பாலக்கரையின் குறுக்குப் பாதையில் இரைக்க இரைக்க ஓடி வருகிறான். இன்னும் இரண்டே நிமிடம். ஓடி வந்துவிடுவான்.

ஐயோ......பூட்ஸ்கால் தடுக்கிச் சறுக்கி விழுந்து விட்டானே!

'புறப்பட்டுவிட்டேன்' என்ற பயமுறுத்தலுடன் என்னைத் தாண்டிச் சென்ற ரயிலையும் சட்டை செய்யாது சந்திரன் விழுந்த இடம் நோக்கி ஓடினேன்.

சந்திரனை வண்டியில் ஏற்றிக் கொண்டு பெரிய ஆஸ்பத்திரியில் சேர்த்து அவனுக்கு வேண்டியதைக் கவனித்துவிட்டு அவன் பெற்றோர்களுக்கு டெலிபோன் மூலம் செய்தி அறிவித்து விட்டேன். அங்கிருந்து பஸ் பிடித்துக் கல்லூரி போய்ச் சேருவதற்குள் பாதி வேளை கடந்துவிட்டது.

மீதி நேரத்திலும் பாடத்தில் என் மனம் பதியவில்லை.

நாலரையானதும் கோட்டை நிலயத்துக்கு விரைந்து நடந்தேன். பெண்கள் கல்லூரியிலிருந்து விடுபட்ட சாந்தா எனக்கு எதிர்ப்பட்டாள். அவளுக்கு விஷயம் தெரிந்திருக்குமோ, தெரியாதோ? எப்படித் தெரிந்திருக்க முடியும்?

செய்தி தெரிந்திருந்தால் இத்தனை சாவகாசமாக நடந்து செல்வாளா, என்ன?

எனக்கு ஒரு யோசனை தோன்றியது. அவளிடம் விஷயத்தைச் சொல்லி அவளையும் அழைத்துக்கொண்டு சந்திரனைப் பார்க்கச் சென்றாலென்ன?

இரண்டு எட்டு முன் நடந்து, 'மிஸஸ் சந்திரன்' என்று கத்தினேன்.



"மிஸ்டர்! இது ரொம்ப பொறுப்புள்ள வேலை! உங்களால் செய்ய முடியாது!"

"என்ன சார், அப்படிச் சொல்லிட்டீங்க? நான் முன்பு இருந்த இடங்களில் நடந்த எல்லாத் தப்புக்கும் நான்தான் பொறுப்புன்னு, சொல்லித்தானே என்னை வீட்டுக்கு அனுப்பி வைச்சாங்க!"

"மிஸ்டர்! கல்லூரியிலிருந்து வருகிறீர்களா? அல்லது நேராகப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து விடுதலையாகி வருகிறீர்களா?" என்று சினந்தாள் அவள்.

எனக்கேற்பட்ட திகிலில் வார்த்தைகள் தடுமாறின.

"சந்திரன்...ஆஸ்பத்திரி..." திணறினேன்.

என் குழப்பத்தை அதிகரிக்க வந்ததைப் போல், "தெருவோடு செல்லும் பெண்களிடம் நடந்துகொள்ளும் மரியாதையான முறை இதுதானா மிஸ்டர்?" என்ற கட்டைக் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

முன்பு ஒருநாள் என்னால் அவமதிக்கப்பட்ட மாணவன் சிரித்துக் கொண்டு நின்றான்.

அவனிடம் மேலே பேசப் பிடிக்காமல் பெண்ணின் பக்கம் திரும்பினேன். அவள் அங்கே நின்றால்தானே?

குழப்பம் நிறைந்த மனத்துடனே ஆஸ்பத்திரி நோக்கி நடந்தேன். நான் போன சமயம் சந்திரன் நல்ல நிலையிலிருந்ததைக் கண்டு மனத் திருப்திகொண்டேன். தலையில் மட்டும் பெரிய கட்டாக விழுந்திருந்தது.

"உன் உதவிக்கு மிகவும் நன்றி ரங்கன், ஆஸ்பத்திரியில் விவரம் சொன்னார்கள்."

"கல்லூரியிலிருந்து வரும்பொழுதுகூட உன் மிஸஸ்ஸைப் பார்த்தேன்..."

அவன் முகம் ஏனோ பயங்கரமாக மாறிக் கொண்டு வந்தது. "அடேய், அவளிடம் போய் விஷயத்தைச் சொல்லி விட்டாயாடா?" என்று பதறினான்.

"சொல்லத்தான் போனேன். ஆனால் அவள் விஷயம் தெரிந்து கொள்ளாமலேயே -எனக்கு உங்கள் ரகசியம் தெரியாதென்று நினைத்தாளோ என்னவோ—சந்திரன் என்றால் யார் என்பதையே அறியாதவள் போல் முறைத்தாள்."

"ரங்கன்..."

ஏன் கத்துகிறான்?

மேலே பேசினேன். "இடையே அந்த நான்சென்ஸ் பயல் - அவன்தான் முன்பொரு நாள் நடு ரோட்டிலே நம்மிடம் மாட்டிக் கொண்டானே, அந்த ராஸ்கல் குறுக்கிட்டான். அவனுடன் மோதி மீளுவதற்குள் அவள் போயே போய்விட்டாள். இல்லையானால் உன் மிஸஸ்ஸைக் கையோடு அழைத்து வந்திருப்பேன்."

"ரங்கன்..." அவன் ஏன் அழுகிறான்?

"என்னை மன்னித்து விடப்பா ரங்கன். என்னுடைய விளையாட்டுப் புத்தியால் உன்னிடம் குறும்பாகக் கூறிவைத்தேன். அந்தப் பெண் என் மனைவியுமல்ல. நான் விவாகமானவனுமல்ல. அந்தப் பெண்ணின் அழகிய முகமும், அடக்கமான உருவமும் என் மனத்தில் ஏதோ ஓர் ஆசையைத் தூண்டி விட்டிருந்தன. எனக்கு வரப்போகும் மனைவி அவளைப் போலவோ, அவளாகவோ இருக்க வேண்டுமென்ற ஆசையால் அப்பாவியான உன்னோடு விளையாடினேன். என்னால் உனக்கேற்பட்ட அவமானத்துக்காக வருந்துகிறேன். என்னை மன்னித்துக் கொள், ரங்கன்!" என்று கண்ணீர் சிந்தினான்.

மற்றொரு சமயமாக இருந்திருந்தால் அவன் கன்னம் கன்றிச் சிவந்திருக்கும்.

அந்தப் பெண்ணைச் சந்தித்து நான் நல்லவன் என்பதை நிரூபித்து விடவேண்டும் என்ற முடிவுடன் வீடு திரும்பினேன்.

மறுதினம் அந்தப் பெண்ணைச் சந்தித்தேன். ஆனால் சொல்ல நினைத்ததைச் சொல்லவில்லை.

நான் நல்லவன் என்பதை நிரூபிப்பதால் என் நண்பன் வெறுக்கத் தக்கவனாவான். 'வேண்டாம், நண்பன் நல்லவனாகவே இருக்கட்டும்' என்ற முடிவுடன் என் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன்.

மறு வருஷம் அப்பாவிடம் கேட்டுக் கொண்டு சென்னையில் படிக்கத் தொடங்கினேன். பிறகு உத்தியோகம் பம்பாயில் அமைந்து விடவே, திருச்சியைப் பற்றிய நினைவு அடியோடு மறைந்து விட்டது.

இந்த நிலையில்தான் அந்தப் பெண்ணையே 'பெண் பார்க்கும்' சந்தர்ப்பம் குறுக்கிட்டது.

இப்பொழுதாவது அவளிடம் உண்மையைக் கூறி என்மீதுள்ள களங்கத்தை மாற்றிக் கொண்டிருக்கலாம்.

ஒருகணம்...ஒரே கணம் அந்த எண்ணம் என் மனத்தில் நிழலாடியது.

வேண்டாம், மனத்தளவில்தான் என்றாலும் சந்திரன் அந்தப் பெண்ணைப் பற்றி எண்ணியது தவறு. தவறுக்குப் பரிகாரமாக அவனே அந்தப் பெண்ணை மணந்து கொள்வதுதான் சரியானதுமல்லவா?

எங்கிருந்தாலும் சரி. சந்திரனைத் தேடிப் பிடிப்பதுதான் எனது முதல் வேலை. பின்னரே எனது திருமணம் என்ற முடிவுடன் அவனைத் தேடுவதில் தீவிரமாக முனைந்தேன்.

தொழிற்சாலையில் கற்பனையாளர்

ஒப்பற்ற உழைப்புக்கும், சிறந்த கையாளும் திறமைக்கும் பெங்களூரில் உள்ள இந்தியன் டெலிபோன் இண்டஸ்ட்ரீஸால் பாராட்டப்பட்ட தொழிலாளிகளில் எம். பி. துரைசாமியும் ஒருவர். சாதாரண தொழிலாளியாக சேர்ந்த துரைசாமி தன் விடா முயற்சியினாலும், திறமையினாலும் ஒரு சிறந்த கருவி தயாரிப்பவராக முன்னுக்கு வந்தார்.

டெலிபோன் எக்ஸ்சேஞ்சுகளில் உள்ள மீட்டர்களில் உபயோகிக்க வேண்டிய ஒரு சிக்கலான ஸ்பிரிங்கை இந்தியன் டெலிபோன் இண்டஸ்ட்ரீஸார் வெளி நாடுகளிலிருந்து வரவழைத்துக் கொண்டிருந்தனர். தாங்களே அந்த ஸ்பிரிங்கை தயார் செய்வதற்கான வழிகளை கண்டுபிடிக்க முனைந்தனர். துரைசாமி தன் சாதுரியத்தினால் ஒரு வழியை கண்டு பிடித்தார். இதன் மூலம் ஸ்பிரிங்கின் உற்பத்தியை பத்துமடங்கு அதிகரித்ததுடன் அருமையான அயல்நாட்டு செலாவணியையும் சேமிக்க முடிந்தது.

துரைசாமியைப் போன்ற ஆர்வங்கொண்ட தொழிலாளர்கள் தான் நாட்டின் தொழில் துறை முன்னேற்றத்தை துரிதப் படுத்துவதில் ஒரு இன்றியமையாத அங்கம் வகிக்கிறார்கள். அவர்கள் நவஇந்தியாவை நிர்மாணிக்கும் பணியிலும் பங்கு கொள்ளுகிறார்கள்.




வளம் பெருக்கும் திட்டம் நம்மை ரக்ஷிக்கும் திட்டம்

திட்டம் உருவாக உதவுங்கள் திட்டத்திற்காகச் சேமியுங்கள்


DA 60/689



மரகதச் சிலை
கதை: வாண்டு மாமா
சித்திரம்: விஜய
௨
பீதியடைந்து ஓடிய நிர்மலாவைத் துரத்தி நிறுத்திய பத்மநாபன் அவள் பயத்தைப் போக்கிய பின் இருவரும் பிரயாணத்தைத் தொடர்ந்தார்கள். ஒருநாள் தூரத்தில் குள்ளன் காளி வருவதைக் கண்ட நிர்மலாவின் மகிழ்ச்சி எல்லை மீறியது.
உன்னைக் கண்டது எத்தனை ஆனந்தமாக இருக்கிறது? அவர்... உன் இளவரசர் எங்கே காளி?
இளவரசி எப்படிச் சொல்லுவேன்? நினைக்கவே என் நெஞ்சம் கனக்கிறதே. நீங்கள் எப்படித் தாங்குவீர்கள்!
குள்ளன் நடந்ததை நிர்மலாவிடம் விவரிக்க...
ஐயோ, எனக்கு உதவி செய்ய வந்து உங்களுக்கு இந்தக் கதியா? இந்த வீர வாளும் கூடவா உங்களை வஞ்சித்தது!
நிர்மலா, இந்த வேளையில் நீ தைரியத்தோடு செயல்பட வேண்டும். கண்ணீரை விடக் காரியமே முக்கியம். ஆதித்தனை அந்த அரக்கனின் பிடியிலிருந்து விடுவிப்பதே இனி நம் லட்சியமாக இருக்க வேண்டும்
பத்மநாபனும் நிர்மலாவும் குள்ளன் காளி பின் தொடர மலையிடுக்கின் வழியாகக் கோட்டையை நோக்கிப் பயணமானார்கள்.


வெண்கலக் கோட்டையின் பிரம் மாண்டமான ஆசார வாயிலை அடைந்ததும்,
பத்மநாபன் கொம்பெடுத்து முழக்கி உள்ளிருக்கும் அரக்கனைச் சண்டைக்கு அழைக்கிறான்.
யாரடா அது? என் கோட்டை முன் வந்து நின்று என்னைப் போருக்கும் அழைப்பவன்?
மலைவிழுங்கியின் கோபாவேச கர்ஜனை யினால் அந்தப் பிராந்தியமே 'கிடு கிடு' என்று நடுங்குகிறது.
பத்மநாபனிடம் ஆதித்தனின் மகிமை பொருந்திய வாள் இருந்தது. சிறந்த வீரனான அவன் நெஞ்சமும் அஞ்சாமல் அரக்கனை எதிர்க்கச் சித்தமானான்.
ஏழுதலை நாகம் விஷ ஜுவாலையைக் கக்கிற்று.
பத்மநாபன் அதன் ஒரு தலையை வெட்டி வீழ்த்துகிறான்.
வீண் ஆர்ப்பாட்டம் ஏன் செய்கிறாய்? என் வாளுக்கு உன் ஒரு தலையைப் பலி யாக்குகிறேன்.


வெட்டி வீழ்த்திய அரக்கனின் இடக் கரத்தின் மீது ஏறிநின்று பத்மநாபன் வீரார்ஜுனனை புரிந்த அதே கோரத்தில் இன்னாள் காளி...
ஒரு தலையைப் பற்றித் தொங்கி பாம்பைக் கட்டிப் போட மரத்திலேறிக் கிளையில் வைத்திருந்தான். அதுவும் அதன் வால்......
பத்மநாபா, மோசம் போனோம்! ஆபத்து. ஓடி வா......
உன் வீரத்துக்கும் அதிர்ஷ்டத்துக்கும் என் வாழ்த்து. சமயத்தில் காப்பாற்றினாய்!
ஒரு கை இழந்த மலை விழுங்கி கோபாவேசத்துடன் ஆயுதத்தைச் சுழற்றிக் கொண்டு வருகிறான்.
இந்தச் செய்தியையும் காட்டுக் கொடுமையையும் கொண்டு வில் தயார்ப் போம்.
காளி தயாரித்த வில்லிலே காட்டேர்
கொடுமை நாணேற்றி அர்ச்சுனன் அத்திரத்தை அம்பாக்கி....
கண்ணிமைக்கு அரக்கனின் வலக் கரத்தையும் வெட்ட...
அடியற்ற மரம் போலத் தரையில் சாய்ந்த அவன் தலையைக் கொய்து தூக்கிச் சிங்கநாதம் செய்ய நாகநந்தினி மீது கொண்டு நின்றான்.
தொடரும்




இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள தோட்டங்களைப் போல் குளிர் காலத்தில் அல்லது மழைக் காலத்தில்தான் குளிர் என்ற நியதி நுவரெலியாப் பகுதித் தேயிலைத் தோட்டங்களுக்குக் கிடையாது. நாள் முழுதும் ஜிலுஜிலுப்புடனேயே இருக்கும். அதுவும் ;விடியற்காலையிலோ? வீட்டுக்கு வெளியே தலைகாட்ட முடியாது. உடம்பு ஜில்லிட்டுப் போகும். அவ்வளவு குளிர். வெய்யில் காலத்திலென்றால் இந்தக் குளிர் மறையக் குறைந்தது பத்து மணியாவது ஆகும். வெய்யிலின் 'உறைப்பு' அப்போதுதான் இலேசாகத் தெரியும்.

நுவரெலியா நகரத்திலிருந்து நாலு மைல் தூரத்திலுள்ளது 'மாட்டுப் பால்' தோட்டம்.

மாட்டுப்பால் தோட்டத் தேயிலை பேர்போனது. நானூற்றுச் சொச்சம் ஏக்கர் பரந்து கிடந்த மாட்டுப் பால் தோட்டத்தில் தேயிலைச் செடிகளுக்கு நடுநடுவே உரத்துக்காகப் பயிரிடப்பட்ட முருங்கை, அவரி மரங்கள் வளர்ந்துநின்றன.

கடல் மட்டத்துக்கு மேல் ஆறுயிரம் அடி உயர்ந்து நின்ற மலைகளிலே அமைந்திருந்த மாட்டுப் பால் தோட்டக் காட்சிகள் கண் குளிரக் காணக் கூடியவை. அதேபோலத் தோட்ட நிர்வாகத்துக்கும், அத் தோட்டத் தொழிலாளிகளின் ஒற்றுமைக்கும்கூடப் பேர்போனவை. இந்தக் காலத்தில், எல்லாத் தோட்டங்களிலும் வழக்கு, வம்பு என்றால் மாட்



குத்துக் கல்

... நாதன் ...

டுப் பால் தோட்டத்தில் அந்த நாமதேயமே கிடையாது. இங்கே நூற்றுக் கணக்கான ஏக்கர்களுடைய தோட்டங்களை நாற்பது ஐம்பது ஏக்கர்கள் கொண்ட பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வோர் இலக்கமிட்டிருந்தார்கள். அவ்வப் பகுதிகளை அந்தந்த இலக்கங்களைக் கொண்டு அழைத்து வந்தார்கள்.

ஆறும் நம்பர் மலை, தோட்டத்தின் ஒரு கடைசியில், ஒரு மலைச்சாரலில் இருந்தது. அங்கு மலையடிவாரத்தில் தேயிலைச் செடிகளினூடே, முதுகிலே கூடையொன்றைப் போட்டுக் கொண்டு நிரை நிரையாகத் தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்களில் அநேகம் பேர்கள் பெண் தொழிலாளிகள்.

கொழுந்து கிள்ளும்போது எல்லாவிதமான இலைகளையும் கிள்ள முடியாது. அன்று விரியும் ஓர் இலையும், இரண்டு நாட்களுக்கு முன்னர் விரிந்த ஓர் இலையும், அதற்குக் கீழேயுள்ள ஓர் இலையும் ஆக மூன்று இலைகளைக் கொண்ட இலைக் கொத்துத்தான் ''கொழுந்து'' எனப்படும். ஏனைய இலைகள் தேயிலை செய்ய உபயோகப்படாது. ஒவ்வொரு தேயிலைக் கிளையின் உச்சியிலும் இவ்விலைக் கொத்துகளைத்தான் தொழிலாளர் கிள்ள வேண்டும். அதுவும் இக் கொழுந்தைக் கிள்ளும்போது இலையின் ஒரு பாதி மட்டுமே கைக்கு வருமாறு கிள்ளினால் அது தண்டனைக்குரிய குற்றம். இக் குற்றத்துக்காக அன்றைய வேலையை இழக்க நேரிடும். இத்தகைய தவறுகள் இழைக்காமலே ஒரு நாளைக்கு ஒரு பெண் தொழிலாளி சராசரி நூற்றுப் பத்து றாத்தல் கொழுந்து பறிப்பாள். ஒவ்வொரு இலைக் கொத்தையும் பெரு விரலாலும், ஆள் காட்டி விரலாலும் மடக்கிப் பெரு விரலின் நகத்தால் கிள்ள வேண்டும்.

தொழிலாளர்களுக்கிடையே ஆங்காங்கு தலைப்பாகையுடன் திரிபவர்கள்தான் கங்காணிகள். அதாவது வேலை சரியாகச் செய்யப்படுகிறதா எனப் பார்க்கும் மேற்பார்வையாளர்கள். இந்த மாதிரி வேலை நடைபெறும் மலையினூடே செல்லும் ரோட்டிலேதான் தலையிலே பெரிதாகக் கட்டப்பட்டிருந்த தலைப்பாகையும், அகன்ற நெற்றியிலே திருநீறும், அருள் உமிழும் கண்களும், உடலை மறைக்கும் சட்டையும், சட்டைக்கு மேல் உத்தியோகத்துக்கே உரித்தான கோட்டும், அதற்கு மேல் பனியின் கோரத்தைத் தாங்க ஓர் ''ஓவர் கோட்''டும், வலது கையிலே குடையோடும் நடந்து கொண்டிருந்தார் ஒருவர். அவர் தான் அந்தத் தோட்டத்துப் பெரிய கங்காணியாகிய சதாசிவம் பிள்ளை.

தோட்ட சூப்பிரண்டெண்டுகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையே நல்லெண்ணப் பாலம் அமைப்பவர் அவர். தொழிலாளர்களுக்கிடையே ஏற்படும் சண்டை, சச்சரவுகளைத் தீர்ப்பது, அவர்களுக்குத் தேவையானவற்றைக் கவனிப்பது ஆகியவை அவரது தொழில். தொழிலாளர்கள் எவ்வளவுதான் சண்டையிட்டுக்கொண்டு வந்தாலும் அவரது சமாதான மொழிகளிலே ஒன்றுசேர்ந்து விடுவார்கள். அவரது நல்ல குணம் அவரைத் தொழிலாளர்கள் அனைவரும் ''பெரிய ஐயா!'' என்று அழைக்க வைத்தது. அவரது ஐம்பத்தாறு வருஷ வாழ்க்கையில் எத்தனையோ தோட்டத் துரைகளை, சூப்பிரெண்டெண்டுகளைப் பார்த்திருக்கிறார். மாட்டுப் பால் தோட்டத்துக்கு அவர் அறிந்து குறைந்தது பதினைந்து துரைகளாவது வந்து போயிருப்பார்கள். அங்கு வந்த துரைகள் அனைவருமே சதாசிவம் பிள்ளையிடம் அன்பு பூண்டவர்கள். தோட்ட நிர்வாகத்துக்கு எது எது செய்ய வேண்டுமோ அவை யெல்லாவற்றையும், துரைகள் சதாசிவம் பிள்ளையின் யோசனையின் பேரிலேயே செய்தனர்.

என்றைக்கும் மலர்ந்த முகத்துடன் இருக்கும் சதாசிவம் பிள்ளை இன்று வாடிய முகத்தோடு, சுற்றுமுற்றும் ஆட்கள் வேலை செய்வதைக்கூடக் கவனியாமல் சென்று கொண்டிருப்பதற்குக் காரணம் உண்டு. நான்கு வருடங்களுக்கு ஒரு முறை தேயிலைச் செடிகள் உயரமாக வளராமல் படர்ந்து வளரவும், புதுக் கிளைகள் வெடிக்கவும் தேயிலைச் செடியின் வாதுகளைக் கத்தரித்து விடுவார்கள். இவ்வாறு தேயிலைக் கிளைகளை வெட்டி விடுதலைக் 'கவ்வாத்து' செய்தல் என்பார்கள்.



இந்தத் தொழில் எல்லாத் தோட்டங்களிலும் மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும். கல்வாத்துத் தொழில் சிரமமானதும், ஆபத்தானதுமான ஒரு தொழில். நல்ல பளபளவென்று தீட்டிய கத்திகளையே இதற்கு உபயோகிப்பார்கள். மேலும் ஒவ்வொரு கிளையும் ஒரே வீச்சில் வெட்டப்பட்டால்தான் புதுக் கிளைகள் நன்கு புடைக்கும். அதுவும் கிளைகள் நேராக வெட்டப்படுவதில்லை; சாய்வாகவே வெட்டப்படும். இப்படி வெட்டும் சமயங்களில் உடம்பிலே காயங்கள் ஏற்பட ஏதுவுண்டு. இதனால் விரல்களை இழந்த தொழிலாளர்கள் அநேகர். இத்தகைய அசம்பாவிதங்கள் நேரக் கூடாதே என்று தொழிலாளர்கள் இத்தொழிலைச் செய்யத் தொடங்கும் முன்னர் அந்தத் தேயிலை மலையிலேயே ஒரு குத்துக்கல்லைப் புரட்டி அதை விக்கிரகமாகப் பிரதிஷ்டை செய்து வணங்கி விட்டு அதற்குப் பின்னரே தங்கள் தொழிலை ஆரம்பிப்பார்கள். விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்த இடத்தில் சிறு பந்தல் போட்டு, பொங்கல் படைப்பதும் உண்டு. இதற்குத் தேவையான அரிசி, தேங்காய், மேலும் பந்தல் போட மரங்கள் ஆகியவற்றைத் தோட்ட நிர்வாகமே கொடுக்கும். இது காலம் காலமாக நடந்து வருவதொன்று. ஆனால் இந்த வருடம் இந்தச் சாங்கியத்துக்குப் பெரும் பங்கம் ஏற்படவிருந்தது. அதுவே அவரின் துக்கத்துக்குக் காரணம்.

ஒரு மாதத்துக்கு முன் புதிதாக மாற்றலாகி வந்துள்ள தோட்டத்துரை இளவயதுள்ளவர். முன்கோபி. அனுபவமும் அதிகமில்லை. வேறு ஒரு தோட்டத்தில் வேலை பழகிக் கொண்டிருந்த இவரை மாட்டுப்பாள் தோட்டத் துரை நிமேரனைச் சீமை போக நேரிட்டதால் சூப்பிரண்டாக நியமித்தார்கள். சதாசிவம் பிள்ளை தோட்டத்தில் எந்த நிலையிலுள்ளவர் என்பதை அவர் அறியவில்லை; அறிந்து கொள்ள முயலவுமில்லை. இந்தத் துரை வந்ததிலிருந்து அவ்வப்போது சிறு சிறு தகராறுகள் தோட்டத்தில் ஏற்பட்டவண்ணம் இருந்தன. சதாசிவம் பிள்ளை தமது செல்வாக்கின் மூலம் இவையெல்லாம் பெரிதாகாமல் பார்த்துக் கொண்டார். எப்படியிருந்தாலும் தொழிலாளிகளுக்குத் துரையிடம் பிடிப்பு இல்லை. தொழிலாளர்கள் தாங்கள் வளர்க்கும் ஆடு மாடுகளுக்கு இரையாக இலை தழை தேடுவது வழக்கம். தோட்ட மலைகளிலிருந்து ஒரு சிலர் வெட்டிக் கொள்வதுமுண்டு. அதுவும் அதிகமாக அல்ல; ஏதோ ஒன்று அல்லது இரண்டு வாதுகள். அவ்வளவுதான்; ஒரு நாளைக்கு இது துரைக்குத் தெரிந்து விட்டது. ஆடுமாடு வளர்ப்பதால்தானே இந்த வம்பு? தோட்டத்தில் யாரும் ஆடு மாடு வளர்க்கக் கூடாது என்று சட்டம் போட்டு விட்டார். இது யாருக்குமே பிடிக்கவில்லை. இருந்தாலும் என்ன செய்வது? இப்படித் துரையின் போக்கே ஒரு விதம். எதையும் அனுசரித்துப் போகத் தெரியவில்லை. இன்று காலை துரை கல்வாத்து மலையிலே சுவாமி பூஜைக்காகத் தரப்பட வேண்டிய பொருள்களின் லிஸ்டிலே கையெழுத்துப் போட மறுத்து விட்டார். அதாவது பூஜைக்குத் தேவையான பொருள்களைக் கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார். காலையிலே உத்தியோகத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்த பிள்ளையின் காதில் இந்தச் செய்தி நாராசமாக விழுந்தது.

துரையின் இச்செய்கை பிள்ளையின் மனத்தைப் பெரிதும் புண்படுத்தி விட்டது.

அந்தப் பகுதித் தேயிலை ஒரு மலைச்சாரலில் இருந்தது. மலையின் உச்சியிலிருந்து கீழே ஆயிரம் அடி உயரத்துக்கு மலைப்பாறைகள் நீண்டிருந்தன. அதற்குக் கீழே சிறுசிறு குன்றுகளாகத் தெரிந்தவை கற்பாறைகள்தான். அந்தப் பாறைகளினூடே வெள்ளைத் துணி ஒன்றை இடுக்கியது போல் தெரிவதுதான் பள்ளத்திலே ஓடும் காட்டாறு. தேயிலை மலையிலிருந்து பார்க்க இந்தக் காட்சிகள் அழகாகத் தோன்றினாலும், திகில் மனத்தைக் கௌவும். மாட்டுப் பாள் தோட்ட மக்கள் இந்தப் பள்ளத்தாக்கை 'முனிப் பள்ளம்' என்று வழங்கினர். இதனால் அவர்கள் மேலேயுள்ள தேயிலை மலை 'முனி மலை'யாயிற்று. அவர்கள் அவ்வாறு அழைப்பதற்குக் காரணம் இருந்தது. அந்தப் பள்ளத்தாக்கில் ஏற்கனவே இரண்டொரு பேர்கள் வேலை செய்யும்போது உருண்டு போனதுண்டு. அதனால் அந்தப் பள்ளத்தாக்கிலே ஒரு முனி இருக்கிறதென்றும் அந்த முனி தனக்குப் பசி வந்த போது மேலே தேயிலை மலையில் வேலை செய்யும் ஆட்களைப் பலி கொள்ளுகிறதென்றும் பேசிக் கொண்டார்கள். அங்கு முனி இருந்ததோ என்னவோ!

பள்ளத்தாக்கை நோக்கிய பிள்ளையின் உடல் இந்த நினைவுகளால் ஒருமுறை சிலிர்த்தது. சில வருடங்களுக்கு முன்பு இம்மாதிரி கல்வாத்து செய்யும் போது பிடி தவறிக் கீழே விழுந்து மாண்ட முனியனை நினைத்துக் கொண்டார். அந்தச் சம்பவத்துக்குப் பின்னர், இப்போதுதான் மீண்டும் இந்த மலையில் கல்வாத்து நடைபெறுகிறது. அப்படியிருக்கும் போது, இந்த வருடம் கல்வாத்து வேலைக்குப் போவோர்கள் சுவாமி பூஜையை விசேடமாக நடத்த வேண்டுமென்று விரும்பியதில் வியப்பொன்றுமில்லையே.

"ஐயா கும்பிடறேனுங்க."

பிள்ளை நிமிர்ந்து பார்த்தார். எதிரில் மாடசாமி நின்று கொண்டிருந்தான். அவனும் அந்தத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களில் ஒருவன்தான். நல்ல வாட்ட சாட்டமான இளைஞன். சிறிது கல்வி அறிவு உடையவனும் கூட. அதனால் அந்தத் தோட்டத் தொழிலாளர் யூனியன் தலைவனாகவும் இருந்தான்.

"உம்; என்ன மாடசாமி, என்ன விஷயம்?"

மாடசாமியைப் பிள்ளை என்ன விஷயம் என்று கேட்டாரே தவிர, அவன் எதற்காக வந்திருப்பான் என்று அவருக்கா தெரியாது?

"ஐயாவுக்கு இந்நேரம் தெரிந்திருக்கும்..." மாடசாமி வாக்கியத்தை முடிக்கவில்லை.

"நான் எல்லாவற்றையும் கவனிக்கிறேன், மாடசாமி! நீ போய் உன் வேலையைப் பார்" என்று சொல்லி அனுப்பினார் பிள்ளை.

அப்போது தூரத்தே ஒலித்த சங்கு, மணி பன்னிரண்டு என்பதை அறிவித்தது. தொழிலாளர்கள் தங்கள் வேலையை முடித்து,

பிரபல பல்வைத்திய நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்

கால்கேட் குளோரோபில்



ஈறுகளை பலப் படுத்து கிறது


வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது! "ஆஸ்மோஸ்கோப்" பரிசோதனைகளில், கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட், வேறெந்த சாதாரண பற்பசையையும்விட மிகத்தீவிரமாக வாய் நாற்றத்தை ஒழிக்கிறது என்பது நிரூபணமாயுள்ளது.

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது! கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால், பற்களை சொத்தையாக்கும் கிருமிகள் அழிகின்றன.

கால்கேட்டின் பிரத்தியேகமான சேர்க்கை முறையைக் கொண்ட குளோரோபில்லின் பூரண பலனை அடையுங்கள்.... கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் அல்லது கால்கேட் குளோரோபில் டூத் பவுடர் வாங்குங்கள்!

கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை தினமும் தேய்ப்பதால், தீவிரமான குளோரோபில்லின் பூரண தன்மையை அடைந்து, ஈறுகள் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க ஏதுவாகிறது. உன்னதமான இந்த குளோரோபில் டூத்பேஸ்ட், சிறந்த பற்பசை, பற்பொடி முதலியவை தயாரிப்பதில் மிக்க அனுபவங்கொண்ட உலகிலே மிகப்பெரிய ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்படுகிறது!

வேறு எந்த பற்பசையிலும் இதைவிட அதிக வீரிய குளோரோபில் இல்லை — குழந்தைகள் அதன் பெப்பர்மின்ட் வாசனையை மிகவும் விரும்புகிறார்கள்!



CTPA-G-10 TAM.

பகல் உணவுக்கு வீடு செல்வதற்காக ஒலிக்கப் படுவது அந்தச் சங்கு. பின்னை தமது கனத்த மனத்தோடு வீடு நோக்கி நடந்தார். போகும் வழியிலே நடக்கும் வேலை எதுவும் அவர் கண்களில் படவில்லை. வீட்டு வாசற்படியில் காலை வைத்தவுடன் எதிரில் மாட்டப்பட்டிருந்த பால முருகன்தான் அவர் கண்களில்பட்டான். முறுவலித்த இன்முகம் ஒரு சாந்தியை அளித்தது. 'முருகா' என்றவாறே நாற்காலியில் சாய்ந்தார்.

மீண்டும் சங்கொலி கேட்டபோது, மணி ஒன்றரை, உணவு முடிந்து வேலைக்குத் திரும்ப வேண்டும் என்பதை அறிவிக்கும் சங்கு அது. மத்தியான உணவு முடித்துச் சற்றே ஈஸிசேரில் சாய்ந்த பின்னை எழுந்தார். இனி, ஆபீசுக்குப் போய்த் துரையிடம் விஷயத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். மேலும் இந்தக் கோரிக்கையை மறுத்தால் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் நிர்வாகத்துக்கு எதிராக மாறிவிடுவார்கள் என்பதையும் எடுத்துச் சொல்ல வேண்டும். இப்படி நினைத்தவாறே ஆபீசுக்கு வந்து சேர்ந்தார். அன்று ஆபீசுக்கு மாடசாமியும் வந்திருந்தான்.

"என்ன கங்காணி என்ன விசயம்?" என்றார் துரை. துரைமார்கள் ஆங்கிலேயர்களானாலும் சுமாராகத் தமிழ் பேசுவார்கள்.

"இந்தக் கல்வாத்து மலை விஷயமாக......" மாடசாமியைப் பார்த்தவாறே துரையிடம் பேசினார் பின்னை.

"அது நாளைக்கி தொடங்க வேணுந்தானே?" என்றார் துரை.

"ஆமாம்; எப்போதும் வேலை தொடங்குவதற்கு முன்னர் சுவாமிக்குப் பூசை போடுவது வழக்கம்......" பின்னை முடிக்கவில்லை. துரை இடைமறித்தார்.

"எந்தச் சாமிக்கு?"

"அதாவது அந்த மலையிலேயே உள்ள ஒரு குத்துக்கல்லைப் புரட்டி அதைச் சுவாமியாகப் பிரதிஷ்டை செய்வது வழக்கம்."

"வெறும் குத்துக் கல்லுக்கு யாராவது பூசை போடுவாங்களா? பூமியில் இருக்கிற கல்லுக்கு யாரு பூசை போடுவான்?" என்று சிரித்தார் துரை. அதில் எக்காளம் தாண்டவமாடியது. துரையின் பேச்சும் சிரிப்பும் பின்னையின் உள்ளத்தில் சுரீரென்று உறைத்தன.

"அபசாரம். துரை அப்படிச் சொல்லக்கூடாது. அது நம்மைக் காக்கும் தெய்வம்."

"என்ன, கதை சொல்லுறதா கங்காணி கம்மா. கல்லு நம்மளைக் காப்பாத்துமா? அதெல்லாம் 'நான்ஸென்ஸ்'. பூசை போடறேன்னு சொல்லி, அதுனாலே ரெண்டு மணி நேரத்துக்கு ஆள் வேலை செய்யாது. அதுக்கு யார் சம்பளம் குடுக்கிறது? அது எல்லாம் வேணாம். இதை ஆளுங்களுக்கு நல்லா சொல்லிப் போடுங்க, கங்காணி!" இதைச் சொல்லி முடித்ததும் துரை விருட்டென இருக்கையை விட்டெழுந்து போய்விட்டார். இதை ஆட்களிடம் சொல்வதா? பின்னையின் மனம் பதைபதைத்தது. வெளியே எட்டிப் பார்த்தார். மாடசாமியைக் காணவில்லை. இங்கே பேசியது அவனுக்கு நன்கு கேட்டிருக்கும். அதற்கு மேல் அங்கிருப்பதில் அர்த்தமில்லையென்று போயிருப்பான்.



சென்னை பாரத் பைன் ஆர்ட்ஸ் குழுவினர் ரஷ்யாவுக்கும் கிழக்கு ஜெர்மனிக்கும் கலைக் குழுத் தலைவராகச் சென்று வெற்றியுடன் திரும்பிய நடிகர் திரு எஸ். வி. சகஸ்ரநாமம் அவர்களைப் பாராட்டுவதற்காக அண்மையில் ராஜா அண்ணாமலை மன்றத்தில் விழா நடத்தினர். இந்த வைபவத்துக்குச் சென்னை உள்நாட்டு மந்திரி திரு பக்தவத்ஸலம் தலைமை வகித்துக் கலைஞருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

எதிரே வந்த ஆளைக் கூப்பிட்டு மாடசாமியைத் தம் வீட்டுக்கு வருமாறு சொல்லி அனுப்பிவிட்டு வீடு நோக்கி நடந்தார். துரையின் பேச்சு அவரது நெஞ்சை வெகுவாகக் கலக்கிவிட்டிருந்தது.

"ஐயா!"—பின்னை கண்களைத் திறந்தார். மாடசாமிதான் எதிரே நின்றான்.

"துரை சொன்னது உனக்குத் தெரியுமா, மாடசாமி?"

"ஆமாங்க. அதைக் கேட்ட பிறகுதான் வீட்டுக்குப் போயிட்டு வர்றேன். இந்த அநியாயம் கடவுளுக்கு அடுக்குங்களா?" மாடசாமியின் கேள்விக்கு அவர் என்ன பதில் சொல்லுவதற்கு இருக்கிறது?

"அதாங்க, நாங்க ஒரு முடிவுக்கு வந்திட்டோம்." கல்வாத்துக்கு முந்தி மலையிலே பூசை போடாமே வேலை செய்ய மாட்டோமுங்க. காட்டு மரம் வெட்டியாவது பந்தல் போடுவோம். அதெல்லாம் முடியாதுன்னு நாங்க வேலைக்கு போகிறதுபோலவுமில்லேங்க. நாளைக்கு எங்க உசிரு போனா, துரையா தருவாரு?"

பின்னையின் நெஞ்சில் முள்ளாகத் தைத்தன அவனது வார்த்தைகள். அதாவது, வேலை நிறுத்தம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறான் மாடசாமி. வேலை நிறுத்தம் நடந்தால் அதன் விளைவு? அப்படியானாலும் வேலை நிறுத்தம் செய்வோரின் கதி? அதோகதிதான்.

"அப்படி நடக்கக்கூடாது, மாடசாமி!"

"இதிலே யோசனை செய்ய ஒன்னும் இல்லீங்க. நாளைக்கு பூசை போடப் போறோம். மிஞ்சி வந்தால் வேலைக்குப் போக மாட்டோமுங்க; நான் வர்றேனுங்க" என்று கூறி வேகமாகச் சென்றுவிட்டான் மாடசாமி.

மறு நாள் காலை வெளியே கிளம்பும் போதே பின்னைக்கு ஒரு செய்தி காத்திருந்தது.

இரவோடு இரவாக, கவ்வாத்து வேலை செய்வோர்கள் தோட்ட மலையிலிருந்து இரண்டு பெரிய மரங்களை வெட்டி முனி மலையில் கவ்வாத்து சாமி கும்பிடப் பந்தல் போட்டிருப்பதாகவும், காலையில் அங்கு பொங்கல் வைத்துப் பூசை நடப்பதாகவும் கூறினான் தோட்டத்துக் காவற்காரன். தோட்டத்திலுள்ள மரஞ் செடி கொடிகளை யாரும் சேதமாக்காமல் பார்த்துக் கொள்வதே அவன் வேலை. செய்தியைக் கேட்ட சதாசிவம் பிள்ளைக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. விஷயம் எல்லை மீறிவிட்டது. துரையின் பேச்சிலே ஆத்திரங்கொண்ட மாடசாமிதான் தன் ஆட்களுடன் இந்த வேலையைச் செய்திருப்பான். அதுவும் தோட்ட மலையிலேயா வெட்டுவது? 'இது துரைக்குத் தெரிந்தால்?....துரையோ பெரும் முன்கோபி. முருகா! என்ன நடக்குமோ?' மனத்தில் உறுத்திய எண்ணங்களோடு ஆபீசுக்கு விரைந்தார் பிள்ளை. அவர் உள்ளே நுழைவதற்கும் காவற்காரன் வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது.

"என்ன, துரையிடம் நடந்ததைச் சொல்லி விட்டாயா?" என்று கேட்டார் பிள்ளை.

"ஆமாங்க. அடேயப்பா, கேட்டதும் 'தாட் பூட்'னு குதிச்சிருங்க. 'நான் துரையா, வேலை செய்யிறவன் துரையா?' ஒரே கோவமா இப்பத்தான் போனாருங்க." காவற்காரன் சொல்லி முடிப்பதற்கும் ஆபீசை யொட்டியிருந்த கார் ஷெட்டிலிருந்து துரையின் கார் புறப்படும் சத்தம் கேட்பதற்கும் சரியாக இருந்தது.

சதாசிவம் பிள்ளை குறுக்கு வழியில் முனி மலைக்கு விரைந்தார். அவர் அங்கு கண்ட காட்சி......!

எப்போதும் சாதாரணப் பந்தலே இந்தப் பூஜைக்காகப் போடுவது வழக்கம். ஆனால் இன்றோ பெரிய பந்தலாகப் போட்டிருந்தார்கள். பந்தலின் மேல் கூரையாக நிறையக் கிளைகளைப் போட்டிருந்தார்கள். அதற்கே இரண்டு மரங்களை மொட்டையடித்திருக்க வேண்டும். பந்தலுக்குள் ஒரு புறம் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்திருந்தார்கள். அதைச் சுற்றிலும் பலவிதமான பூக்கள் தூவப்பட்டிருந்தன. அதற்கு முன்னால் ஏதோ பாத்திரம் பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. முன்னால் பூசாரி மணியடித்துக் கொண்டு எதையோ பாடிக் கொண்டிருந்தான். இடையில் 'ட்ரும், ட்ரும்' என்ற உடுக்கொலி. பந்தலைச் சுற்றிலும் முப்பது பேர்கள் நின்று கொண்டிருந்தார்கள். எல்லோரும் கவ்வாத்து வேலை செய்ய வந்தவர்கள் போலிருக்கிறது. முப்பது பேர்கள் நிற்க அங்கு இடம் இருக்காதே. ஓஹோ! ஏற்கனவே சிறு பொட்டலாக இருந்த இடத்தைச் சுற்றிலும் உள்ள தேயிலைச் செடிகளின் கிளைகளை வெட்டி இடம் பண்ணியிருக்க வேண்டும். அட கடவுளே! அது வேறு குற்றமாயிற்றே! இதைத் துரை பார்த்தால்! இன்றைக்கே எல்லோரையும் தோட்டத்தை விட்டுப் போகச் சொல்லி விடுவாரே!

பந்தலிலிருந்து கிளம்பிய உடுக்கொலி பந்தலுக்கு நேரே கீழே இருந்த முனிப் பள்ளமெங்கும் படர்ந்தது. தூரத்தில் துரையின் கார் சத்தம் கேட்டது. பிள்ளை அண்ணாந்து மலை உச்சியைப்பார்த்தார். மலையின் உச்சியிலிருந்து வளைந்து தேயிலை மலைக்கு நடுவே அமைந்திருந்த ரோட்டிலே துரையின் கார் துரையைப் போலவே சீறிக் கொண்டு வந்தது தெரிந்தது. இன்னும் ஓரிரண்டு விநாடிகள், அந்த வளைவைத் தாண்டியவுடன் கார் அந்த இடத்தை அடைந்து விடும். பூஜை நடக்கும் இடத்துக்கு மேலே கார் வளைவிலே திரும்பியது. கிரீச்சென்று எழும்பிய பயங்கர சத்தம் முனிப் பள்ளத்தாக்கு முழுதுமே எதிரொலித்து, ஒலி அலைகளைப் பரப்பியது. அடுத்த விநாடியே துரையின் கார், முனிப் பள்ளத்திலே கற்பாறைகளுக்கிடையே ஓடிக் கொண்டிருந்த ஆறு நோக்கிப் புரண்டு கொண்டிருந்தது. பாதையிலிருந்து விலகிய கார் நேராக, செங்குத்தாகக் கற்பாறையொன்றில் விழுந்து ஆயிரம் சுக்குகளாக நொறுங்கிய காட்சி! அப்பப்பா, கொடூரம். பிள்ளை தமது கண்களை இறுகப் பொத்திக் கொண்டார். பந்தலிலிருந்து 'ஓ' வென்று எழும்பிய ஓலம் அந்தப் பயங்கரத்துக்குச் சுருதி சேர்த்தது.

சதாசிவம் பிள்ளை கண்ணைத் திறந்தபோது, பாதாளத்தில் ஆற்றிலே நொறுங்கிய காரின் பாகங்கள் அடித்துச் செல்லப்பட்ட காட்சி தெரிந்தது. 'ஐயோ! இப்படியும் ஒரு காட்சியா? இப்படி ஒரு முடிவா துரைக்கு ஏற்பட வேண்டும்?'

திடீரெனப் பந்தலிலிருந்து எழும்பிய ஆரவாரம் பிள்ளையின் கண்களை அங்கு செலுத்த வைத்தது. 'ஆ! என்ன ஆச்சர்யம், இது உண்மையா! நிஜந்தானா? என்ன அதிசயம் இது. காண்பது கனவல்லவே. தமது கண்களையே நம்ப முடியவில்லை சதாசிவம் பிள்ளைக்கு. அங்கு துரையல்லவா பந்தலிலிருந்து இறங்கிக் கொண்டிருக்கிறார். துரைதான் காரோடு உருண்டு... சடாரென விளங்கியது பிள்ளைக்கு. ஆம்! கார் பாதையை விட்டு விலகியபோது துரை வெளியே தூக்கி எறியப் பட்டிருக்கிறார். தூக்கி எறியப்பட்ட வேகத்தில் பூஜைக்குப் போடப்பட்ட பந்தலின் மேல் விழுந்திருக்கிறார். பந்தலும் நிறைய இலைகள் போடப்பட்டு மெத்தென்று இருந்ததால் ஒன்றும் நேரவில்லை.

'ஆஹா! முருகா, உன் கருணையே கருணை! உனது திருவிளையாடல்களை நீதினைப் போதிக்கத்தானே?'

பந்தலிலிருந்து இறங்கிய துரை, பள்ளத்தை நோக்கினார். காரின் சில பாகங்கள் சிதறிக் கிடந்ததைப் பார்த்தபோது உடல் சிலிர்த்தது. தம்மைச் சுற்றிலும் திருநீறணிந்து நின்ற தொழிலாளர்களை ஒரு முறை நோக்கினார். மனம் கனத்தது. கண்கள் எதிரே ஓடின. குத்துக்கல் ஒன்றுக்கு எண்ணெய் பூசி, சுற்றிலும் மலர் தூவியிருந்தார்கள். துரையின் தலை கவிழ்ந்தது.

"கல்லா? அப்படிச் சொல்லக் கூடாது. அதுதான் நம்மைக் காக்கும் தெய்வம். காக்கும் தெய்வம்!" சதாசிவம் பிள்ளையின் வார்த்தைகள் துரையின் காதில் ரீங்காரம் செய்துகொண்டிருந்தன.



படித்துப் பாருங்கள்



திருக்குற்றாலம்

தேக நலம் வேணுமா? கலை அழகு வேணுமா? தமிழின்பம் வேணுமா? இதோடு இயற்கை எழிலையும் ஒருங்கே காணலாம் பொதியமலைத் திருக்குற்றாலத்தில். அந்தத் திருக்குற்றாலத்தை அப்படியே எழுத்துருவில் காணலாம் ஸ்ரீ பி. ஸ்ரீ அவர்களின் இந்நூலில். நில அமைப்பு, தட்ப — வெப்ப சூட்சுமத்திலிருந்து, குற்றாலத்தைப் பற்றிய சகல விவரங்களையும் தெரிந்து கொண்டுவிடலாம் இந்நூல் வாசகர்கள். 'குன்றுடு கொழு முகில்கள் உண்டு நிறைந்த வயிற்றுடன் சாய்ந்தும் உருண்டு புரண்டும் இளைப்பாறுவோர் போல் காணப்படும். அங்கங்கே மஞ்சு தவழ்வதையும் குழந்தை மேகங்கள் விளையாடுவதையும் காணலாம்' என்றெல்லாம் ராஜநடை போடுகிறது பி. ஸ்ரீ. யின் தமிழ்.

தொடக்க அத்தியாயங்களில் அவ்வளவாகக் கட்டுக் கோப்பில்லாததே ஒரு குறை. 'இயற்கை மணமும், தமிழ் மணமும், சிவ மணமும் அபேதமாகக் கலந்து பொங்குகின்றன' என்று புத்தகத்தில் காணப்படும் வாக்கியம் புத்தகத்துக்கே ஒரு மதிப்பீடு.

வெளியீடு: அமுத நிலையம், தேனாம்பேட்டை, சென்னை-18; மலிவுப் பதிப்பு: 30 புதுக் காசு; இனேன் பதிப்பு: ரூ. 1—80.

சமையல் கலை

சில வருஷங்களுக்கு முன் ரசமான சமையல் என்ற ஒரு கட்டுரையில், படித்த பெண் ஒருத்தி புத்தகத்தில் போட்டிருக்கும் முறைப்படி முருங்கைக்காய் ரசம் தயார் செய்கிறாள். உப்பு, புளி இவைகளை நிறுத்துப் போடத் தராசு, முருங்கைக்காயை அளவோடு அறுக்க 'இன்ச்டேப்', உஷ்ணப் பிரமாணத்தைத் தெரிந்து கொள்ளக் கருவிகள் இப்படியாக அனேக சாதனங்களுடன் ஒருவாறு ரசம் தயார் செய்து முடிக்கிறாள். முகத்தில் கரியும், உடம்பில் பதற்றமும், கண்களில் நீரும் முட்டக் கை நடுங்க, அந்த ரசத்தைக் கணவனுக்குப் பரிமாறுகிறாள். கணவன், தயார் செய்த அருமையான முருங்கைக் காய் ரசத்தைச் சாப்பிட முடியாத நிலையில் கீழே கொட்டிவிட்டு அவளுக்குத் தேறுதலும் சொல்கிறான். சமையல் கலை என்ற புத்தகத்தைப் படிக்கும்போது அந்தப் பழைய கட்டுரையின் நினைவு வருகிறது. ஆனால் இது நல்ல முறையிலேயே இருக்கிறது.


தென்னிந்தியாவின் உணவு வகைகளும், சிற்றுண்டி வகைகளும் தயாரிப்பதில் பெண்கள் கெட்டிக்காரர்கள். நம்முடைய பெண்கள் தரமாகத் தயாரிப்பதில் மட்டும் சிறந்தவர்களல்ல. விதம்விதமான உண்டிகள் செய்வதிலும் திறமைசாலிகள். சமையல்கலைப் புத்தகம் உண்டி வகைகளில் எத்தனை ஜாலங்கள் செய்யக்கூடுமோ, அவ்வளவு வகைகளையும் குறிப்பிட்டிருக்கிறது. செய்முறைகள் விவரமாகவும், நன்றாகப் புரியும்படியான எளிய தமிழிலும் அழகாக எழுதப்பட்டிருக்கின்றன. புதுக் குடும்பம் நடத்தப் போகும் பெண்களுக்கும், ஏன் பழைய குடும்பம் நடத்தி வரும் பெண்மணிகளுக்கும் இம்மாதிரியான ஒரு புத்தகம் உபயோகமானதுதான். குறைந்த விலையில் அழகான அட்டைப் படத்துடன் இந்தப் புத்தகம் வெளியாகியிருக்கிறது. இதன் ஆசிரியை ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி.

பிரசுரம்: பாரதி பதிப்பகம், 15, உஸ்மான் ரோடு, தியாகராய நகர், சென்னை-17. விலை ரூ. 1.

சினிமா டைரி 1961

தமிழ் சினிமாப் படங்களில் எத்தனை பின்னணிப் பாடகர்கள், பாடகிகள் இருக்கிறார்கள்? டைரக்டர்கள் எத்தனை பேர்? ஜனாதிபதி வெள்ளிப் பதக்கம் பெற்ற தமிழ்ப் படங்கள் எவை? படக்கதை, வசனகர்த்தாக்கள் எத்தனை பேர்? பாடல்கள் இயற்றுபவர் எத்தனை பேர்? — இத்தனை கேள்விகளுக்கும் உங்களால் பதில்கூற முடியுமா? இவ்வருஷ சினிமா டைரி மட்டும் உங்களிடம் இருந்தால் போதும். இம்மாதிரி கேள்விகளுக்கெல்லாம் டக் டக் என்று பதில் அளிக்கலாம்.

பிரசுரம்: கதர்ஸன் பப்ளிகேஷன்ஸ், 20, கல்துக்காரன் தெரு, மயிலாப்பூர், சென்னை - 4. விலை: ரூ. 3.



பிரபலமான கடை ஒன்றின் கதவில் பெரிய பூட்டு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதன்கீழே இப்படி ஒரு விளம்பரம் காணப்பட்டது:

"உறுதிக்கும், நம்பிக்கைக்கும் சிறந்த எங்கள் பூட்டையே உபயோகியுங்கள். அவை எளிதில் யாராலும் திறக்க முடியாதவை. நிபுணர்களான எங்களால் கூடத் திறக்க முடியாமல் கடை மூன்று நாட்களாக மூடிக் கிடப்பதைக் காண்க!"

இமயவரம்பன்

தமிழில் சேர அரசர்களைப் பற்றியே தனிப்பட விவரித்துக் கூறுகிற தொகை நூல் பதிற்றுப்பத்து. அந் நூலில் கூறப்படுகிற முதல் சேர அரசன் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் ஆவான். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும் செங்குட்டுவனும் இமயவரம்பனின் மக்கள்.

இமயவரம்பனைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் தெளிவாக இதனுள் கூறியிருக்கிறார் ஆசிரியர் இராமையா பிள்ளை. தமிழ்த் துறை மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்க்கும் இந்தச் சிறு நூல் பெரிதும் பயன்படும்.

வெளியீடு: முருகன் வெளியீட்டகம், 7, பவர் ஹவுஸ் ரோடு, மதுரை, விலை: 37 புதுக் காசுகள்.

கம்பதாசன் கவிதைகள்

சிற்பம், சித்திரம், ஓவியம், நடனம், சங்கீதம் ஆகிய அத்தனை கலைகளுக்கும் ஊற்றுக் கண்ணாக விளங்கி வந்திருக்கிறது கவிதைக் கலை. அதனாலேயே அதனைக் கலைகளுக்கெல்லாம் தலையாய கலை என்று போற்றி வந்திருக்கிறார்கள் நம்மவர்கள்.

கம்பதாசன் கவிதைகளைத் தமிழுலகம் பத்திரிகைகள் வாயிலாகவும் திரைப் படங்களின் மூலமாகவும் நன்கறியும். அவரது வளம் நிறைந்த கற்பனையையும், எளிமை மிக்க தமிழ் நடையையும் தமிழுலகம் வியந்து பாராட்டி வருகிறது. மறைந்தாரையைப் பற்றி எவ்வளவு அழகாகப் பாடுகிறார்....!

வானவர் மேன்மனை தூவாதோ—அன்றி
வேப்ப அரக்கனைக் கொல்சரமோ?
மானில நங்கையின் மானம்காக்க—வெளி
மகிழ்வோடு நெய்திடும் நூலிழையோ?

இப்படி நூற்றுக் கணக்கான பாடல்கள் பல்வேறு விஷயங்களைப் பற்றி எழுதப் பட்டவை இந்நூலில் இருக்கின்றன. கதையமைப்புக் கொண்ட காவியங்களும் உள்ளன. கவிதை உணர்ச்சி யுள்ளவர்களுக்கு இது ஓர் அரிய நூல்.

பிரசுரம்: அருணா வெளியீடு, தியாகராய நகரம், சென்னை—17, விலை: ரூபாய் ஆறு.

தெய்வம் பிறந்தது

சிறுகதை எழுத்தாளர் கு. அழகிரிசாமியைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்பதில்லை. 'தெய்வம் பிறந்தது' என்ற தலைப்பை ஆரம்பக் கதையாகக் கொண்டு, இந்த நூலில் மொத்தம் எட்டுச் சிறுகதைகள் இடம் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு கதையிலும் ஏதாவது ஒரு விசேஷக் கருத்து இடம் பெறாமல் போகவில்லை. உதாரணத்துக்கு, 'தெய்வம் பிறந்தது' என்ற கதையில் ஒரு சின்னஞ்சிறு குழந்தை தனது தகப்பனார் ராமசாமி ஐயரைப் பார்த்து, "ஏன் அப்பா, என் போட்டோவை மட்டும் நம் வீட்டில் மாட்டுகிறாய்? காந்தி, முருகன் இவர்களுடைய போட்டோவையும் அவர்கள் தங்கள் தங்கள் வீட்டிலேதானே மாட்டி வைத்திருக்க வேண்டும்? எல்லா வீடுகளிலும் ஏன் மாட்டி வைத்திருக்கிறார்கள்?" என்று கேட்கிறது. இதற்குத் தகப்பனார், "காந்தி, முருகன் இவர்கள் எல்லோருக்கும் நன்மை செய்கிறவர்கள். ஆகையால் அவர்களுடைய படங்களையெல்லாம் எல்லா வீடுகளிலும் மாட்டி வைத்திருக்கிறார்கள்" என்று கூறுகிறார்.

சிறுவன் திருப்தியடையாமல் "அப்படியானால் நமக்குத் துணி வெளுத்துத் தரும் கோமதிநாயகம் படம், காய்கறி விற்பவன் படம் எல்லாம் ஏன் மாட்டி வைக்கவில்லை? அவர்களும் நமக்கு நன்மை தானே செய்கிறார்கள்?" என்று கேட்கிறது. இந்தக் கேள்வியைப் போட்டதும்தான் குழந்தையை மார்போடு தழுவிக் கொண்டு ராமசாமி ஐயர் தெய்வமே குழந்தையாகப் பிறந்ததாக எண்ணி மகிழ்கிறார். காய்கறி விற்பவன், துணி வெளுத்துத் தருபவன் முதலியவர்களைப் போலல்லாமல் காந்தி, முருகன் இவர்கள் பணம் கேட்காமலே எல்லோருக்கும் நன்மை செய்வார்கள் என்று குழந்தைக்குத் தகப்பனார் கூறியிருக்கலாம். அவ்வாறின்றி இதையும் அந்தக் குழந்தையின் கற்பனைக்கே விட்டு ஆசிரியர் கதையை முடித்திருக்கிறார்.

கிடைக்குமிடம்: தமிழ்ப் புத்தகாலயம், 393, டைபிராப்ட்ஸ் ரோடு, சென்னை - 14 விலை ரூ. 2—00.



உயர்தரத்தை விரும்பும் மனப்பான்மைகொண்ட யாவரும் எங்கிருந்தாலும் சரி "லோமா"வையே வாங்குகின்றனர். அதிகரித்துக்கொண்டே வரும் விற்பனைதான் இதன் உயர்தரத்தை எடுத்துக்காட்டும் அத்தாட்சி. இப்பொழுது சர்வதேசத்தவரும் விரும்புவது "லோமா". உலகிலுள்ள எல்லாப் பாகங்களிலும் இது ஏற்றுமதி செய்யப்படுகிறது. இங்ஙனம் ஏற்றுமதி செய்யப்படுவதால், விலையுயர்ந்த விதேச நாணயங்கள் நம் நாட்டில் பாதுகாக்கப்படுவது மட்டுமல்ல, உலகிலுள்ள எல்லா இடங்களிலும் இந்திய தயாரிப்புகளின் உயர்தரத்திற்கு உதாரணமாக விளங்குகிறது. இலட்சக்கணக்காக உபயோகத்திலிருக்கும் "லோமா" பாட்டில்கள் பல இலட்சம் பேர் "லோமா"வில் கொண்டுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. அது ஹேர் ஆயில் மட்டுமல்ல, கேசத்தைக் கருமையாக்குவதற்கும் இன்றியமையாதது என்பதை உணர்வீர்.

கேசத்தைக் கருமையாக்குவதில் பாரிஸில் புகழ்பெற்றது

லோமா


ஏகபோக ஏஜெண்டுகள்: எம். எம். கம்பாட்வாலா, அஹமதாபாத்–1.


ஏஜெண்டுகள்: வி. நரோத்தம் அண்டு கோ. பம்பாய்–2.

சென்னை ஏஜண்டுகள்: ஜே. பாலபாய் & கம்பெனி, 260, எஸ்பிளனேட், மதராஸ்-1

இலங்கை ஏஜண்டுகள்: சிருன் கதீர் & கோ., 41, 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11


சினிமா
நட்சத்திரங்கள்
மாணவிகள்
விரும்புவது
மாலா
கண்மை
குங்குமசாந்து
பாரத் இண்டஸ்டிரியல் ஒர்க்ஸ்
32, மஹால் 5-வது தெரு, மதுரை.


Kraft
RADIOS
கிரேப்ட்
ரேடியோக்கள்
விநியோகஸ்தர்கள் :
ரேடியோ எலக்ட்ரிகல்ஸ்
சென்னை - 4
Sole Concessionaries : BANSAL RADIO
CORPORATION OF INDIA, DELHI-6


தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்
பெப்ஸ் வில்லைகளை
உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்.
பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேதனையைக் குறைக்கவும், தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத் திற்கும் காரணமான கிருமிகளைக் கொல்ல உதவியளிப்பதற்கான வேலையைச் செய்வதை உணருங்கள். உடனடி நிவாரணமளிக்கவும் கிருமிகளை அகற்றவும் பெப்ஸ் உதவிபுரிகிறது.
பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.
எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்
PEPS
பி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்
PPY-55-TAM
ஸோல் ஏஜண்டுகள் :
தாதா & கோ., 88, நைனியப்ப நாயக் தெரு, சென்னை-3

பவானி சங்கமேசுவரர்

தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்

எனது நண்பர் ஒருவர் நல்ல தமிழ்ப் புலமை உடையவர், கவி பாடுவதில் சமர்த்தர். எந்தப் பொருளைப் பற்றி, எப்போது, என்ன கவி பாட வேண்டும் என்றாலும் பாடக் கூடியவர் அவர். அவரை அழைத்துக்கொண்டு ஒரு பிரபல அறிஞரைக் காணச் சென்றேன் நான் ஒருநாள். அறிஞரிடம் நண்பரை அறிமுகப்படுத்தி அவர் கவி பாடும் திறமையைப் பற்றி ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தேன். தம் புகழ் கேட்டு நண்பர் நாணிக் கோணித் தலை கவிழ்ந்தார். நான் சொன்னதை யெல்லாம் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த அறிஞர், கடைசியில் கவிஞரைப் பார்த்து ''காகம் காகம்பி கம்பி–கம்' என்பதைக் கடையடியாக வைத்து ஒரு வெண்பாப் பாடும் பார்ப்போம்'' என்றார். நண்பர் பரபர வென்று விழித்தார் கொஞ்ச நேரம்.

அவரது சங்கடத்தை உணர்ந்த நான் அவர் காதில் மெதுவாக, ''பயப்படாதீர்கள். கடையடியைச் சொல்வதில்தான் அத்தனை படாடோபம். பிரித்துச் சொன்னால் 'காகம் காகம், பிகம் பிகம்' அவ்வளவுதான். பிகம் என்றால் வடமொழியில் குயில் என்று அர்த்தம்'' என்று சொன்னேன். இதைச் சொன்னதும் கவிஞர் உத்சாகமாகப் பாட ஆரம்பித்தார். அவர் அன்று பாடிய பாட்டு இதுதான்.

காகம் குயில் இரண்டும்
    கார்நிறத்தால் தம்முள் ஒப்பே
ஆகும் எனினும்
    அணிவசந்தம்—மோகம் செய்
வேகமுறும் காலத்து
    வேறு வேறாம் அவைதாம்
காகம் காகம், பிகம் பிகம்

இந்தப் பாட்டைக் கேட்ட அறிஞர் 'சபாஷ்' போட்டு நண்பரை மிகவும் பாராட்டினார். அறிஞர் தமிழ் சமஸ்கிருதம் இரண்டிலும் பாண்டித்தியம் உடையவர். தமிழ்ப் புலமை மாத்திரமே உடைய கவிஞர், அருமையான சமஸ்கிருத சுலோகத்தின் பொருளையே நல்ல கவிதையில் கூறியதைக் கேட்டு அதிசயித்து நின்றார். அவர் சொன்னார்: 'வடமொழியும் தென்மொழியும் இரண்டு ஜீவநதிகள். இரண்டும் தனித்தனியாகப் பாய்ந்து பரவும்போது அதில் அதிக வேகமோ, சாந்தியோ இருப்பதில்லை. இரண்டும் இணைந்துகலந்து விட்டால், அப்படிக் கலக்கும் இடத்துக்குத்தான் பெருமை. தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள், கங்கையும் யமுனையும் கலக்கும் 'அந்தப் பிரயாகையில் சென்று மூழ்கினால் எவ்வளவோ புண்ணியம் உண்டு' என்று? இரண்டு கலாசாரங்கள் ஒன்றுடன் ஒன்று கலப்பதால் ஏற்படும் மொழி வளர்ச்சி, பெருமைகளைத்தான் அவர் குறிப்பிட்டார். நானும் சொன்னேன்: 'என்ன? உதாரணத்துக்கு அத்தனை தொலைதூரம் சென்று விட்டீர்கள்? நம் தமிழ் நாட்டிலேயே ஒரு பிரயாகை இருக்கிறதே, தக்ஷிணப் பிரயாகை என்ற பெயரோடு. காவிரியும் பவானியும் கலக்கும் அந்தப் பவானி முக்கூடலில், அந்தச் சங்கமத்தில் சென்று மூழ்கி எழுந்தால் எவ்வளவு புண்ணியம்? கங்கையும் யமுனையும் கலக்கும் இடத்திலே சரஸ்வதி நதி அந்தர்வாஹினியாகக் கலப்பது போலவே, இங்கே காவிரியும் பவானியும் கூடுதுறையிலே அமுத நதியும் அந்தர்வாஹினியாகக் கலந்து இதனையும் ஒரு நல்ல திரிவேணி சங்கமம் ஆக்கிவிடுகிறது. அந்தக் கூடுதுறையில்தானே சங்கமேசுவரராம் இறைவன் வேறே கோயில் கொண்டிருக்கிறான்' என்று. இதையெல்லாம் கேட்ட அறிஞர் கவிஞரோடு சேர்த்து என்னையுமே பாராட்டினார். இந்தப் பாராட்டுதல்களுக்கு எல்லாம் காரணமாயிருந்த பவானி முக்கூடலுக்கே, அங்குள்ள சங்கமேசுவரர் கோயிலுக்கே செல்கிறோம் நாம் இன்று.



வேணுகோபாலன்

பவானி செல்வதற்கு, ரயிலில் செல்பவர்கள் ஈரோடு ஜங்ஷனில் இறங்க வேண்டும். அங்கிருந்து பதினொரு மைல் நேர் வடக்கே பஸ்ஸிலோ காரிலோ, இல்லை, குதிரை பூட்டிய ஜட்கா வண்டியிலோ செல்ல வேண்டும். சொந்தக் கார் வைத்துக்கொண்டு சென்னையிலிருந்து கிளம்புபவர்கள் சேலம்—கோவைப் பெருஞ்சாலை வழியாகவும் வரலாம். சேலம் வழியாக வடக்கே இருந்து வந்தால் காவிரியைக் கடந்து ஊர் வந்து சேர வேணும். கோவையிலிருந்து வடக்கு நோக்கி வந்தால் பவானியாற்றைக் கடந்துதான் ஊர்வந்து சேரவேணும். ஆறுகளைக் கடப்பதற்கு நல்ல பாலங்கள் இருப்பதால் எளிதாகவே வந்து சேரலாம். இனி காவிரியும் பவானியும் கலக்கும் அந்த முக்கூடல் சங்கமத் துறைக்கே வரலாம். அங்குதானே காவிரியின் மேல் கரையில் சங்கமேசுவரர் கோயில் இருக்கிறது? கோயிலுக்கு இரண்டுவாயில்கள்.

வடக்கு நோக்கிய பிரதான வாயில் வழியாகவே நாம் உள்ளே செல்லலாம். அவ் வாயிலைக் கடந்ததுமே முன் முற்றத்தில் சிறிய கோபுரத்துடன் கூடிய ஒரு தனிக் கோயிலில் விநாயகர் இருப்பார். அவரை வணங்கிவிட்டு மேல் நடக்கலாம். கிழக்கு வாயிலுக்கு எதிரிலேதான் கொடிமரம், பலிபீடம் விளக்கேற்றும் கல்தூண் எல்லாம் இருக்கும். கோயிலுள் போவதன் முன் கிழக்கு வாயில் வழியாகக் கூடுதுறைக்குச் சென்று அங்கு மூழ்கி முழுகி நம் பாவங்களைக் கழுவிக் கொள்ளலாமே. அங்கெல்லாம் வசதியாக ஸ்நானம் செய்ய நல்ல படித்துறை கட்டி வைத்திருக்கிறார்கள். அதிலும் அமாவாசை கிரகண காலங்களில் அங்கு நீராடுவது சிறப்பு என்றும் தெரிகிறது.

காலில் அரவம் இரு சுடரைப்
பற்றும் காலத்திலே,
மேலுலகம் பெறுவோர் புனல்
மூழ்க விரும்புவது
கோலம் மிகுந்த பவானியும்
பொன்னியும் கூடுதுறை
வாலிய காசி நண்ணாவூர்
பயில் கொங்கு மண்டலமே

என்பது தானே கொங்கு மண்டல சதகப் பாட்டு?

இதைக் கேட்டவுடனே, இது என்ன இதை நண்ணாவூர் என்று வர்ணிக்கிறார்கள் என்று கேட்கத் தோன்றும். ஆம்! பார்வதியம்மையின் திருப்பெயர்கள் பலவற்றுள் பவானி என்பது ஒன்று. அந்தப் பெயரே நதியின் பெயராகவும், தலத்தின் பெயராகவும் அமைந்திருக்கிறது. மேலும் இத்தலத்துக்கு வந்து இங்குள்ள முக்கூடலில் முழுகி எழுவோரை யாதொரு தீங்கும் நண்ணாது. ஆதலின் இதனை நண்ணாவூர் என்றும் அழைத்திருக்கின்றனர். இந்த நண்ணாவூரே, திரு நணா என்றும் குறுகி, ஞானசம்பந்தரால் 'வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டு பாடச் செந்தேன் தெளி ஒளிரத் தேமாங்கனி உதிர்க்கும் திரு நணா' என்றும் பாடல் பெற்றிருக்கிறது. இன்னும் இந்தத் திரு நணா என்னும் பவானி, சங்ககிரி, நாககிரி (திருச்செங்கோடு) மங்கலகிரி, வேதகிரி, பத்மகிரி என்று ஐந்து சிறு மலைகளுக்கு இடையே இருப்பதால் பஞ்சகிரி மத்தியப் பிரதேசம் எனவும் வழங்குகிறது.

இந்தப் பவானி கூடுதுறையிலே காயத்திரி தீர்த்தம் என்று ஒரு தீர்த்தக் கட்டம் இருக்கிறது. அதனைக் காயத்திரி மடு என்றும் கூறுகிறார்கள். இதன் கரையிலே காயத்திரி லிங்கமும் இருக்கிறது. அமுத லிங்கம் என்று ஒரு லிங்கத் திருவுருவம் வேறே இருக்கிறது. அன்று தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்திருக்கிறார்கள். அதில் ஒரு சிறு பங்கைப் பராசர முனிவர் மகாவிஷ்ணுவிடம் பெற்றிருக்கிறார். இந்தப் பராசரர் கொண்டு வந்த அமுதத்தைத் தட்டிப் பறிக்க அசுரர்கள் அவரைத் தொடர்ந்திருக்கிறார்கள். அமுதம் அவர்கள் கண்ணில் படாமலிருக்க அதனைப் பராசரர் இந்தக் கூடுதுறையிலே புதைத்து வைத்திருக்கிறார். ஆனால் அப்படிப் புதைக்கப்பட்ட பாண்டத்தோடு கூடிய அமுதமே அங்கு லிங்க உருவாக மாறியிருக்கிறது. இந்த அமுதலிங்கத்தின் அடியில் இருந்துதான் அமுதஊற்று புறப்பட்டுக் காவிரியோடு கலக்கிறது என்கிறார்கள். இந்த அமுதலிங்கம் அதற்குரிய ஆவுடையாரின் மேல் இருக்கிறது. எளிதாக எடுக்கவும், திரும்ப வைக்கவும் கூடிய நிலையில் இருக்கிறது. மகப்பேறு இல்லாதவர்கள் இந்த அமுதலிங்கத்தை எடுத்து இடையில் வைத்துக் கொண்டு அக்கோயிலை வலம் வந்தால் மகப்பேறு அடைவர் என்பது நம்பிக்கை.

கூடுதுறையில் இத்தனையும் பார்த்த பின் இனி கோயிலுள் நுழையலாம். இந்தக் கோயிலைச் சுற்றி ஒரு கோட்டை இருந்திருக்கிறது அந்த நாளில். அந்தக் கோட்டைச் சுவரின் சின்னங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. பெரும் பகுதி இடிந்து தகர்ந்து விட்டது என்று தெரிகிறது. கோயில் பிராகாரத்தைச் சுற்றினால், அங்கு தல விருட்சமான இலந்தை மரத்தைப் பார்க்கலாம். அது காரணமாக இத்தலம் பதரி ஆசிரமம் என வழங்கப்பட்டிருக்கிறது என்றும் அறியலாம். கோயிலின் நிருத்த மண்டபம், மகா மண்டபம் எல்லாம் கடந்தே கருவறையில் உள்ள சங்கமேசுவரரைத் தரிசிக்க வேணும். இது எல்லாம் சில வருஷங்களுக்கு முன். இப்போது சுவாமி கோயில் பழுதுற்றிருந்ததை இடித்துவிட்டுக் கிட்டத்தட்ட இருபது லட்சம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். திருப்பணி பூர்த்தியாக இன்னும் இரண்டு ஆண்டுகள் ஆகும் என்கிறார்கள். ஆதலால் சங்கமேசுவரர், அவருடன் இருந்த விநாயகர், தண்டபாணி, ராமநாதர், பர்வதவர்த்தினி, சண்டேசர், பைரவர், பஞ்சலிங்கங்கள், நவக்கிரகங்கள் எல்லோருமே இடம் பெயர்ந்து திருமுறை கழகக் கட்டிடத்தில் இருக்கிறார்கள். அந்தப் பாலாலயம், (இளங்கோயில்) சென்றால் எல்லோரையும் ஒருமிக்க எளிதாகவே தரிசித்து விடலாம். இப்போது திருப்பணி நடக்கும் கோயிலுக்கு வடபுறம் அம்மன் கோயில் இருக்கிறது. அம்மையின் பெயர் வேதநாயகி. அங்கும் நிருத்த மண்டபம், மகா மண்டபம் எல்லாம் இருக்கின்றன. இந்த நிருத்த மண்டபத்தைக் கட்டியவர் மும்முடிக் கட்டி முதலியின் சகோதரி சின்னம்மாள் என்று அங்குள்ள கல்வெட்டு ஒன்று கூறுகிறது. அந்தக் கல்வெட்டில் அம்மையின் பெயர் பண்ணார்மொழியாள் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இந்த அம்மை கோயிலுக்கும் சுவாமி கோயிலுக்கும் இடையே தான் சுப்பிரமணியருக்கு ஒரு சிறு கோயில் இருக்கிறது. அம்மையை வணங்கிய பின் ஆறுமுகனையும் சென்று வணங்கி வெளிவரலாம்.


பின்னர் வெளி முற்றத்துக்கு வந்தால், இன்னுமொரு பெரிய கோயில் இருப்பதைப் பார்ப்போம். அது என்ன கோயில் என்று விசாரித்தால் அதுதான் ஆதிகேசவப் பெருமாள் கோயில் என்பார்கள். இது சிறப்புத்தானே. சைவ வைஷ்ணவ வேற்றுமைகளைக் களைந்தெறியவே, பெரியதோர் ஈசுவரன் கோயிலிலேயே பெருமாளுக்கும் இடம் கொடுத்திருக்கிறார்கள். ஆம்! அன்று தில்லைச் சிற்றம்பல

வன் கோயிலிலே திருச்சித்ரகூடத்துப் பெருமாளையும் தரிசித்து வணங்கி யிருக்கிறோமே. இக்கோயிலில் ரங்கமண்டபம் விஸ்தாரமான மண்டபம். ஆதிகேசவப் பெருமானது துணைவி சௌந்தரவல்லிக்கு ஒரு தனிக் கோயில். ரங்க மண்டபத்தின் வடபக்கத்திலே தனித்தனிக் கோயிலில் ருக்மிணி சத்யபாமை சகிதமாக வேணுகோபாலன் வேறே இருக்கிறார். திருமால் சந்நிதிக்கும் தாயார் சந்நிதிக்கும் இடையில் நம்மாழ்வார், ராமானுஜர் எல்லாம். இன்னும் கோயில் கல்தூண்களில் பட்டாபிராமர், கோதண்டராமர், திருப்பணி செய்த பக்தர்களின் சிலைகள்.

இவர்களை யெல்லாம் தரிசித்த பின் வெளியே வருவோம் என்றால் உடன் வருபவர்கள் கிழக்கு மதில் சுவர்ப்பக்கம் நம்மை அழைத்துச் செல்வார்கள். அம்மதில் சுவரில் அம்மை சந்நிதிக்கு நேர் எதிரில் உள்ள மூன்று சிறு துவாரங்களைக் காட்டுவார்கள். அந்தத் துவாரங்கள் எப்படி ஏற்பட்டன என்பதற்கு ஒரு ரசமான கதையையும் கூறுவார்கள். கும்பினியார் இந்தியாவை ஆண்டபொழுது இந்தப் பவானிதான் சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களுக்குத் தலைநகராக இருந்திருக்கிறது. 1802ம் வருஷத்தில் இங்கு கலெக்டராக இருந்தவர் வில்லியம் காரோ என்னும் துரைமகனார். அவர் பத்துப் பன்னிரண்டு வருஷங்கள் இங்கு இருந்திருக்கிறார். அவர், இப்போது பிரயாணிகள் விடுதியாக இருக்கும் பங்களாவிலே தங்கி வாழ்ந்திருக்கிறார். தினசரி இந்தச் சங்கமேசுவரர் கோயிலுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வருவதையும் கூடுதுறையில் குளிப்பதையும் கண்டிருக்கிறார். அதோடு வருபவர்கள் வேதநாயகியின் அருளைப் பற்றி அடிக்கடி பேசுவதையும் கேட்டிருக்கிறார். அவருக்கு ஓர் ஆசை இந்த வேதநாயகியைத் தரிசிக்க வேண்டும் என்று. இவரோ பிற மதத்தினர். கோயிலுள் வர அனுமதிக்கப்படமாட்டார். இவரது ஆவலை அறிந்த அந்தத் தாலுகா தாசில்தார் அம்பிகையின் சந்நிதிக்குநேரே மதிலில் மூன்று சிறு துவாரங்கள் செய்து அவை வழியாக அலங்கரிக்கப்பட்ட அம்பிகையைக் கலெக்டர் காண வகை செய்திருக்கிறார். அம்பிகையின் வடிவழகைக் கண்டு வழிபாடு செய்திருக்கிறார் கலெக்டர். இப்படியே தினசரி சிறு துளை வழியாக அம்மையைக் கண்டு தரிசித்து வந்திருக்கிறார் காரோ துரை. ஒருநாள் இரவு தம் பங்களாவில் உறங்கிக் கொண்டிருந்த போது வேதநாயகியைப் போல் அலங்காரம் செய்துகொண்ட பெண் ஒருத்தி தம்மை வெளியே போகும்படி சொன்னதாகக் கனவு கண்டிருக்கிறார். அப்படியே படுக்கையை விட்டு எழுந்து வெளியேயும் வந்திருக்கிறார். என்ன அதிசயம், இவர் வெளி வந்த சில நிமிஷங்களில், பங்களா கூரையே இடிந்து விழுந்திருக்கிறது. அன்னையின் அருளை வியந்து வாழ்த்திய கலெக்டர், தந்தத்தாலேயே ஒரு கட்டில் செய்து அதனை அம்பிகைக்குத் தம் காணிக்கையாக வழங்கியிருக்கிறார். கட்டிலில் தம் பெயரையும் பொறித்து வைத்திருக்கிறார். இக்கட்டில் காணிக்கையாகக் கொடுக்கப்பட்ட தேதி 11–1–1804 என்று கட்டிலில் இருந்து தெரிகிறது. தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் என்றார் மாணிக்கவாசகர். அப்பாலும் அடிசார்ந்த திருக்கூட்டமும் அடியார் கூட்டத்துடன், சேர்ந்தவர்களே. இந்த முறைப்படி, பிற மதத்தினரையும் தம் அடியவர்களாகச் சேர்த்துக் கொள்ளும் சங்கமேசுவரர்–வேதநாயகியின் பெருமைதான் என்னே? பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடந்த இந்தச் சம்பவத்தை முன்னரே அறிவிப்பார் போல் ஆயிரத்து இருநூறு வருஷங்களுக்கு முன்பே ஞானசம்பந்தர் பாடியிருக்கிறார்:

வில்லார் வரையாக, மாநாகம்
நாணாக, வேடங் கொண்டு
புல்லார் புரம்மூன்றும் எரித்தார்க்கு
இடம்போலும், புலியும்மானும்
அல்லாத சாதிகளும் அங்கு அழல்
மேல் கைகூப்ப அடியார்கூடி
செல்லா அரு நெறிக்கே செல்ல
அருள் புரியும் திருநணாவே.

என்பது அவரது தேவாரம். 'அல்லாத சாதிகள்' ஜாபிதாவில் காரோ துரையும்



பவானி கோயில்

சேர்ந்தவர்தானே. இங்குள்ள சங்கமேசுவரர்-வேதநாயகி தாம் பாடல் பெற்றோர்கள் என்று இல்லை. இங்குள்ள முருகனும் அருணகிரியாரால் பாடப் பெற்றவர்.

மலைமேவு மாயக் குறமாதின்
மனமேவு வாலக் குமரேசா!
சிலை வேட சேவல் கொடியோனே
திருவாணி கூடற் பெருமாளே!

பவானியே வாணி என்று குறுகி நிற்கிறது. இதற்குச் சங்ககால இலக்கியத்திலேயே ஆதாரம் இருக்கிறது. இங்குள்ள கல்வெட்டுகள் அனந்தம். மும்முடிக்கெட்டி முதலியார் பரம்பரையினரே கோயிலின் பெரும் பகுதியைக் கட்டி யிருக்கிறார்கள். பதினெட்டாம் நூற்றாண்டில் கிருஷ்ணராய உடையார் தளவாய் தேவராயன் ஒரு மண்டபத்தைக் கட்டி யிருக்கிறான். பின்னும் திருப்பணி பல நாராயண கவுண்டர் என்பவர் செய்திருக்கிறார். இன்றும் திருப்பணி நடக்கிறது, சிறப்பாக. திருப்பணியில் தமிழ் மக்கள் பங்கு பெற விரைய வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

* எல்லோராலும் புகழப்படுவது

TRAYONS

"டிரெயான்ஸ்" ரேயான் நூல்களினால் செய்த ஆடைகள் எல்லோராலும் புகழப்படுகிறது.

இந்தியாவில் முதல் முதலாக சிறந்த ரசாயன முறையில் தயாரிக்கப்பட்ட உன்னத நூல் "டிரெயான்ஸ்" ரேயான் நூல்கள். விலை மலிவு-நீண்ட காலம் உழைப்பு-பகட்டான உடைகளுக்கு ஏற்றது.

"டிரெயான்ஸ்" ரேயான் நூல்கள் 100, 120, 150, 300 டினேயர்களில் தயாரிக்கப்படுகின்றன.

*



Rt

ஸ்டாக்கிஸ்டுகள்

ரேயான் டிரேடர்ஸ் பிரைவேட் லிமிடெட்

போன்: 21641. நெ. 61, செம்புதாஸ் தெரு, சென்னை-1. தந்தி: "CELYARN",

கிளைகள்:

போன்: 253. தந்தி: "CELYARN" 68/416, மெயின் ரோடு, செவ்வாய்பேட்டை, சேலம்.

போன்: 598. தந்தி: "CELYARN" 114/A, தெற்கு மாசி வீதி, மதுரை.

போன்: 3441. தந்தி: "RAYONS" யூனைடெட் இந்தியா பில்டிங் அவிநாசி ரோடு, கோவை.

சொர்க்கத்தின் நிழல்

ஜெகசிற்பியன்

அத்தியாயம் இருபத்தொன்று

எண்ணங்கள் குழம்பின. எந்த ஒரு முடிவுக்கும் வர முடியாமல் திக்கித் திணறிய கோமதி ஹோட்டலை விட்டு வெளியே வந்து சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தாள். அப்போதுதான் திருவாளர் நீலமேகத்தின் கார் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.

இரவு மணி எட்டரை இருக்கும். தெருவில் ஜன நடமாட்டமும் அடங்கி விட்டது. மலைத்து நின்றிருந்த கோமதி, கீழே வைத்திருந்த பெட்டியை வெடுக்கென்று எடுத்துக் கொண்டு ரயில்வே ஸ்டேஷனை நோக்கி வேகமாக நடந்தாள். சற்றுத் தூரம் சென்றதும் தயங்கி நின்று பின்னால் திரும்பிப் பார்த்தாள். நீலமேகத்தின் கார் சென்ற திசையையே சிறிதுநேரம் வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'அந்த மனிதரின் யோசனைப்படி விவேகானந்தன் பணத்தைப் பெற்றுக் கொண்டு தேர்தல் போட்டியினின்றும் விலகிக் கொள்வாரா? அப்படி விலக மறுத்தால்? ....நிச்சயமாக ஏதாவது விபரீதம் நடந்து விடும். எதற்கும் அஞ்சாத அந்த முரடர்கள், நீலமேகம் சொல்லிக் கொடுத்தபடி எதையும் துணிந்து செய்து விடுவார்கள். ஐயையோ! அவர் உயிருக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் என்ன செய்வது? இவ்வளவு பெரிய சதிச் செய்தி எனக்குத் தெரிந்த பின்னும் அவரை எச்சரிக்காமல் போகலாமா?... ஹூம்!....எனக்கு ஏன் இந்தக் கவலை? அவர்தான் என்னை அடியோடு வெறுக்கிறாரே. என்னுடைய மாசற்ற அன்பைத் துச்சமாக எண்ணித் தூக்கி எறிந்து விட்டாரே. என்னை ஒரு பெண் ஜன்மமாகவே கருதாமல் புழுவினும் கேவலமாக ஏசிப் பேசுகிறாரே. அந்த அவமதிப்பைத் தாளமாட்டாமல் தானே, இதோ மனம் நொந்து இந்த ஊரை விட்டே ஓடிப் போகப் புறப்பட்டிருக்கிறேன். இனி எனக்கும் அவருக்கும் என்ன உறவு இருக்கிறது? நான் ஏன் அவரைப் போய் எச்சரிக்க வேண்டும்? என் முகத்தைப் பார்க்கவே விரும்பாத அவர் முகத்தில் நான் ஏன் விழிக்க வேண்டும்? இதெல்லாம் வீண் முயற்சி! வேண்டாத எண்ணங்கள்! நம் வழியைப் பார்த்துக் கொண்டு நாம் போக வேண்டியதுதான்!'—

திடுக்கிட்டவள் போல் கண்களை நிமிண்டிக் கொண்டு நிமிர்ந்தாள் கோமதி. சற்றுத் தொலைவில் யாரோ ஒரு வாலிபன் கண்மண் தெரியாமல் ஓடி வருவது தெரிந்தது. யார் அது. மோகனசுந்தரமா? ஆமாம்; அவனேதான்.

கோமதியின் உடல் படபடத்தது. அவள் சடாரென்று பாய்ந்து போய் ஓர் ஒதிய மரத்தின் பின்னால் ஒடுங்கி மறைந்து நின்று கொண்டாள்.

மேல்மூச்சு வாங்க ஓடி வந்த மோகனசுந்தரம் அந்த ஒதிய மரத்தின் அருகில் சென்று நின்றான். அங்குமிங்குமாகப் பரபரப்புடன் எட்டியெட்டிப் பார்த்தான். பிறகு மிகுந்த சோர்வோடு தலையைத் தாங்கிப் பிடித்த வண்ணம் அம்மரத்தின்மீதே சாய்ந்து கொண்டான்.

இருட்டில் ஒளிந்து நின்ற கோமதியின் மனம் 'திக், திக்'கென்று அடித்துக் கொண்டது. தன்னை அவன் கண்டு பிடித்து விடுவானோ என்று அவள் பயந்து நடுங்கினாள். அந்த நடுக்கத்தினூடும் அவளுடைய மனம் அவனுக்காகப் பெரிதும் அநுதாபப்பட்டது.

'பாவம், இந்தப் பேதை வாலிபர் என்னை எவ்வளவு ஆவேசமாக நேசிக்கிறார்! இல்லையென்றால் என்னைக் கண்டதும் இப்படித் தலைதெறிக்க ஓடி வருவாரா? இத்தகைய அன்பு உள்ளத்தை நான் ஏன் நிர்த்தாட்சிண்யமாக ஒதுக்கித் தள்ள வேண்டும்? அதனால் இந்த அப்பாவி மனம் எவ்வளவு வேதனையும் விரக்தியும் அடைந்திருக்கும். பேசாமல் அவர் எதிரில் போய் நின்று விடலாமா?.. சே. இது என்ன நினைப்பு! இந்த மனிதரின் வெறித்தனமான அன்பை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையிலா நான் இருக்கிறேன்? என்னிடமிருந்த நெஞ்சைக் கழற்றி ஓர் இறுகிக் காய்ந்த கற்பாறையின்மேல் எறிந்து விட்டு அது துடிதுடிக்கும் துன்பக் காட்சியைப் பார்த்துக் கொண்டு வெறுங்கூடாக அல்லவா இப்போது இந்த உலகத்தில் நடமாடிக் கொண்டிருக்கிறேன். கல்லைக் கடவுளென நினைத்து அதன் கழலடியில் சமர்ப்பித்துவிட்ட என் நெஞ்சத்தை மீண்டும் எடுத்து மற்றொரு விக்கிரகத்தின் முன்னே வைக்க முடியுமா? இனி இந்த ஜன்மத்தில் அது நடக்காதே. இப்படிப் பயனற்றுப் போ

இவ்வெறுங் கூட்டைக் காட்டி இந்த அசட்டு வாலிபனின் உணர்ச்சிப் புயலை வீணே ஊதி விடுவானேன்? அதற்குப் பயந்து கொண்டுதானே அவர் கண்ணில் படாமல் இப்படி ஓடி வந்து ஒளிந்து கொண்டிருக்கிறேன்!' கோமதி இன்னும் இருளோடு இருளாய் மறைந்து நின்றாள்.

பிரக்ஞையிழந்தவன் போல் மரத்தின் மேல் சாய்ந்து விட்டிருந்த மோகன சுந்தரம் மெள்ள நிமிர்ந்து சாலையில் இறங்கி இரு பக்கமும் திரும்பிப் பார்த்தான் "ம்... நான் அங்கே பார்த்த பெண் கோமதிதானா? அல்லது வேறு யாரேனுமா? இல்லை; அவள்தான். அதில் சந்தேகமில்லை. இந்தப் பக்கம் தான் போயிருப்பாள் இன்று எந்நேர மானாலும் அவளைக் கண்டுபிடிக்காமல் வீடு திரும்புவதில்லை" என்று முனகிய வாறு மீண்டும் ஆவேசம் வந்தவன்போல் ஓடலானான்.

அவன் அந்தச் சாலையில் வெகுதூரம் சென்றபின் ஒதிய மரத்தின் இருட்டி லிருந்து வெளியே வந்த கோமதிவேறொரு திசையில் திரும்பி நடந்தாள். மோகன சுந்தரத்தின் கண்ணில் பட்டுவிடுவோமோ என்ற பயத்தால் ஓட்டமும் நடையுமாக விரைந்தாள். கையில் பெட்டியைத் தூக்கிக் கொண்டு அவ்வளவு வேகமாக நடப்பது மிகவும் கஷ்டமா யிருந்தது. கால்கள் பின்னிப் புரண்டன. ஆயினும் சீக்கிரமாக ரயில்வே ஸ்டேஷனை அடைந்துவிட வேண்டும் என்ற பரபரப்புடன் நடந்தாள்

அதிர்ஷ்டவசமாக எதிரே ஒரு டாக்ஸி வந்தது. உரக்கக் குரல் கொடுத்து அந்த டாக்ஸியை நிறுத்தினாள் கோமதி. அவளுடைய அவசரத்தைப் புரிந்துகொண்ட டாக்ஸி டிரைவர், "எங்கேம்மா போகணும்?" என்று கேட்டான். "சென்ட்ரல் ஸ்டேஷன்" என்று சொல்லிக்கொண்டே காரின் கதவைத் திறந்தாள் கோமதி. "இங்கே, பாருங்கம்மா! நான் இப்பவே சொல்லிப்பிடறேன்: மீட்டர் சரியா 'ஒர்க்' பண்ணலே. அது ரிப்பேரா யிருக்கு. சென்ட்ரலுக்குப் போக மூணு ரூபா ஆகும். அங்கே வந்து தகராறு பண்ணக் கூடாது" என்றான் அலட்சியமும் கண்டிப்புமாக. உண்மையில் அந்த டாக்ஸியின் மீட்டருக்கு எவ்விதக் கோளாறும் இல்லை. இரவு நேரங்களில் பிரயாணிகளின் தவிப்பைப் பயன்படுத்திக் கொண்டு அதிகப்படியாகக் கட்டணம் கறக்க இப்படி ஒரு பொய் சொல்வது வழக்கம். இதற்காக டிரைவரிடம் வாதிட்டுக் கொண்டிருக்க விரும்பாத கோமதி, "சரி, சரி; ஆகட்டும்" என்றவாறு அவசரமாக வண்டியில் ஏறி அமர்ந்தாள். பாதிக்குப் பாதி லாபம் என்று மகிழ்ந்த டிரைவர் உற்சாகமாகக் காரைச் செலுத்தினான்.

பல காலம் பார்த்துப் பழக்கப்பட்ட பல கட்டடங்கள், தொழிற்சாலைகள், சினிமா தியேட்டர்கள், பூங்காக்கள், கடைகள் முதலானவற்றை யெல்லாம் டாக்ஸி ஒவ்வொன்றாகக் கடந்து செல்வதைப் பார்த்துக் கொண்டு வந்த கோமதிக்கு ஏதேதோ எண்ணங்களெல்லாம் எழுந்தன. இந்த உலகத்தை விட்டு மற்றொரு புதிய உலகுக்குப் பிரயாணம் செய்வது போன்ற ஒரு பீதி மயமான உணர்ச்சி ஏற்படவே, அவள் கண்கள் கலங்கித் தாரை தாரையாக நீரைப் பிழிந்தன. முன்றானையால் முகத்தைப் பொத்திக் கொண்டு ஓசையின்றி விம்மி யழுதாள் அவள்.

வேகமாகச் சென்று கொண்டிருந்த டாக்ஸியின் எதிரே, கியாஸ் விளக்குகள் சகிதம் ஒரு பெரிய ஊர்வலம் வந்தது. பல்வேறு சுலோகங்களின் கோஷம் காதைத் துளைத்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு கவனித்தாள் கோமதி.

"கோபாலா!"

"ஏன், சார்!"

"எங்கே போறே?"

"வோட்டுப் போட."

"யாருக்கு?"

"விவேகானந்தனுக்கு!"

"என்ன, பொட்டி?"

"பானை பொட்டி!"

"வோட் ஃபார்?"

"பாட் பாக்ஸ்!"

"வோட் ஃபார்?"

"விவேகானந்தன்!"


இம்மாதிரி கோஷங்களை எழுப்பிய வாறு தேர்தல் விளம்பரத் தட்டிகளைப் பிடித்துக் கொண்டு வந்த ஊர்வலத்தைக் கடந்து சென்றது டாக்ஸி.

இது வரையில் குழம்பிய மனத்துடன் சோர்ந்து சாய்ந்து கொண்டிருந்த கோமதி தன்னை மீறிய ஒரு பரபரப்புடன் நிமிர்ந்தாள். பின்னால் செல்லும் ஊர்வலத்தை எட்டிப் பார்த்தாள்.

'எவ்வளவு பெரிய ஊர்வலம்! எத்தனை உரத்த கோஷங்கள்! இந்த அளவுக்குப் பிரசாரம் செய்யும் விவேகானந்தனுக்குத் தம் வெற்றியில் எவ்வளவு நம்பிக்கை இருக்க வேண்டும்! ஊர்வலத் தினரையும் அவர்களின் உற்சாக கோஷங்களையும் பார்த்தால் நிச்சயமாக அவர்தான் வெற்றி பெறுவார் போல் தோன்றுகிறது!' என்று கூவிக்குக் கூவிச் செல்



னும் கூட்டத்தைப் பார்த்து இப்படி எண்ணி வியந்தாள் அந்தப் பேதைப் பெண். அதைத் தொடர்ந்து மற்றோர் எண்ணம்: 'இவ்வளவு பெரிய ஆதரவும் நம்பிக்கையும் இருக்கும்போது அவர்



ளும் தேர்தல் போட்டியிலிருந்து விலகிக்கொள்ளச் சம்மதிப்பாரா? பத்தாயிரமல்ல, பத்து லட்சம் கொடுப்பதானாலும் அவர் அதற்குச் சம்மதிக்கவே மாட்டார். அப்படி அவர் சம்மதிக்க மறுத்தால்?... ஐயோ! அதை நினைக்கவே பயங்கரமாக இருக்கிறதே!' நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டாள் கோமதி.

'அவர் என்னை வெறுத்தால் என்ன? துச்சமாகத் தூக்கியெறிந்து பேசினால் என்ன? என் காதலை ஏற்க மறுத்தால் தான் என்ன? அது அவருடைய நிலை; ஆனால் என் நிலை? நான் அவரை வெறுக்கவில்லை. அவருடைய அன்புக்காக ஏங்குகிறேன். என் வாழ்நாள் முழுதும் ஏங்கிக் கொண்டே இருப்பேன். அப்படி நான் ஏங்குவதற்கேனும் அவர் உயிராய் இருக்க வேண்டாமா? என் வரையில் அவர் எனக்கே சொந்தமானவர். என் உயிரே போவதானாலும் அவருக்கு எள்ளளவு தீங்கு நேரவும் ஒப்பமாட்டேன். எனவே, இப்போதே ஓடிப்போய் அந்தச் சதி விஷயத்தைச் சொல்லி அவரை எச்சரிக்க வேண்டும் அது என் கடமை! அதுதான் என் முதல் வேலை.'

விவேகானந்தனின் வீட்டுக்குப் போவது என்ற முடிவுடன் டாக்ஸியைத் திருப்பும்படி டிரைவரிடம் சொல்ல வாயெடுத்தாள் கோமதி.

"டாக்ஸி! டாக்ஸி!"

படபடவெனக் கைதட்டிக் கூப்பிட்ட குரல் கேட்டு டாக்ஸியை மெள்ள நிறுத்திய டிரைவர் பின்னால் திரும்பி, "அம்மா! கோவிச்சுக்காதிங்க! பாவம், யாரோ.

ஒரு பாஸஞ்சர் கூப்பிடறார். என்ன அவசரமோ? எங்கே போகணுமோ? இப்படி மூன் சீட்டிலே ஏத்திக்கிறேன். எனக்கு இன்னிக்குப் பூராவும் சவாரியே கிடைக்கலே! நீங்க கவலைப்படாதீங்க. சரியான டயத்துக்கு உங்களைக் கொண்டு போய் ஸ்டேஷன்லே இறக்கிப்பிடறேன். வேணுமானா எட்டணா குறைச்சுக் கொடுங்க!" என்று தயவாக வேண்டினான்.

மீட்டர் கருவியின் 'கொடி'யை இறக்காதிருந்ததால், டாக்ஸி காலியாகப் போகிறதென்று கருதி யாரோ அழைக்கிறார்கள் என்பதை உடனே புரிந்து கொண்டாள் கோமதி. அவளுக்குக் கோபம் குமுறியது. ஆனால் டிரைவரிடம் நியாயத்தை வாதிடத் துணிவில்லை. பேசாமல் கீழே இறங்கிவிட வேண்டியது தான் என்ற முடிவுடன் டாக்ஸியை அழைத்த நபர் யாரென்று கவனிக்கப் பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

அதோ தெரிகிறதே, அது சிவப்பிரகாசத்தின் பங்களா அல்லவா? அந்தப் பங்களாவின் காம்பவுண்ட் வாயிலண்டை நின்றிருந்த ஒரு வாலிபன் டாக்ஸியை நோக்கி வந்து கொண்டிருந்தான். யார் அவன்? சந்தேகமில்லை; விவேகானந்தன் தான்!

அதிர்ந்து விட்டாள் கோமதி. அவளுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. உடலும் உள்ளமும் ஒரேயடியாகப் பரபரத்தன. மறுபக்கக் கதவைத் திறந்து கொண்டு ஓடிவிடலாமா என்று ஓர் எண்ணம். அது பயனற்ற முயற்சி. ஏன் அப்படி ஓட வேண்டும்? இப்போது விவேகானந்தனைப் பார்க்க வேண்டுமென்பதுதானே அவளுடைய முடிவு? ஆனால்...ஆனால்? கோமதிக்கு மூச்சு முட்டியது.

"எங்கே சார் போகணும்?"

"எதற்கு இந்தக் கேள்வி?"

"மீட்டர் சரியா 'ஒர்க்' பண்ணலே, அதுக்குத்தான் சார்!"

"அப்படியானால் டாக்ஸியை ஏன் வெளியே கொண்டு வந்தாய்?"

டிரைவர் விழித்துக் கொண்டான். "இது ஷெட்டுக்குப் போற வண்டி சார். என்னமோ அவசரமா கூப்பிடுறீங்களேன்னுதான் நிறுத்தினேன். அதுக்குள்ளாற சட்டம் பேச ஆரம்பிச்சுட்டீங்க! நல்லதுக்குக் காலம் இல்லே!" என்று சமாளித்தான்.

"சரி, சரி; நான் எழும்பூர் வரையில் போக வேண்டும். இரண்டு ரூபாய் தருவேன். சம்மதமா?"

"வாங்க சார் வந்து ஏறுங்க."

முன்னால் சென்ற டிரைவர், காரின் முன் பக்கக் கதவைத் திறந்து விட்டான். விறைப்பாக நடந்து வந்த விவேகானந்தன் காரில் ஏறி அமர்ந்தான். கோமதியின் உடல் நடுங்கியது. மூச்சொலியைக் கூட அடக்கிக் கொண்டு ஒரு மூலையில் ஒடுங்கி முடங்கினாள் அவள். விவேகானந்தன் எதைப் பற்றியோ தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்ததால் அவனுடைய பார்வை அப்படியிப்படி திரும்பாமல் ஒரே நேராக நிலைத்திருந்தது.

கோமதியின் கண்கள் நிலைகொள்ளாமல் துடிதுடித்தன. நெஞ்சின் ஓட்டமோ அளவை மீறியது. இத்தகைய அவஸ்தை நிலையிலும் அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதில் ஏதோ ஓர் இனம் புரியாத மகிழ்ச்சி உள்ளத்தில் ஊற்றெடுத்தது. இவ்வளவு நேரமாகத் தன் எதிர்காலத்தைப் பற்றிக் கொண்டிருந்த பயமும் குழப்பமும்கூட இப்போது ஓரளவு நீங்கிவிட்ட மாதிரி அவளுக்குத் தோன்றியது.

விவேகானந்தன் திடீரெனப் பின்னால் திரும்பிப் பார்த்து விட்டால் என்ன செய்வது? இந்நிலையில் அவன் அவளைப் பற்றி என்ன நினைப்பான்? - கோமதியின் மனம் மீண்டும் குழம்பியது. இந்தக் குழப்பத்திலும் மற்றோர் எண்ணம்: 'இப்போது இவர் தேவகியின் வீட்டிலிருந்து அல்லவா வருகிறார்? அங்கு ஏன் இவர் போனார்? நின்றுபோன கல்யாணப் பேச்சு மீண்டும் ஆரம்பமாகி விட்டதா?' நெஞ்சின் ஓட்டமே ஸ்தம்பித்துப் போன மாதிரி மரண வேதனையை யடைந்தாள் கோமதி.

"ஏன் சார். அடுத்த வாரம் நடக்கப் போகிற தேர்தலிலே யார் ஜெயிப்பான்?" என்று கேட்டான் டிரைவர். மீட்டர் கணக்கின்றி ஐந்து ரூபாய் கிடைக்கப் போகிறதென்ற குஷி அவனுக்கு.

"யார் ஜெயிக்க வேண்டுமென்று நீ விரும்புகிறாய்?" என்று கரகரத்த குரலில் திருப்பிக் கேட்டான் விவேகானந்தன்

"விரும்பி வோட்டுப் போட்ட காலம் போயிடுச்சு சார். இப்போ எவன் வந்தாலும் எங்களுக்கு ஒண்ணுதான்."

"ஓகோ! சரி; யார் ஜெயிப்பார்கள் என்று உனக்குத் தோன்றுகிறது?"

"நேத்திக்கு நீலமேகத்தின் தேர்தல் ஏஜெண்டு ஒருத்தர் என் வண்டியைச் சவாரி பிடிச்சார். மீட்டர் சார்ஜ் நாற்பது ரூபாய் ஆச்சு. அதனாலே அவர்தான் ஜெயிப்பார்னு எனக்குத் தோணுது, சார்!" என்றான் டிரைவர். எந்த விஷயத்தையும் அவனவன் தன் சொந்தக் 'கை'யைக் கொண்டு முழம் போட்டுப் பார்த்துக் கொள்வது இயல்புதானே? பக்கத்திலிருக்கும் ஆள் யாரென்று அவனுக்குத் தெரியாதபோதும்!

"சரியாகச் சொன்னாய். நானும் அப்படித்தான் நினைக்கிறேன்" என்று மெல்ல முனகினான் விவேகானந்தன். அவன் குரலில் அளவுக்கு மீறிய சலிப்பும் விரக்தியும் தொனித்தன.

இந்தப் பதிலைக் கேட்டு உள்ளூறத் திகிலடைந்தாள் கோமதி. தேர்தலில் தான் வெற்றியடைவோம் என்ற நம்பிக்கை இல்லாத மாதிரியல்லவா அவன் பேசுகிறான்? அப்படியானால் நீலமேகத்தின் யோசனைப்படி பணத்தை வாங்கிக் கொண்டு கௌரவமாகத் தேர்தல் போட்டியினின்றும் வாபஸாகி விடுவானோ? அவ்வாறு விலகுவதானால் இப்போது அவனிடம் அந்தச் சதி விஷயத்தைச் சொல்வதில் பயனில்லையே! - கோமதியின் உள்ளம் மிரண்டது.

"இங்கே பாரப்பா, டிரைவர்! தலைகீழாக நின்றால் கூட நீலமேகம் ஜெயிக்க மாட்டான் நிச்சயமாக இந்த விவேகானந்தனுக்குத்தான் வெற்றி!" என்று திடீரென உரத்த குரலில் கர்ஜித்தான் விவேகானந்தன்.



டிரைவர் பயந்து விட்டான். அவனுக்கு இப்போதுதான் தன் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவன் யார் என்ற விஷயம் தெரிந்தது. "மன்னிக்கணும், சார்! நான் சும்மா அப்படிச் சொன்னேன். எனக்குத் தெரியாதுங்களா? என்னுடைய 'வோட்'டை உங்களுக்குத் தானே 'ரிஸர்வ்' பண்ணி வைச்சிருக்கேன்!" என்று குழைந்தான் அவன்.

சிறிய சந்து ஒன்றில் இரும்பிய டாக்ஸி ஒரு வீட்டின் முன்னே போய் நின்றது. அது சாரங்கனின் 'புறாக் கூண்டு' வீடு! புறப்பட்ட இடத்துக்கே வந்து சேர்ந்து விட்டாள் கோமதி!

வண்டியை விட்டு இறங்கிய விவேகானந்தன் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து டிரைவரிடம் கொடுத்து விட்டு மீதிப் பணத்தை வாங்கிக் கொள்ளாமலே அந்த வீட்டை நோக்கி விர்ரென்று நடந்தான். டிரைவரின் வோட்டுக்கு மூன்று ரூபாய் அச்சாரம் போலும்!......

திகைத்து உட்கார்ந்திருந்த கோமதி ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாய்ச் சட்டென்று கீழே இறங்கி, "டிரைவர்! ஒரு நிமிஷம் இரு; இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே விவேகானந்தனைப் பின்தொடர்ந்து வேகமாகச் சென்றாள்.

இருண்டு கிடந்த அந்த வீட்டின் குறுகலான மாடிப் படிகளில் நிதானமாக ஏறிக் கொண்டிருந்த விவேகானந்தன், பின்னால் யாரோ தடதடவென்று ஓடி வருவது போன்ற காலடி ஓசை கேட்டுச் சட்டென்று நின்று திரும்பினான்.

"யாரது?"

மேல்மூச்சு வாங்க ஏழெட்டுப் படிகளைக் கடந்து வந்த கோமதி, அவன் நின்றிருந்த படியின் கீழ்ப்படியில் நின்று, "நான்தான். ஒரு முக்கிய விஷயம்" என்று பயத்தால் நடுங்கிக் குழறும் குரலில் இழுத்தாள்.

இருட்டில் அவளை ஊடுருவிப் பார்த்த விவேகானந்தன், "என்ன விஷயம்?" என்று அலட்சிய வெறுப்புடன் அதட்டிக் கேட்டான்.

"வந்து ... இன்றிரவு... நீங்கள்...தனியே வீட்டுக்குப் போக வேண்டாம்."

"ஏன்? நீ எனக்குத் துணையாக வருகிறேன் என்கிறாயா?" என்று குத்தலாக வினவினான் விவேகானந்தன்.

"இல்லை. யாராவது இரண்டு பேரைத் துணைக்கு அழைத்துச் செல்லுங்கள். அல்லது..."

"அல்லது...?" என்று அதட்டுவது போல் கேட்டான் விவேகானந்தன்.

"இங்கே. இந்த வீட்டிலேயே வேண்டுமானால் தங்கி விடுங்கள்!"

"ஓகோ! அவ்வளவு தூரத்துக்கு நெருங்கத் துணிந்து விட்டாயா?"

"தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். இன்றிரவு நீங்கள் எங்கேயும் தனியே போக வேண்டாம்."

"ஹாம்! உன் சிருங்கார நடிப்புத் திறமையின் உச்சகட்டமா இது? இவ்வளவு மோசமான ஒரு பெண்ணாக நீ இருப்பாய் என்று நான் நினைக்கவே இல்லை!" என்றான் ஆத்திரத்தோடு.

செவியில் கனற் புகுந்தாற் போல் துடித்து விட்டாள் கோமதி. மேலும் ஒரு படியில் ஏறி நின்று, "நீங்கள் எது வேண்டுமானாலும் சொல்லுங்கள். ஆனால் தயவுசெய்து இன்று தனியே உங்கள் வீட்டுக்குப் போகாதீர்கள். போனால் ஒரு பெரிய விபத்துக்கு உள்ளாவீர்கள்" என்று கெஞ்சும் குரலில் குழறிக் கொண்டே அவனது இடது கையை இறுகப் பற்றினாள். "என்னைப் பய

முறுக்குகிறாயா? சீ, கையை விடு!" என்று கடுகடுத்த விவேகானந்தன் அவள் பிடியிலிருந்து தன் கையை வெடுக்கெனப் பிடுங்கினான்.

"உண்மையாகச் சொல்கிறேன். இன்று நீங்கள் இங்கேயே தங்கி விடுங்கள். தங்குவதாக எனக்கு வாக்குக் கொடுங்கள்" என்று சொல்லி விட்டு மீண்டும் அவன் கையைப் பற்ற முயன்றாள் கோமதி.

விவேகானந்தனின் கோபம் குபீரெனப் பொங்கியது. "காமாந்தகாரப் பேயே! இங்கிருந்து போய் விடு!" என்று கர்ஜித்துக் கொண்டே அவள் கன்னத்தில் பளீரென்று ஓர் அறை அறைந்தான். 'ஹும்! மானங்கெட்ட மிருக ஜன்மங்கள்!' என்று உறுமியவாறு மள மளவென்று மேலே ஏறி விரைந்தான்.

கண்ணில் மின்னல் பொறி பறக்கக் கதிகலங்கிப் போன கோமதி மாடிப் படியின் கைப்பிடிக் கட்டையில் அப்படியே துவண்டு சாய்ந்து விட்டாள்.

தெருவில் நின்ற டாக்ஸி டிரைவர் பொறுமையிழந்து ஹாரன் ஒலி எழுப்புவது கேட்டது.

அத்தியாயம் இருபத்திரண்டு

"இந்த வீட்டுக்கு வரும்போதே நான் நினைத்தேன்; அது சரியாகி விட்டது. இதற்குத்தான் இந்தப் பக்கமே தலை காட்டுவதில்லை."

மேஜை மீது குப்புறக் கவிழ்ந்து சாய்ந்து கிடந்த சாரங்கன் மெள்ளத் தலை தூக்கிப் பார்த்தான். அவன் கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன. சவம் போல் முகம் வெளிறியிருந்தது. வெறி பிடித்தவன் போல் உள்ளே பாய்ந்து வந்த விவேகானந்தனை அவன் விழி புரட்டாமல் பார்த்தான்.

தன் கோபத்தை யெல்லாம் திரட்டி ஒரு நாற்காலியை வேகமாக இழுத்துப் போட்டு அதில் தொப்பென்று சாய்ந்த விவேகானந்தன் தலையை இரு கைகளாலும் அழுத்திப் பிடித்துக் கொண்டு நாசி புடைக்க மூச்சுவாங்கினான். அவனுடைய இந்த ஆர்ப்பாட்டங்களை யெல்லாம் கொஞ்சமும் சட்டை செய்யாத சாரங்கன் மேஜை மீது கிடந்த 'லெட்டர் - பேடை'யும், சுவரில் திருப்பி மாட்டப் பட்டிருந்த தன் புகைப் படத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்கள் மீண்டும் கலங்கின.

"என்னப்பா, சாரங்கா! நீ மேலே இருந்து கொண்டுதான் இந்த நாடகத்தை யெல்லாம் நடத்திக் காட்ட அனுப்பினாயா?" என்று சீற்றத்துடன் இரைந்து கேட்டான் விவேகானந்தன். கோமதியை ஓங்கி அறைந்த அவனுடைய வலக்கை இன்னமும் விறுவிறுத்துக் கொண்டிருந்தது.

சாரங்கன் இப்போதும் அவனைத் திரும்பிப்பார்க்கவில்லை. மெள்ள எழுந்து போய் அந்தப் படத்தைச் சரியாக நிமிர்த்தி வைத்து விட்டு வந்து அமர்ந்து. "ம்...பறவை பறந்துவிட்டது. அதை எத்தனை நாளைக்குக் கூண்டுக்குள்ளே அடைத்து வைக்க முடியும்? எதிர்பார்த்த விஷயம்தான்!..." என்று தனக்குள் மெல்ல முனகினான்.

விவேகானந்தன் அவனை வெறுப்புடன் ஏறிட்டு நோக்கினான். 'பயல் நடிக்க ஆரம்பித்து விட்டான்' என்று அவன் மனம் கறுவியது.

"ஏமாற்றம் என்பது ஒரு பெரிய அதிர்ச்சிதான். அதை எல்லோராலும் தாங்கிக் கொள்ள முடியாதுதான். ஆனாலும் என்னிடமாவது ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போயிருக்கலாம். அல்லது தான் போகும் இடத்தையாவது ஒரு வரி எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கலாம்" என்று கம்மிய குரலில் மீண்டும் தனக்குள் முனகிக் கொண்டான் சாரங்கன்.

விவேகானந்தனுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்து விட்டது. ஏ, சாரங்கா! என்ன, நாடகம் போடுகிறாய்? இதற்கெல்லாம் நான் ஏமாந்து விடுவேன் என்று நினைக்கிறாயா?" என்றான் கடுகடுத்த குரலில்.

சாரங்கன் அவனைத் திரும்பிப் பார்த்தான். சற்று நேரம்வரையில் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவன் மெல்லத் தன் தலையைத் தாழ்த்தி, 'நண்பனே! என் அருமைத் தங்கை என்னை விட்டுப் போய்விட்டாளப்பா! எங்கு போகிறேன் என்று என்னிடம் கூடச் சொல்லாமல் போய் விட்டாள்!" என்று உதடுகள் துடிக்கக் குமுறிச் சொன்னான். துக்கம் அவன் தொண்டையை அடைத்தது.

தோளை ஒரு குலுக்குக் குலுக்கிக் கொண்டு அவனைக் கூர்ந்து பார்த்தான் விவேகானந்தன். அவனுக்கு ஆத்திரமும் சிரிப்பும் பொங்கி நுரைத்தன. "என்ன மிஸ்டர், சாரங்கன்! கழுதையோடு சேர்ந்த கன்றும் பொதி சுமக்கும் என்பதுபோல் அந்தக் கூத்துக்காரியுடன் சேர்ந்து நீயும் கூத்துக்காரனாகிவிட்

டாயா? சகவாச தோஷம் என்கிறார்களே அது சரியாகத்தான் இருக்கிறது!" என்றான் வெறுப்புடன்.

"இல்லை, விவேகா! நான் சொல்வது உண்மைதான். கோமதி இந்த வீட்டை விட்டு எங்கோ போய்விட்டாள். இதோ பார். இங்கே அவளுடைய துணிமணிகள் பெட்டி முதலாவைகள் எதுவுமே இல்லை. அவள் தாயின் புகைப்படத்தைக் கழற்றிக் கொண்டு போய்விட்டாள்" என்றான் அழுகுரலில்.

"பீடை தொலைந்ததா? ரொம்ப சரி!" என்று முணுமுணுத்தான் விவேகானந்தன்.

அடிபட்ட வேங்கைபோல் சடாரென்று துள்ளி யெழுந்த சாரங்கன் அவனைக் கட்டெரிக்கிறமாதிரி வெறுத்துப் பார்த்தான். "மனச்சாட்சியற்ற மடையனே! உன்னால்தானடா அந்த ஏழைப் பெண் எங்கோ ஓடிப்போய்விட்டாள். என் உடன் பிறந்த தங்கையைப் போல் நேசித்த அந்த அநாதைப் பெண்ணை நீதானடா விரட்டி விட்டாய். போ, இனிமேல் என் முகத்திலேயே விழிக்காதே! போய்விடு!" என்று இரட்டைக் குரலில் கூவினான்.

விவேகானந்தன் இதைக் கேட்டுக் குபீரெனச் சிரித்தான். குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான். "பிரமாதம் மிஸ்டர் சாரங்கன்! இன்று உன்னுடைய நடிப்பு ரொம்ப ரொம்பப் பிரமாதம்! எனக்கு இப்போதுதான் தெரிகிறது. அவளை இப்படி யெல்லாம் ஆட்டிப் படைக்கும் சூத்திரதாரியே நீதான் என்று!... ஹும்!... அவள் ஓடிவிட்டாளாம்; இவன் உட்கார்ந்து ஒப்பாரி வைக்கிறானாம்! என்னிடமே உன் கதையை அளக்க ஆரம்பித்து விட்டாயோ?" என்று செருக்கும் சினமுமாகப் பொரிந்து தள்ளியவன் மீண்டும் தொடர்ந்து. "அவள் கன்னத்தில் அறைந்த இந்தக் கையின் விறுவிறுப்பு இன்னும்கூட ஆறவில்லை. இதைத் தெரிந்து கொள் பிரதர்!" என்றான் அலட்சியமாக

அவன் கடைசியாகச் சொன்னதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த சாரங்கன் பரபரப்புடன் ஓடி வந்து, "விவேகா! நீ என்ன சொல்கிறாய்? யாரை அறைந்தாய்?" என்று நாக்குழறக் கேட்டான்.

"உனக்கு ஒன்றுமே தெரியாது, இல்லையா? சற்று முன்னால் அவள் - உன் அருமைத் தங்கை கோமதி - இந்த வீட்டின் மாடிப் படிகளில் என்னை மடக்கித் தன் மயக்கு வித்தையைக் காட்டியது கூட உனக்குத் தெரியாது. இல்லையா?" என்றான் விவேகானந்தன் அடித்தொண்டையில்.

"உண்மைதானா, விவேகா? நீ சொல்வது உண்மைதானா? கோமதியா இங்கு வந்தாள்?" என்று கேட்டுக் கொண்டே சடாரென்று வெளியே பாய்ந்து மாடிப் படிகளில் மளமளவென இறங்கித் தலை தெறிக்க ஓடலானான் சாரங்கன்.

"சரியான பைத்தியக்காரன்!" என்று சலிப்புடன் முனகிய விவேகானந்தன் நெடுநேரம் வரை குத்துக்கல் போல் உட்கார்ந்திருந்து விட்டுப் பிறகு சோர்வுடன் எழுந்து ஜமக்காளம் ஒன்றைப் பிரித்துப் போட்டுக் கொண்டு நெடுகக் காலை நீட்டிப் படுத்துவிட்டான்.

எங்கே போகிறோம் என்ற பிரக்ஞையே இன்றிக் கால் போன போக்கில் தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்தாள் கோமதி.

இரவு மணி பதினொன்றுக்கு மேல் ஆகி விட்டது. இதற்கு மேல் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய்ப் பயனில்லை. எனவே அவள் எவ்வித முடிவுமின்றிப் பைத்தியக்காரியைப் போல் நடந்து கொண்டிருந்தாள்.

நெடுந்தூரம் நடந்து சென்ற பின் எங்கோ ஓரிடத்தில் நின்றாள். அவளா நின்றாள்? நடக்கும் சக்தியை இழந்த அவளுடைய கால்கள் தாமாகவே நின்றன. மயங்கிச் செருகும் தன் கண்களை மலர்த்திச் சுற்றிலும் திரும்பிப் பார்த்தாள். என்ன ஆச்சரியம்! விவேகானந்தனின் வீடு இருக்கும் அந்தப் புதிய காலனிக்கு அல்லவா அவள் வந்து விட்டிருக்கிறாள்! அதோ, சுமார் இரண்டு பர்லாங்கு தூரத்துக்கு அப்பால் அந்த வீடு தெரிகிறது.

குழம்பிய சிந்தனையுடன் அந்த வீட்டையே பார்த்துக்கொண்டு நின்றாள் கோமதி. வீங்கித் தடித்திருந்த தன் கன்னத்தைத் தடவிப் பார்த்துக் கொண்ட அவள் கண்களில் பொலபொலவெனக் கண்ணீர் கொட்டியது. நீண்ட பெருமூச்சு விட்ட வண்ணம் அங்கிருந்து வந்த வழியே திரும்பி நடக்கக் கால்களைப் பெயர்த்தாள்.

இச் சமயம், அந்தத் தெருவின் அடுத்த நடைபாதையின் மேல் யாரோ இருவர் தணிந்த குரலில் பேசியவாறு வேகமாக நடந்து செல்வது தெரிந்தது. தெரு விளக்கின் வெளிச்சத்தில் அவர்களைப் பார்த்த கோமதி திடுக்கிட்டாள். கண்களைக் கசக்கிக் கொண்டு மீண்டும் அவர்களைக் கவனித்தாள் சந்தேகமில்லை; இன்று மாலை அந்த ஹோட்டலில் பார்த்த நீலமேகத்தின் கையாட்கள் தாம் அவர்கள்!

இந்த நேரத்தில் அவர்கள் எங்கே போகிறார்கள்? விவேகானந்தனைப் பார்க்-

கத்தான் போவார்கள். சாரங்கனின் வீட்டிலிருந்து விவேகானந்தன் இந்நேரம் தன் இல்லத்துக்கு வந்துவிட்டிருப்பானே? வந்திருக்கலாம். தனியாகவா? தனியாகத்தான் வந்திருப்பான். நீலமேகத்தின் சதித்திட்டம்தான் அவனுக்குத் தெரியாதே. அப்படியானால் இன்னும் கொஞ்ச நேரத்தில் அங்கே ஒரு விபரீதம் நிகழப் போகிறது! ஐயோ, இதை யார் போய்த் தடுப்பது!...

கோமதி ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்தாள். அவ்விரண்டு ஆட்களும் தொலைதூரம் சென்று விட்டனர்.

யோசனைக்கே இடமில்லை. அவர் என்னைத் தொட்டு அடித்து விட்டார். ஆகவே, அவர் இனி எனக்குத்தான் சொந்தம். அவரை எப்படியும் காப்பாற்றியே தீருவேன்.' ஏதோ ஓர் ஆவேசம் வந்தவள்போல் விவேகானந்தனின் வீட்டை நோக்கி விரைந்து சென்றாள் கோமதி.

அவள் இதுவரையில் நின்றிருந்த இடத்துக்கு நேரெதிரே ஒரு புதிய பங்களா இருந்தது. உள்ளே விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. வெளியே ஒரு கார் நின்றிருந்தது. பங்களாவின் வாயிலில் ஒரு போர்டு தொங்கியது. அது ஒரு பிலிம் கம்பெனி. மோகனசுந்தரத்தின் புல்லாங்குழல் இசையோடு தயாராகும் அந்தச் சினிமாப் படத்தைத் தயாரிக்கும் கம்பெனி!

அக்கம்பெனியின் வாசற்படியில் ஒரு குள்ளமான மனிதர் நின்று இவ்வளவு நேரமாகக் கோமதியைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவள் அங்கிருந்து சென்றதும், அவர் சடாரென்று கீழே இறங்கி அவளைப் பின்தொடர்ந்து விரைந்தார்.

"கோமதி!"

வேகமாக நடந்து கொண்டிருந்த கோமதி இந்தக் குரல் கேட்டு அதிர்ச்சியுடன் நின்று திரும்பினாள். "ஹா!... நீங்களா?"

மியூசிக் டைரக்டர் ஜமதக்கினி அவளைப் பார்த்து மெல்லச் சிரித்தார். "நான்தான் கோமதி! உன்னை எங்கெல்லாம் தேடியலைவது? சாரங்கனின் வீடு, நவயுக வாலிபர் சங்கம், உன்னுடைய நாடகக் கம்பெனியின் முதலாளி வீடு, மோகனசுந்தரத்தின் வீடு முதலான இடங்களிலெல்லாம் சுற்றியலைந்து விட்டு இப்போதுதான் இங்கு வந்தேன். என் அலைச்சல் வீண் போகவில்லை" என்று மிக மிக அன்புப் பரிவுடன் சொன்னார்.

கோமதியின் உடல் நடுங்கியது. "என்னை ஏன் நீங்கள் தேடினீர்கள்?" என்று குழறிக்கேட்டாள். தான் வீட்டை விட்டு வெளியேறியதை அறிந்த சாரங்கன் இந்த மனிதரின் வீட்டுக்குப் போய் விவரம் கேட்டிருப்பானோ என்று அவளுக்குச் சந்தேகம்.

"என்ன இப்படிக் கேட்கிறாய் கோமதி? நீதான் என்மீது கோபமாய் இருக்கிறாய். ஆனால் உன்னை என் சொந்த மகளைப் போல் நேசிக்கும் நான் அப்படிக் கோபமாக இருக்க முடியுமா?" என்று கூறிக் குளுமையாகச் சிரித்தார் ஜமதக்கினி.

"மிக்க நன்றி சார்! நான் ஓர் அவசர காரியமாகப் போக வேண்டும். நாளைக்கு வந்து உங்களைச் சந்திக்கிறேன். தயவு செய்து மன்னியுங்கள்" என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்து போகத் திரும்பினாள் கோமதி.

"சற்று நில், கோமதி! விஷயத்தைக் கேட்கவில்லையே!" என்று புன்சிரிப்புடன் கூறியவாறு அவள் முன்னால் சென்று நின்றார் ஜமதக்கினி.

"என்ன சார், விஷயம்?"

"நீ என் வீட்டுக்கு இப்போது வர வேண்டும்."

"டாக்டர் ராமநாதனும் அவரது மனைவி சுந்தரியம்மாளும் உன்னை ஏதோ ஒரு முக்கிய காரியமாகப் பார்க்க என் வீடு தேடி வந்தார்கள். அவர்களுக்காக உன்னை அழைத்து வரப் புறப்பட்டேன். இப்போது அவர்கள் என் வீட்டில்தான் இருக்கிறார்கள்."

பெரு வியப்படைந்த கோமதி ஒருகணம் சிந்தித்தாள்: 'அவர்கள் ஏன் என்னைப் பார்க்க வந்தார்கள்?...சரி; இதுவும் ஒரு வகையில் நல்லதுதான். விவேகானந்தனுக்கு நேரவிருக்கும் ஆபத்துச் செதியை அவர்களிடமே போய்ச் சொல்லி விடலாம். அதற்கு அவர்கள் உடனே தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள்'—தலைநிமிர்ந்த கோமதி, "சரி, சார்! வாருங்கள் போவோம்" என்றாள்.

இருவரும் சென்று காரில் ஏறிக் கொண்டதும் கார் புறப்பட்டுச் சென்றது.

பதினைந்து நிமிஷத்தில் அவர்கள் திருமூர்த்தி நகரை அடைந்தனர். முன்னால் நடந்த கோமதி தயங்கித் தயங்கி வீட்டினுள் காலெடுத்து வைத்தாள். பின்னால் வந்த ஜமதக்கினி திடீரென்று அவளைப் பிடித்து உள்ளே தள்ளிக் கதவைப் படீரென்று இழுத்துச் சாத்தினார்.

"அயோக்கிய நாயே! உன்னால் எனக்கு ஐம்பதாயிரம் ரூபாய் நஷ்டம். என் தொழிலே குட்டிச் சுவராகிவிட்டது. அதற்கு உன்னைப் பழி வாங்கியே தீருவேன்!" என்று சிம்மம் போல் கர்ஜித்தபடி கதவை இறுக்கிப் பூட்டிவிட்டு, சரேலெனக் காரில் போய் அமர்ந்து எங்கோ வெகு வேகமாகச் செலுத்திக் கொண்டு சென்றார் ஜமதக்கினி. (தொடரும்)




மிக அழகிய . . .
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!



குடும்பத்தில்
உள்ள
ஒவ்வொருவருக்கும்
நல்லது
MARGO
HYGIENIC TOILET
கிருமி நாசினியான வேப்ப எண்ணெயிலிருந்து தயாரிக்கப்பட்டதும், மனோகரமான மணம் தருவதுமான மார்கோ மிக மெல்லிய சருமமுடையவர்களுக்கும் உத்தமமானது. மார்கோ சோப்பின் இளகும் சத்து நிறைந்த நுரை சரீரத்தின் துவாரங்களில் ஆழமாகப் புகுந்து சென்று, சருமத்திலுள்ள எல்லா அழுக்குகளையும் போக்கி சுத்தப்படுத்துகிறது. இதன் தயாரிப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் சோதிக்கப்பட்டுள்ள மார்கோ சோப் உங்களுக்கு அதிக சுகத்தையும், நாள்முழுதும் அதிகத் தூய்மை உணர்ச்சியையும் அளிக்கிறது.
மார்கோ சோப்
குடும்பத்துக்கு உத்தமமான சோப்
தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிட்., கல்கத்தா-29
தென்னிந்திய ஆபீஸ். 5/149, பிராட்வே, சென்னை-1


நார்டனையோ
அட்மிரலையோ தேர்ந்தெடுங்கள்





அவை சுலபமான
கட்டுப்பாட்டிற்கு ஏற்றவை
அவைகளின் தூளுக ஒழுங்காக
இயக்கும் போர்க்
அமைப்புகளுக்கு நன்றி

ஹிந்த் சைக்கிள்ஸ் லிமிடெட், 250 ஒர்லி,
பம்பாய்-18



அம்மன் பணம்

கே. வெங்கட்ராமன்

மாலைகள் கட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான் முத்துப் பண்டாரம். அன்று மாதாந்திர வெள்ளிக்கிழமை. வண்டி மறிச்சியம்மனின் கோவிலில் கூட்டம் பிதுங்கிக்கொண்டிருந்தது. மந்திரித்துத் தீர்த்தம் தெளிக்கவென்று சீர் தட்டிய குழந்தைகளுடனும் நோயுற்ற குழந்தைகளுடனும் வந்திருந்த தாய்மார்கள் அம்மனின் அருள் நோக்கும் பார்வைக்காகக் கண் பதித்துக் காத்திருந்தனர்.

"ஐயா கூப்பிடறாங்க!" என்று முத்துப் பண்டாரத்தை அழைத்தான் கோவில் நிர்வாகி ராஜரத்தினத்தின் சேவகன்.

"இதோ வரேன்!" என்று கூறிவிட்டு அரைகுறையாகக் கட்டியிருந்த மாலையைக் கட்டத் தொடங்கினான் முத்துப் பண்டாரம்.

வண்டி மறிச்சியம்மன் கோவிலில் விசேஷ நாட்களில் காணிக்கைகளாக நிறையப் பணம் உண்டியலில் விழும். அதைத் தவிர மக்கள் அரளிப்பூ மாலைகளையும் மற்ற மாலைகளையுமே அதிகமாகக் கவிதிர்க்கும் கண்கண்ட தெய்வமான அம்மனுக்குக் காணிக்கையாகச் செலுத்துவார்கள். இன்ன மாலைக்கு இவ்வளவு பணம் என்று விலையை நிர்ணயித்திருந்தது கோவில் நிர்வாகம். காணிக்கை செலுத்துவோர் கோவில் நிர்வாகியிடம் பணத்தைச் செலுத்தி ரசீதைப் பெற்று, அதை முத்துப் பண்டாரத்திடம் கொடுக்க வேண்டும். அவன் அந்த ரசீதில் கண்டபடி விலையுள்ள மாலைகளை அவர்களுக்குக் கொடுப்பான். இதனால் கோவிலுக்கும் வருமானம் வந்தது; முத்துப் பண்டாரத்துக்கும் வருமானம் வந்தது.

இன்று வெள்ளிக்கிழமையல்லவா? ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் முத்துப் பண்டாரம் தான் மாலை கொடுத்து வாங்கிய ரசீதுகளை எல்லாம் நிர்வாகியிடம் கணக்குக்காட்ட வேண்டும். கோவிலுக்கான தன்னுடைய போக மீதி மாலைகள் விலையை அவர் அவனிடம் அளிப்பார். வாராந்திரச் சம்பளம் போல் அந்தப் பணம் முத்துப் பண்டாரத்துக்குக் கிடைத்து வந்தது.

இன்றும் அதற்காகத்தான் முத்துப் பண்டாரத்தைக் கோவில் நிர்வாகி ராஜரத்தினம் அழைத்திருந்தார்.

வெளியே பத்து நாட்களாக விடாது பெய்த மழை இப்போது என்றையும் விட அதிகமாகக் கொட்டிக்கொண்டிருந்தது.

மாலைகள் கட்டி முடிந்ததும் துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டான் முத்துப் பண்டாரம். எல்லா ரசீதுகளையும் ஒன்று விடாமல் சேகரிக்கக் கணக்குப் பார்த்து எடுத்துக் கொண்டான். கோவில் நிர்வாகி ராஜரத்தினத்தைக் காணச் சென்றான்.

அவரது அறையில் கூட்டமாக இருந்தது. அர்ச்சனை டிக்கட் வாங்குவோரும், மாலைக்கு ரசீது வாங்குவோரும், பிரசாதத்துக்குப் பணம் செலுத்துவோருமாக அங்கு நிறைய மக்கள் குழுமியிருந்தனர். அவர்களிடையே

முடுக்கிவிட்ட இயந்திரமாக வேலை செய்து கொண்டிருந்தார் ராஜரத்தினம்.

இடையே ஒரு முறை தலையை நிமிர்ந்தவர் முத்துப் பண்டாரம் நிற்பதைக் கண்டார்.

"வாவேய், முத்துப் பண்டாரம்!" என்றார் அவர்.

முத்துப்பண்டாரம் இரண்டு கைகளையும் எடுத்து அவருக்கு ஒரு கும்பிடு போட்டான்.

"கணக்கு பார்த்தீராவேய்! எம்புட்டு ஆச்சு?" என்று கேட்டார் ராஜரத்தினம்.

"உங்களுக்குத் தெரியாத கணக்கா?" என்றான் முத்துப் பண்டாரம்.

"சரிதான்வேய்! ரசீதெல்லாம் கொண்டாந்திருக்கிறீரா! இங்ஙனே வையும்!"

தன் மடியில் கட்டிக் கொண்டு வந்த ரசீதுகளைப் பத்திரமாக எடுத்து அவருடைய மேஜை மீது வைத்தான் முத்துப் பண்டாரம்.

"நாப்பத்தெட்டு ரூபா எழுபத்தஞ்சு நயா பைசா ஆவுதுவேய்!"

"சரிங்க!" என்றான் முத்துப் பண்டாரம்.

பணத்தை எடுத்து எண்ணத் தொடங்கினார் ராஜரத்தினம்.

"சாமி! எம்புட்டு நேரம் நிக்குறது! அர்ச்சனை டிக்கட் ஒன்று கொடுத்திடுங்களேன்!" என்றான் கூட்டத்தில் ஒருவன்.

இராஜரத்தினத்தின் ஒரு கை பணத்தை எண்ணியபடி யிருக்க மற்றொரு கை அர்ச்சனை டிக்கட்டை வழங்கியது.

"அப்படியே முக்கால் ரூபாய் மாலைக்கும் ஒரு ரசீது கையோடு கொடுத்திடுங்க!"

"புளியோதரை ரெண்டு கட்டி எவ்வளவுங்க ...?"

"வேய், முத்துப் பண்டாரம்! பிடியும் இந்தப் பணத்தை! நாப்பத்தெட்டு ரூபாயும் எழுபத்தைஞ்சு நயா பைசாவு மிருக்குது! வெள்ளிக்கிழமை வந்திச்சுன்னா மனுஷன் மூச்சு விடக்கூட முடியலே! பிராணன் போகுது!" என்றார் ராஜரத்தினம்.

"அப்படிச் சொல்லாதீங்க, ஐயா! இது கோயிலு! தெய்வ காரியம். அவள் கொடுத்த மூச்சு!" என்று யாரோ கும்பலிலிருந்து கூறினார்கள்.

பணத்தைப் பெற்றுக் கொண்டு கூட்டத்தை விட்டு வெளியே வந்தான் முத்துப்பண்டாரம்.

"வேய், முத்துப்பண்டாரம்!" என்று கூட்டத்திலுள்ளிருந்து கத்தினார் ராஜரத்தினம்.

"என்னங்க?" என்று பதில் குரல் கொடுத்தான் முத்துப் பண்டாரம். அவர் ஏன் அழைக்கிறார் என்பது அவனுக்கா தெரியாது?

"பணம் கிடைச்சதும் போயிட்டீரேவேய்! வழக்கம் மறந்து போச்சா?"

"கூட்டம் எல்லாம் போகட்டுமுங்க!" என்றான் முத்துப் பண்டாரம்.

"மறந்துப்பிடாதேயும்வேய்!"

கடையில் வந்து உட்கார்ந்து கொண்டான் முத்துப் பண்டாரம். மாலை வாங்க வந்தவர்களிடம் ரசீதுகளை யெல்லாம் பெற்று மாலைகளைக் கொடுத்தனுப்பி விட்டுத் தான் வாங்கி வந்த பணத்தைச் சரிபார்க்கத் தொடங்கினான் அவன்.

அவன் கண்களை அவனால் நம்பவே முடியவில்லை. அவனுக்குத்தான் எண்ணத் தெரியவில்லையா? அல்லது ராஜரத்தினம் தான் ஒரு பத்து ரூபாய்த் தாளை அதிகமாகக் கொடுத்து விட்டாரா?

மீண்டும் மீண்டும் ஒவ்வொரு நோட்டையும் தட்டி தட்டி எண்ணிப் பார்த்தான் முத்துப் பண்டாரம். பொய்யில்லை. உண்மைதான். அவன் கண்கள் அவனை ஏமாற்றவில்லை. நாற்பத்தைந்து ரூபாய்க்கு நான்கு பத்து ரூபாய் நோட்டுகளும் ஓர் ஐந்து ரூபாய் நோட்டு மிருக்க வேண்டியதற்குப் பதிலாக ஐந்து பத்து ரூபாய் நோட்டுகளும் ஓர் ஐந்து ரூபாய் நோட்டுமல்லவா இருக்கிறது? ஐம்பத்தைந்து ரூபாய்! நாற்பத்தைந்து ரூபாய்க்குப் பதிலாக ஐம்பத்தைந்து ரூபாய்!

முத்துப் பண்டாரம் ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கையில் எடுத்துக் கொண்டான். அதை ராஜரத்தினத்திடம் சேர்ப்பித்துவிட வேண்டும் என்று அவன் எண்ணினான்.

"வேய், வழக்கம் மறந்து போச்சா?" என்று ராஜரத்தினம்கேட்டது முத்துப்பண்டாரத்தின் செவியினுள் கணீரென்று ஒலித்தது.

இந்த ராஜரத்தினம் கடந்த ஆறாண்டுகளாக வண்டி மறிச்சியம்மன் கோயில் டிரஸ்டியாக இருக்கிறார். அன்று ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு 'உண்டைக் கட்டி'க்குக் கோவிலே கதி என்று கிடந்தவரா இந்த மனிதர் ...?

ஒரு வியாபாரமுமில்லை, லாபமுமில்லை! மனிதனுக்குப் பணம் எங்கிருந்துதான் வந்ததோ! வண்டிமறிச்சியம்மன் கோவில் டிரஸ்டியானதும் ஆனார். மேலப்பாளையம் தெருவில் ஒரு வீட்டையல்லவா கட்டி முடித்துவிட்டார்!

அம்பாசமுத்திரம் ஊராருக்கெல்லாம் ஓர் உண்மை தெரிந்தது. அந்த வீடு அம்மனுடைய சொத்து. அவளுடைய பொருள். அவளுடைய பணம். அவளை மோசம் செய்து, அவளை வஞ்சித்து ராஜரத்தினம் நாளடைவில் சிறுகச் சிறுகக் கோயில் சொத்தைச் சுரண்டித் தம் வீட்டைக் கட்டி விட்டார்! வருகிற புதன்கிழமை யன்று புதுமனை புகு விழாவும் நடக்கப் போகிறது!


பத்து நாட்களாகப் பெய்து கொண்டிருந்த மழைக்கு இன்று என்னதான் இப்படி ஆவேசம் வந்ததோ? காலையிலிருந்து கொட்டுக் கொட்டென்று கொட்டுகிறதைப் பார்த்தால் இந்த உலகத்தின் அநியாயங்களைக் கண்டு வண்டி மறிச்சியம்மனே குலுங்கிக் குலுங்கி அழுவது போலல்லவா இருக்கிறது!

முத்துப் பண்டாரம் அம்மனைப் பார்த்தான். அம்மன் அவனைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது. ஏன் சிரிக்கிறாள்! உனக்காகத் தான் இந்தப் பணத்தை அதிகமாகக் கொடுத்திருக்கிறேன் என்று சிரிக்கிறாளா?

முத்துப் பண்டாரத்தின் பொல்லாத மனத்தில் ஒரு நப்பாசை முளைவிட்டது. இந்தப் பத்து ரூபாயைத் தானே வைத்துக் கொண்டால் என்ன என்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று.

ராஜரத்தினம் கோயில் சொத்தில் வீடே கட்டிவிட்டார்! நினைவு தெரிந்த நாளிலிருந்து அவனும்தான் மாலைகள் கட்டிக் கொண்டிருக்கிறான். என்ன பிரயோசனம்! 'பிறக்குமா,

துப்பு எங்கே ?



பிறக்குமா' என்று தவங்கிடந்து பெற்ற குழந்தை கோமதியின் தாமரை இதழ் போன்ற காதுகளுக்கு அவன் இன்னமும் ஒரு கம்மல் கூடச் செய்து போடவில்லையே !

அந்தப் பத்து ரூபாவைத் தானே வைத்துக் கொள்வதென்று தீர்மானித்துக் கொண்டான் முத்துப் பண்டாரம். வீட்டில் அவன் மனைவி பாக்கியம் அவ்வப்போது கிடைக்கும் இரண்டனா நாலணாக்களை ஒரு மண் உண்டியலில் போட்டு வைத்திருக்கிறாள். கையிலிருக்கும் பத்து ரூபாயுடன் அவற்றையும் சேர்த்தால் இருபது. இருபத்தைந்து ரூபாய் தேறும். நல்ல 'பாஷ'னில் கோமதிக்குக் கம்மல் வாங்கிவிட வேண்டும். இன்றே வாங்கிவிட வேண்டும் ! வெள்ளிக்கிழமை நல்லநாள்.

கையிலிருந்த பணம் நெருப்பாகச் சுட்டது முத்துப் பண்டாரத்துக்கு. அம்மனின் கோபத்துக்கு ஆளாகிவிட்டால்? ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு என்றிருக்கும் கோமதிக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால்?

'ஒன்றும் நேராது' என்று அவனை அடக்கியது மனம். ராஜரத்தினம் கோயில் பணத்தைக் கொள்ளையடித்துத்தானே வீடு கட்டியிருக்கிறார் ! அதை இந்த வண்டிமறிச்சியம்மன் என்ன செய்து விட்டாள்? ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் மாலைகளுக்குப் பணம் கொடுக்கிறபோது முத்துப் பண்டாரத்தின் வயிற்றிலடித்து அந்த ஏழையின் இரத்தத்தை உறிஞ்சாத குறையாக இரண்டு ரூபாயை வாரந்தோறும் 'வழக்கம்' போல் பெறுகிறாரே. அதை இந்தத் தெய்வம் கேட்டதா?

'கேட்கும் கேட்கும் ! தெய்வம் நின்று தான் கேட்கும் !' என்றது முத்துப்பண்டாரத்தின் அறிவு.

'அப்போது பார்த்துக் கொள்ளலாம் !' என்று அறிவை அடக்கியது ஆசை.

பையனிடம் கடையைப் பார்த்துக்கொள்ளும்படி கூறிவிட்டுத் தாழங் குடையை எடுத்துக் கொண்டு கிளம்பினான் முத்துப் பண்டாரம்.

"ஐயா !"

வானத்துக்கும் பூமிக்குமாகச் சாட்டையாக வீசிக் கொண்டிருந்த மழையில் தன்னை அழைப்பது யார் என்று பார்த்தான் முத்துப் பண்டாரம்.

கோழிச் சந்தைக்கருகில் ஒரு பெண்மணி நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு வயது இருபதோ, இருபத்தைந்தோ இருக்கலாம். கழுத்தில் தாலிக் கயிறுமட்டும் மங்கலத்தின் பவித்திரத்தைக் காட்டுவது போல் கிடந்தது !

"என்னம்மா ?" என்று கேட்டான் முத்துப் பண்டாரம்.

"என் குழந்தைக்கு நாலுநாளா அம்மை போட்டுக் கண் திறக்காமல் கெடக்குது !" என்றாள் அவள்.

"அம்மனுக்கு வேண்டிக்க ! நாளைக்கே இறங்கிடுவா !" என்றான் முத்துப் பண்டாரம்.

"நான் என்ன வேண்டிக்கிட்டாலும் அவ இறங்கமாட்டா ! என் மகளைப் பழி தீர்க்கத் தான் அவ இப்போ வந்திருக்கா !" என்று கூறும்போது அந்தப் பெண்ணுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. கண்கள் கண்ணீரைச் சொரிந்தன.

"அதென்ன, அப்படித் தீர்மானமாகச் சொல்றே நீ !"

"ஆமாம் ! முன்னே ஒரு வாட்டி எம் பொண்ணு ஜுரம்வந்து மூச்சு, பேச்சில்லாமல் கிடந்தா. போயிட்டான்னே தோணிச்சு ! அம்மன் உண்டியிலே பத்து ரூபாய் செலுத்துறதா வேண்டிக்கிட்டேன். மறுநாளே குணமாயிடிச்சு !" என்றாள் அவள்.

"இப்பவும் அதுமாதிரி வேண்டிக்க !" என்றான் முத்துப் பண்டாரம்.

"அந்தப் பிரார்த்தனையை நான் செலுத்தலே. அதற்காகச் சேர்த்த பிரார்த்தனைப் பணத்துக்குக்கூடக் கொஞ்சம் ரூபாய் போட்டு எம் பொண்ணுக்குக் கம்மல் வாங்கிப் போட்டு அழகு பார்த்தேன். அது இந்தத் தாய்க்கு ஆகலே. எம் பொண்ணு உடம்பு பூராவும், கம்மல்மாதிரி முத்து முத்தாப் போட்டிட்டா !" என்றாள் அவள்.

அதைக் கேட்கவே பரிதாபமாக இருந்தது முத்துப் பண்டாரத்துக்கு.

"இப்போ என்ன செய்ய வேணும்?" என்று கேட்டான் அவன்.

முந்தானையில் முடிந்திருந்த கம்மல்களை எடுத்து அவனிடம் நீட்டினாள் அப்பெண்.

கல்கி

சந்தா விகிதம்

	ஒரு வருஷம் ரூ. ந பை	ஆறு மாதம் ரூ. ந பை
இந்தியா இலங்கை	15—00	7—50
பர்மா மலேயா வெளி நாடுகள்	18—00	9—00

தனிப் பிரதி விலை 30 நயா பைசா

சந்தா தொகை முன்னதாக அனுப்பப்பட வேண்டும். வி.பி.பி. கிடையாது. இலங்கை நேயர்கள் மட்டும் வி.பி.பி. மூலம் சந்தா தொகையைச் செலுத்தலாம்.

மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை-10

இரண்டு கம்மல்களும் புது மெருகு அழியாமல் ஒளி வீசிப் பளபளத்தன.

"இதுவே இருபத்துமூணு ரூபாய்! இதை எடுத்துக்கிட்டுப் பத்து ரூபாய் கொடுங்க, போதும். அதை அம்மனுக்குக் காணிக்கையா செலுத்தினால்தான் எனக்கு நிம்மதி. என் பொண்ணும் பிழைக்கும்!" என்றான் அவன்.

தேடப்போன மூலிகை காலில் சுற்றியது போலிருந்தது முத்துப் பண்டாரத்துக்கு. அவன் எதை வாங்கப் போகிறானோ, அது அவனைத் தேடி வருகிறது. அதுவும் குறைந்த விலையில்! இது அம்மனின் கருணை அல்லவா? கம்மல்களைக் கையில் வாங்கிப் பார்த்தான் முத்துப் பண்டாரம். தங்கத்தில் செய்தது தான் அது. கண்டிப்பாக விலை இருபது ரூபாய்க்கு மேல் இருக்கும். பத்து ரூபாய்க்குக் கிடைப்பதென்றால் அது கோமதியின் அதிர்ஷ்டம்தான்.

பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்துவிட்டு அந்தக் கம்மல்களைப் பெற்றுக் கொண்டான் முத்துப் பண்டாரம்.

"உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டுங்க!" என்று கூறியபடி பத்து ரூபாயைப் பெற்றுக் கொண்டான் அவன். பிறகு பய பக்தியுடன் சென்று அம்மன் உண்டியில் போட்டுவிட்டு அங்கேயே அவள் உட்கார்ந்து தன்னைப் பார்த்துச் சிரிப்பதைக் கண்டான்.

அம்மன் பணம் அம்மனிடமே சேர்ந்து விட்ட அதிசயம் அவனை ஒரு நிமிடம் நிலை தடுமாற வைத்தது.

மழை இன்னும் அதிகமாகப் பெய்துகொண்டிருந்தது முன்னைக் காட்டிலும். அகஸ்தியர் கோவிலைத் தாண்டி வேளாளர் தெருவைக் கடந்து, ராணி பள்ளி திரும்ப அவன் மேலப்பாளையத் தெருவினுள் காலடி எடுத்து வைத்ததும் வானமே இடிந்து விழுகிறமாதிரி மழை பேய் மழையாகக் கொட்டியது. 'சடார் சடார்' என்று மின்னல்கள் கண்ணைப் பறிக்கும்படி வெட்டின. 'கடகட' வென இடித்தது.

காதே செவிடாகும்படியான அந்த இடி இடித்து ஓய்ந்ததும் பயத்தால் மூடிக் கொண்ட இமைகளைத் திறந்து பார்த்தான் முத்துப் பண்டாரம். தன் கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை.

ராஜரத்தினம் கோயில் சொத்தைத் திருடி, சுரண்டிக் கட்டிய வீடு இடிக்குப் பலியாகித் தரையோடு தரையாய் விழுந்து கிடந்தது.

அதைக் கண்டு முத்துப் பண்டாரத்தின் உடல் தலையிலிருந்து கால்வரை நடுங்கியது. ராஜரத்தினம் கோயில் சொத்தில் கட்டிய வீடு அவன் கண்ணெதிரிலே தரை மட்டமாகப் போய் விட்டது. வண்டிமறிச்சியம்மன் அவசரப்பட மாட்டாள். நின்று நிதானித்து நியாயம் வழங்க அவள் எப்போதுமே தவறியதில்லை!

முத்துப் பண்டாரம் வீட்டினுள் அடி எடுத்து வைத்ததும் அங்கே அவன் மனைவி குழந்தை கோமதியை அடித்துக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டான்.

"குருவி அலகாலே சேர்க்கிறமாதிரி காலணாவும் அரையணாவுமாகச் சேர்த்த பணத்திலே வாங்கிப் போட்டதை ஒரு நிமிஷத்திலே தொலைச்சுட்டு வந்து நிக்கிறியே மூதி!" என்று கத்தினாள் மனைவி பாக்கியம் குழந்தையிடம்.

"என்ன பாக்கியம்! கோமதி என்னத்தைத் தொலைச்சிருக்கு?" என்று கேட்டான் முத்துப்பண்டாரம் வியப்போடு.

அவனைக் கண்டதும் 'ஓ'வென அலறினாள் பாக்கியம். 'உண்டியலிலே சேர்த்த பணம் இருபத்து மூணுரூபாயும் சொச்சமும் இருந்துதுங்க. அதிலே இந்தப் பொண்ணுக்குக் கம்மல் வாங்கிப் போட்டேன் ஆசையாய். இவ ரோட்டிலே போய் நின்னுக்கிட்டு வேடிக்கை பார்த்துக் கிட்டிருந்தாளாம். எவளோ போய்ப்பய ஒருத்தி வந்து இவகிட்டே எதை எதையோ பேசிக்கிட்டே கம்மல் ரெண்டையும் கழட்டிக்கிட்டுப் போயிட்டாளாம்."

முத்துப் பண்டாரத்தின் கண்களில் கண்ணீர் ததும்பியது. ராஜரத்தினம் செய்த அநியாயத்துக்குப் பழி தீர்த்துக் கொண்ட அம்மன் தான் அந்தப் பெண்மணியாய் வந்து முத்துப் பண்டாரத்தின் பொருளை அவனிடமிருந்தே பறித்து, அவனிடமே விற்றுத் தன் பணத்தைத் தன்னிடம் சேர்த்துக் கொண்டு விட்டாளா?


இரு கைகளையும் சிரம்மேல் கூப்பியபடியே வண்டிமறிச்சியம்மன் ஆலயம் இருந்த திக்கை நோக்கித் தண்டனிட்டான் முத்துப் பண்டாரம்.

பிறகு தன் மடியில் பொதிந்து வைத்திருந்த கம்மல்களை எடுத்துப் பாக்கியத்திடம் காட்டினான் அவன்.

யாவற்றையும் பாக்கியத்திடம் கூறிவிட்டு, அம்மன் கோவிலில் அந்தப் பெண்மணியைக் காண ஓடினான் முத்துப் பண்டாரம். அவளைக் காணவில்லை. ஆனால் அம்மன்தான் சிரித்தபடி சிலையாக நின்றுகொண்டிருந்தாள்!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10. Managing Editor, T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



S. 268-X32 TM

இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு